# கௌசாம்பி மன்னனும் கலிமதுரைப் பெருமானும்

[இருபெரு நாடகங்கள்]

இயற்றியவர் :

திரு S. ருத்திரபதியார் M. A.,

தமிழ் விரிவுரையாளர், மத்தியக் கல்லூரி, பெங்களூர்.

அகில இந்தியப் பதிப்பகம்

கும்பகோணம் — பெங்களூர்

பதிப்புரிமை] 1947 [விலை ரூ. 1-12-0

First Impression

January 1947

The T. V. C. Press, Madras, for Q. H. Gl. 6906—500-C.

# முகவுரை

கௌசாம்பி மன்னனும், கலிமதுரைப் பெருமானும் என்னும் இச்சிறு நாடக நூல் இரு நாடகங்களை யுடைத்து. முதற்கண் விளங்கும் நாடகக் கதை கோங்குவேள் மாக்கதை என்னும் பெருங்கதையினின்றும் எடுக்கப்பெற்றது. இரண்டாவதாக விளங்கும் நாடகக் கதை, திருவிளையாடற் புராணத்தில் சிவபெருமான் மாமனாக வழக்குரைத்த படலத்தினின்றும் எடுக்கப்பெற்றது. பள்ளி மாணவர்களின் நன்மை கருதி இந்த இரண்டு கதைகளையும் நாடக ரூபத்தில் செய்திருக்கின்றேன். தமிழ் மொழியில், வசன ரூபத்தில் நாடகங்கள் மிகக் குறைவு என்று ஏனைய மொழியாளர்கள் கூறும் குறையைப் போக்க முற்படும் தமிழ்ப் பெரியார் பலர். இராமன் சேதுபந்தனஞ் செய்யுங்கால் ஓர் அணில் செய்த உதவி போல, யானும் இம்மாதிரி சிறு உதவிகள் புரிந்து அக் குறையைப் போக்க முற்பட்டுளேன். இச்சிறு நூலையுந் தமிழுலகம் ஆதரிக்குமானால், எளியேனுக்கு ஊக்கமளித்ததாக எண்ணி மகிழ்வேன். ஆன்றோர் ஆதரவு,

> தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்.''

என்றபடி, மேலும் மேலும் இம்மாதிரியான முயற்சிகளில் அடியேனை ஈடுபடுத்த ஏதுவாகும்.

இத்தகைய சிரிய துறையில் எனது சிற்றறிவைப் புகுத்திய சிற்றம்பலத்தானை மனமொழி மெய்களால் வழுத்துகிறேன். இம்மாதிரியான நூலொன்று வேண்டும் எனத் தூண்டியும், ஊக்கியும், உதவியும் வரும் என்

அன்பர் திரு N. S. வாசன் அவர்கட்கு என் நன்றி உரிய தாகுக. நாடக ரூபத்தில் நூல் வெளிவந்தால் நலம் பயக்கும் எனக் கூறிய என் நண்பர் திரு R. வேங்கடராம ஐய்யர் அவர்கட்கும் எனது நன்றியுரியது. எனக்கு ஒய்வின்மை யால், யான் எழுதிய இந்நூலை அச்சுக்கனுப்ப பெரிய எழுத்தில் பிரதி செய்துதவிய என் நண்பரும், பெங்களூர் தண்டு, அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளருமாகிய திரு K. வேங்கடாசலம் M.A., அவர்களுக் கும், என் நண்பரும் பெங்களூர் நகர் கோட்டை உயர் தரப் பள்ளித் தமிழாசிரியருமாகிய திரு வித்துவான் K. வேங்கடசுப்பிரமணியன் அவர்கட்கும் என்னுள மார்ந்த நன்றியுரியதாகுக. அவர்கள் புரிந்த உதவி காலத்தாற் செய்ததாகும்.

பெங்களூர்
11—11—46

இங்ஙன்,
S. ருத்திரபதி.

# கௌசாம்பி மன்னன்

# கதைச் சுருக்கம்

கௌசாம்பி நகரத்தில் சதானிகன் என்னும் அரசன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் மனைவி மிருகாபதி கருவுற்றாள். பூரண கருப்பவதியாக இருக்கும்போது செவ்வாடை யொன்றைப் போர்த்திக்கொண்டு நிலா முற்றத்தில் அவள் தூங்குகையில், அவளைத் தசைத் தொகுதி யென்று கருதி, ஒரு கண்டபேரண்டப் பறவை அவளை எடுத்துச் சென்று, விபுலகிரிச் சாரலில் வைத்துத் தின்ன ஆரம்பித்தபோது மிருகாபதி விழித்துக்கொண்டாள். பறவை பயந்து சென்றுவிட்டது. அவள் அங்கே ஓர் ஆண் மகனைப் பெற்றாள். அம்மலைச் சாரலில் தவம்புரிந்து கொண்டிருந்த சேடக முனிவர், மிருகாபதியைப் பார்த்துத் தம் மகளென்றறிந்து அவளையும், அவள் மகனையும் அங்கே இருக்கும்படி செய்தார். மிருகாபதியின் மகன் சூரியோதயத்தில் பிறந்தமையால், அவனுக்கு உதயணன் என்ற பெயர், சேடக முனிவரால் சூட்டப்பட்டது. பிரமசுந்தர முனிவர் மகன் யூகியும் உதயணனும் அங்கே ஒன்றாக வளர்ந்து ஒன்றாகக் கலைபயின்றார்கள். உதயணனுக்குப் பிரமசுந்தர முனிவர் கோடபதி என்ற ஒரு யாழைப் பரிசாக வழங்கினார். அவன்றன் யாழிசையால் மயங்கிய ஒரு தெய்வயானை, "யான் உண்ணுமுன் நீ உண்பாயாயின் உன்னை விட்டு நீங்குவேன்," என்ற நிபந்தனையுடன் அவனுக்குப் பணி செய்ய முற்பட்டது. அதற்கு உடன்பட்டு அவ் யானையைத் தன்னுடன் வைத்திருந்தான் உதயணன்.

சேடகன் மகன் விக்கிரன் துறவு பூண விரும்பி, தனது வைசாலி நாட்டு அரசுரிமையை உதயணனுக்குக் கொடுத்துத் தவஞ்செய்யப் புறப்பட்டுக் காட்டுக்குச் சென்றான். பிறகு உதயணன் தன் தந்தையின் கௌசாம்பி நாட்டு அரசுரிமையையும் பெற்றான். ஒரு நாள் யானைக்கு உணவு அளிக்கு முன் உதயணன் மறதியால் தான் முந்தியுண்டான். தெய்வயானை

அவனை விட்டு நீங்கிற்று. அதைத் தேடிக்கொண்டு உதயணன் யாழுங் கையுமாக அலைந்தான். உச்சைனி அரசன் பிரச்சோதனன் தனக்கு உதயணன் கப்பங் கட்டவில்லை யென்ற காரணத்தால், ஒரு மாய யானையைக் கொண்டு, காட்டில் திரிந்துகொண்டிருந்த உதயணனைப் பிடிப்பித்துச் சிறையில் அடைத்தான். இதை யறிந்த யூகி, "மாய யானையைக்கொண்டு என்னுயிர்த் தோழன் உதயணனைப் பிடிப்பித்துச் சென்றவன் மகளை அவன் அறியாமற் கொண்டுவரச் செய்வேன்," என்று சூளுரைத்து, தான் இறந்ததாகப் பொய்ச் செய்தியை எங்கும் பரவச்செய்து, வேற்று வடிவங்கொண்ட பல வீரர்களுடன் உதயணனைச் சிறைவீடு செய்தது மாத்திரமல்லாமல், பிரச்சோதனன் மகள் வாசவதத்தையையும் உதயணன் ஒரு யானை மேல் ஏற்றி வருமாறு செய்தான்.

உதயணன் வாசவதத்தையுடன் வந்து சயந்தி நகரத்தில் தங்கி அவளை மணந்தான். பிறகு யூகி அங்குவந்து, உதயணன் வாசவதத்தையோடு இன்புற்றுக் காலங்கழிப்பதையே கருமமாகக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து, மறுபடியும் ஒரு சூழ்ச்சிசெய்து, உதயணனையும் வாசவதத்தையையும் பிரித்து வைத்து, உதயணனுக்கு மகத நாட்டரசன் தருசகன் செல்வி பதுமாவதியை மணம் புரிவித்தான். மகத நாட்டரசன் உதவியாலும், தன் தம்பியர் பிங்கல, கடகர் உதவியாலும் உதயணன் மீண்டும் கௌசாம்பி யடைந்து, அதைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்த ஆருணி என்னும் அரசனை வென்று, சிங்காதனம் ஏறினான்.

கௌசாம்பியில் உதயணனுக்கு வாசவதத்தையின் மூலம் நரவாணதத்தனும், பதுமாவதியின் மூலம் கோமுகனும் பிறந்தனர். நரவாணதத்தன் வித்தியாதர சக்கரவர்த்தியானான். உதயணன் துறவு பூண்டு இறைவனடி சேர்ந்தான். அவன் மனைவியரும், மந்திரிமாரும் சில காலத்தின்பின் அவ்வாறே இறையடி சேர்ந்தனர்.

# கௌசாம்பி மன்னன்

---

## நாடக பாத்திரங்கள்

சேடக மன்னன்—வைசாலி நாட்டரசன்

தனமித்திரன்—சேடக மன்னனின் மைந்தன்

விக்கிரன்—சேடக மன்னனின் கடைசி மகன்; அரச பாரத்தை ஏற்றவன்

சதானிகன்—கௌசாம்பி அரசன்; உதயணன் தந்தை

பிரமசுந்தர முனிவர்—யூகியின் தந்தை

உதயணன்—கதாநாயகன்; சதானிகனது புதல்வன்; சேடக மன்னன் பேரன்

யூகி—உதயணன் மந்திரியும் உயிர்த்தோழனும்

இடவகன், வயந்தகன், உருமண்ணுவா — உதயணன் மந்திரிமார்களும் தோழர்களும்

பிரச்சோதனன்—உச்சைனி மன்னன்; வாசவதத்தையின் தந்தை

சாலங்காயன்—பிரச்சோதனனது முதன் மந்திரி

சிவேதன்—பிரச்சோதனன் மந்திரிகளுள் ஒருவன்

தருசகன்—மகத நாட்டு மன்னன்; பதுமாவதியின் தந்தை

இசைச்சன்—உதயணனது பார்ப்பனத் தோழன்

காகதுண்டர்—இராசகிரியத்திலிருந்த ஒரு முனிவர்

அருஞ்சுகன்—உச்சைனி வேதியன்; காணாமற்போன கோடபதி யென்னும் யாழை உதயணனிடம் சேர்த்தவன்

வாசவதத்தை—கதாநாயகி; பிரச்சோதன மன்னனது மகள்; உதயணன் முதல் மனைவி

பதுமாவதி—மகதமன்னன் தருசகன் மகள்; உதயணன் இரண்டாம் மனைவி

மிருகாபதி—சதானிகன் மனைவி; உதயணன் தாய்; சேடக மன்னன் புதல்வி

சாங்கியத்தாய்—வாசவதத்தையின் செவிலித் தாய்

விரிசிகை—ஓர் அரசமுனிவன் மகள்

காஞ்சனமாலை—வாசவதத்தையின் தோழி

ஐராவதி—பதுமாவதியின் தோழி

# கௌசாம்பி மன்னனும், கலிமதுரைப் பெருமானும்

[இருபெரு நாடகங்கள்]

## அங்கம்—1

### முதற்களம்

இடம்—வைசாலி நகரம்

காலம்—மாலை

பாத்திரங்கள்—சேடக மன்னன், தனமித்திரன், விக்கிரன்

சேடகமன்னன் :—(தனக்குள்) என்னே! சற்று முன் யான் பார்த்த மேகம் இப்பொழுது மறைந்துவிட்டதே! இது போலவே இவ்வுலக வாழ்வும், எனதாட்சியும் மறைந்துவிடும் போலும். பட்டத்து யானைமீது, வெண் கொற்றக்குடை நிழலில் வீற்றிருந்து, இந் நகரை வலம் வரும் வாழ்வும், ஒரு வாழ்வாமா? "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்; மற்றல்லார் அவஞ் செய்

வார் ஆசை யுட்பட்டு.'' என்ற பொய்யில் புலவர் பொரு ளுரையறியாது, பொருளல்லவற்றைப் பொருளென உணரும் மருளினல் பிறப்பன்றோ மீண்டும், மீண்டும் வந்துகொண்டிருக்கும். ஆகவே இவ்வரசாட்சியை மைந்தன்பால் ஒப்பித்து காட்டிற் சென்று தவம் புரிவேன்.

தனமித்திரன் :—தந்தையே, தங்கள் திருவடிக்கு வணக் கம். அடியேனை யழைப்பித்த காரணம் என்ன? ஏதே னும் உடல் நல மில்லையோ? ஏதோ ஒருவகையாகத் தோன்றுகின்றீர்களே! நமது மருத்துவர், தாமோதர ஞரை அழைத்து வரட்டுமா? தங்களைக் காணுங்கால் உடலிலோ அன்றி யுளத்திலோ ஏதோ கோளாறுளது போல் தோன்றுகின்றது. அடியேனுக்கு இன்ன தெனத் தெரிவித்தால் உடனே ஆவன புரிவேன்.

சேடகன் :—மைந்தா, எனக்கு உடம்பில் யாதொரு ஊறுபாடு மில்லை. உளத்திலும் அவ்வாறு நீ கருது வதுபோல், கோளாறு யாதொன்று மில்லை. இவ்வுலக வாழ்விலும், அரசாட்சியிலும் எனக்கு வெறுப்பேற் பட்டுள்ளது. துறவை என் மனம் நாடுகின்றது. நரை முதிர் யாக்கையையும் பெற்றுவிட்டேன். ஆகவே ஞாலங்காவலை நஞ்செனவெறுத்தேன். விபுல மலைச் சாரல் சென்று தவம் புரிய விரும்புகிறேன். இவ்வர சாட்சியின் பொறுப்பை யேற்றுக்கொண்டு யான் காட் டிற்குப் போக அனுமதிப்பாயாக.

தனமித்திரன் :—தந்தையே, தங்கட்கு நஞ்செனத் தோன்றும் இவ்வரசாட்சி யெனக்கும் வேண்டா. யானும் தவஞ்செய்தற்கு வருவேன்.

சேடகன் :—நீ இளம் பிராயமுடையவன். தவஞ் செய்யும் பருவம் உனக்கு இன்னும் வரவில்லை. சில காலம் ஆட்சி புரிந்து பின்னர், துறவு மேற்கொள்ளலாம்.

தனமித்திரன் :—என்னருமைத் தந்தையே, தாங்கள் துச்சமென வொதுக்கிய ஆட்சி யெனக்கும் துச்சமே. தாங்கள் பல ஆண்டுகள் ஆட்சிபுரிந்து முடிவில் அனுபவத்தால் கண்ட உண்மைதான் என் ஆஸ்தி; அதுவே எனக்குரியது. அரசு அல்ல.

சேடகன் :—தனமித்திரா, உன் தம்பிகளை வரச்சொல்.

மற்ற மைந்தர்கள் :—தந்தையே! வணக்கம். அழைப்பித்த காரணம் என்ன?

சேடகன் :—என்னரும் புதல்வர்களே, யான் துறவு பூண்டு வனம் புகுந்து தவஞ் செய்ய விரும்புகின்றேன். உங்களில் ஒருவர் இவ்வாட்சிப் பொறுப்பை யேற்றுக் கொள்ள விரும்புகின்றேன்.

மைந்தர்கள் :— எங்களால் இயலாது. யாங்களும் துறவு மேற்கொள்ளுவோம்.

சேடகன் :—விக்கிரனே, நீ யென் கடை மைந்தன். குணத்தால் உயர்ந்தவன். "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்ற முதுமொழியை நன்குணர்ந்தவன். உன் சகோதரர் யாவரும் எனது வேண்டுகோளை மறுத்து விட்டனர். நீயும் மறுத்தால் என் மனம் உடைந்து விடும்; மறுக்காமல் அரசாட்சியை ஏற்றுக் கொள்வாயாக.

விக்கிரன் :—தந்தையே, அடியேனும் ஆட்சியில் விருப்பற்றவனா யிருப்பினும், தங்கள் மாற்றத்திற்கு எதிர்

மாற்றங் கூற விரும்பவில்லை. தங்கள் கட்டளைப்படியே இவ்வரசாட்சியை ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

சேடகன்:—மைந்தனே, தந்தையின் மனங் கோணாமல் தரணியின் ஆட்சியை ஏற்றாய்! வாழ்வாயாக. யான் இன்றே விபுலகிரி செல்லுகின்றேன்.

---

### இரண்டாங்களம்

இடம்:—கௌசாம்பி

காலம்:—முற்பகல்

பாத்திரங்கள்:—சதானிகன், மிருகாபதி

சதானிகன்:— மந்திரீ, யாம் இறை வழிபாடு புரியப் போகுங்கால் வைசாலியிலிருந்து சில தூதுவர் வந்திருப்பதாக அறிவித்தனையே! அவர்களை இங்கு அழைத்து வருக.

தூதுவர்:—கொற்றவ, வாழி! கௌசாம்பி மன்னவரே வாழி! எம் காவலர் சேடக மன்னர் தமது மண்ணகங் காவலை வெறுத்து, துறவு பூண்டு, விபுல கிரிச்சாரலில் தவம்புரியச் சென்றனர். விக்கிரர் ஆட்சி ஏற்று, அரசு புரிந்து வருகின்றார். இச்செய்தியைச் சமூகத்தில் தெரியப்படுத்துமாறு விக்கிரமன்னர் எங்களை இவண் அனுப்பினர்.

சதானிகன்:—செய்தி வருத்தத்தையுண்டுபண்ணுகின்றது. எனினும், தங்கருமஞ் செய்யச் சேடகர் சென்றிருப்பதால் அதிக வருத்தத்திற்கு இடமில்லை. விக்கிர

மன்னரிடம், அவர் தங்கை மிருகாபதியும் யாமும் நலத்துடன் வாழ்ந்து வருவதைத் தெரிவியுங்கள்.

[தூதுவர் வைசாலி நகருக்குத் திரும்பிவிடுகின்றனர்.]

மிருகாபதி:—அரசரே, வைசாலியினின்றும் வந்த தூதுவர் கூறிய துறவுச் செய்தியைக் கேட்டது முதல் என்மனம் ஒரு நிலை கொள்ளவில்லை. எனதருமைத் தந்தையைச் சமீபத்தில் கூட யான் பார்க்கவில்லையே! அந்தோ! அவர் அருமைத் திருமுகங் காண்பதுவும் எந்நாளோ? (அழுகின்றார்.)

சதானிகன்:—தேவீ, சேடகமன்னரின் சிறப்புறு செல்வியே, வாமனர் செய்த நூல்களெல்லாம் வடுவற உணர்ந்த நீயும் வருந்துதல் முறையோ? "எண்ணறக் கற்று எழுத்தறப் படித்தாலும் பெண்புத்தி யென்பது பெரும் பேதைமைத்தே" என்ற ஆன்றோர் வாக்கை யன்றோ மெய்ப்பிக்கின்றனை! பிறவிப் பெருங்கடலைக் கடக்கத் துறவெனுந் தெப்பமே துணை செயாவிடின் வேறெவ்வாற்றான் மாந்தர்கள் கரையேற முடியும்? உண்டனவற்றையே உண்டு, கண்டனவற்றையே கண்டு எவ்வளவு காலங் கழிக்க முடியும்? பரம்பொருளைக் கண்டால்தான் பவக்கடல் தாண்ட முடியும். துறவு ஓர் சாதனமாகும். ஆகவே அதைப்பற்றிக் கவலற்க.

மிருகாபதி:—அரசே, தங்கள் தேனினும் இனிய மொழிகளால் ஒருவாறு ஆறுதல் அடைகின்றேன். அடியேன் கருவுற்றிருப்பதால், மயற்கை ஏற்பட்டுள்ளது. நிலா முற்றத்தில், எல்லாவற்றையும் செந்நிறமாக்கி, யானும் செவ்வணிபூண்டு, செந்நிற மஞ்சத்தில் செந்நிறப்பட்டாடை யொன்றைப் போர்த்திக்கொண்டு படுத்தூக்

கொள்ள விரும்புகின்றேன். இவ்வாசையை நிறைவேற்றி அருள்க.

சதானிகன் :—தேவீ, அங்ஙனமே உன் விருப்பப்படி செய்வாயாக.

[மிருகாபதி தான் விரும்பிய வண்ணம் அலங்காரஞ் செய்து கொண்டு படுத்திருந்தபோது, கண்டபேரண்டமென்னும் பறவை, அவளை ஈரம் புலராத தசைத் தொகுதி பென்றெண்ணி, மஞ்சத்துடன் தூக்கிச் சென்று, விபுலகிரியிற் சேடக முனிவருடைய பள்ளியினருகே மெல்ல வைத்து உண்ணத் தொடங்குகையில் அவள் விழித்துக் கொண்டாள். அதனைக் கண்ட அப்பறவை "இது தசைத் தொகுதியன்று உயிரோடு கூடிய ஒரு பெண் வடிவம்" என்று நினைத்து உண்ணாமல் திடீரென்று எழுந்து தன்னிடம் சென்று விட்டது.]

---

## மூன்றுங்களம்

இடம் :—விபுலகிரிச்சாரல்

காலம் :—காலை

பாத்திரங்கள் :—சேடக முனிவர், பிருமசுந்திர முனிவர், உதயணன்

முனிவர் :—என்னே! நீராடுதற்கு வந்த விடத்தில் ஒரு குழந்தையின் அழுகுரலும், ஒரு பெண்ணின் புலம்பல் ஒலியும் கேட்கின்றனவே. என்ன காரணம்? அருகிற் சென்று பார்ப்போம்.

[அருகிற்சென்று பார்க்கிறார்.]

மிருகாபதி :—முனி சிரேஷ்டரே, அபயம்! அபயம்! அடியாள் வைசாலி யரசன் புதல்வி. கௌசாம்பி

மன்னன் காதலி. காலவேறுபாட்டால் ஓர் பறவை யால் இங்கு வந்து சேர்ந்தேன். நேற்றிரவுதான் இக் குழந்தை பிறந்தது. இவ்விடம் யாருமில்லை. தாங்கள் தான் என்னையும் இக் குழந்தையையும் காப்பாற்ற வேண்டும்.

முனிவர் :—ஆ! என்னருமைச் செல்வியே! உனக்கும் இக்கதி வந்ததா? அரண்மனையில் பிறக்கவேண்டிய மைந்தன் ஆற்றங்கரையோரத்தில் ஆருமில்லாத விடத் தில் பிறந்துளனே. எல்லாம் ஈசன் செயல். அவனது சித்தத்தையும், அவனது திருவிளையாடலையும் யாரறி வார்? வருவது வந்தே தீரும். கவலுவதால் பயனில்லை. உன் மைந்தன் சூரியோதய காலத்தில் பிறந்தமையின் அவனுக்கு உதயணன் என்று பெயரிடுதல் பொருத்த மாகும். அவனது வரலாறு அநேகருடைய வரலாறு களுக்கு இடமாக விளங்கும்.

பிரமசுந்தர முனிவர் :—சேடக முனிவரே, நீவிர் அடி யேனை அழைப்பித்த காரணம் என்னை?

சேடக முனிவர் :—பிரமசுந்தர முனிவரே, இதோ இவண் கண்ணீருங் கம்பலையுமாய் நிற்கும் இம்மாது சிரோன் மணி, எனது மகள். இக்குழந்தை யெனது பேரன். கால வேறுபாட்டால் இந்நிலை யடைந்துள்ளனர். இவ்விருவரையும் உம்பால் ஒம்படை செய்கின்றேன்.

பிரமசுந்தர முனிவர் :—சேடரே, நீவிர் கவலவேண்டாம். அடியேனும், அடியேன் தரும பத்தினியாகிய பரம சுந்தரியும், இவ்விருவர்களையும் நன்றாகக் கவனித்துக் கொள்ளுகின்றோம். எங்கள் மைந்தன் யூகி, உதயண னுக்கு உயிர்த் துணைவனாக விளங்கட்டும். இவ்விரு

குழந்தைகளும் தங்களிடத்தும், அடியேனிடத்தும், அரசர்க்குரிய பலவகைக் கலைகளையும், வேறு பல்வகைக் கலைகளையும் பயிலுவார்களாக.

சேடகமுனிவர் :—பிரமசுந்தரரே ! நீர் இப் பொறுப்பை மேற்கொண்டது அடியேனுக்குப் பரம திருப்தியை உண்டுபண்ணுகின்றது.

(சிலகாலத்திற்குப் பின்னர்)

பிரமசுந்தர முனிவர் :—உதயண, நீ கற்கவேண்டிய கலைகள் அனைத்தையும் நன்கு கற்றுளாய். இசைப் பயிற்சியும் நிரம்பப் பெற்றிருக்கின்றாய். உனக்கு முன்னமேயே, யானையின் கோபத்தை யடக்கி யாளுதற்குரிய மந்திரத்தை உபதேசித்திருக்கின்றேன். முன்னொருகால், யானை முதலியவற்றை வயமாக்குவதற்குரிய கோடபதி யென்னும் யாழொன்று இந்திரன் எனக்கு அளித்தான். இதைக்கொண்டு நீ பன்முறை பல யானைகள் மயங்குமாறு செய்ததைப் பார்த்திருக்கின்றேன். ஆகவே அஃதை யுனக்கும் பரிசாக அளிக்கின்றேன். நீ இந்த வித்தையில் மிக்க ஆற்றலை அடைவாயாக. எனது மைந்தன் யூகியை யுன்பால் ஒப்பிக்கின்றேன்.

உதயணன் :—முனிவர் பிரானே, தாங்கள் இதுகாறும் எளியேனைப் பொருட்படுத்திச் சகல வித்தைகளையும் கற்பித்தருளினீர்கள். என்ன கைம்மாறு செய்ய வல்லேன். உண்டியும், உடையும் உவந்து நல்கினீர். உலகியற் கலைகளையும் வேறு உயர்கலைகளையும் ஒருங்கே புகட்டினீர். தங்கள் அரும்பெறற் புதல்வன் யூகியையும் எனக் குயிர்த் துணைவனாக அளித்தீர். இதைக் காட்டினும் யான் பெறும் பேறும் உளதோ ? தங்கள் ஆசி

யால் யாங்களிருவரும் ஒருவராக இனிது வாழ்வோம் என்பதில் யாதொரு தடையுமில்லை.

யூகி :—என் அரும்பெறல் தந்தையே, உம்மை விட்டுப் பிரிந்தெங்ஙனம் உயிர் வாழ்வேன். இதுகாறும் பேணி வளர்த்தீர்; கலைச் செல்வம் வழங்கினீர்; கடைசியாக இவ் வுதயணன்பால் ஒம்படையுஞ் செய்தீர். தங்கள் சித்தப் படிநடக்கச் சித்தமாயிருக்கின்றேன். எங்கிருந்தாலும் தங்கள் ஆசிகள் எங்கட்குண்டு.

[காட்டில் வேட்டையாடச் சென்றபோது, உதயணனுக்கு ஓர் தெய்வயானை, அவனது யாழொலிக்கு மயங்கி வந்து சேர்ந் தது. அவன் அதன்மேலேறித் தன்னிட மடைந்தான். அவ் யானை அவனுக்குரிய பணிவிடைகள் புரிந்து வந்தது. சில நாட்கள் சென்ற பின்பு, ஒரு நாளிரவில் அந்த யானை அவன் கனவிடைத் தோன்றி "என் மேற் பாகரை யேற்றினாலும், தோற்கயிற்றால் என்னைக் கட்டினாலும், யான் உண்ணுதற்கு முன்னமே நீ உண்டாலும் உன்னைவிட்டு நீங்கி விடுவேன்" என்றது. கேட்ட உதயணன் உடனே விழித்தெழுந்து அது முதல் மேற்கூறிய மூன்று தவறுகளும் உண்டாகாதபடி சாக் கிரதையாக நடந்துவந்தான். தெய்வ யானையும் அவனை விட்டு நீங்காமல் பணிபுரிந்து ஒழுகியது.]

---

## நான்காங்களம்

இடம் :—வைசாலி

காலம் :—எற்பாடு

பாத்திரங்கள் :—விக்கிரன், சேடக முனிவர்

விக்கிரன் :—(தனக்குள்) இதுகாறும் ஆட்சிபுரிந்தோம். நமக்கு யாதொரு சந்ததியும் இல்லையே. சந்ததி யிருந்

எற்பாடு=மாலைக்குப் பின் பத்து நாழிகை நேரம்

தால், அச்சந்ததியிடம் ஆட்சியை ஒப்பித்து விட்டுத் தவவனஞ் சென்று, தவத்தை மேற்கொள்ளலாம். துறவை நாடுகின்றது. அரசபாரத்தை யேற்றுக் கொள்ள ஒருவருமில்லையே. எனினும், விபுலகிரி சென்று நமது தந்தையிடம் இதைத் தெரிவித்து நங்குறையை முடிப்போம்.

(விபுலகிரி செல்லுகின்றான்)

விபுலகிரிச்சாரல்—தபோவனம்

சேடகமுனிவர்:—சீடர்களே, அதோ ஒருவர் வந்திருக்கின்றாரே, அவரை உள்ளே யழைத்து வாருங்கள். அவரைப் பார்த்தால் அரசரைப் போலக் காணப்படுகின்றார்.

சீடர்கள்:—(விக்கிர மன்னர்பாற் சென்று) அரசரே, தங்களை எமது குரு, சேடக முனிவர் அழைத்து வரச் சொல்லுகின்றார் வாருங்கள்.

விக்கிரன்:—(சேடக முனிவர்பாற் சென்று) அன்பு நிறைந்த தந்தையே, தங்கள் பொன்னடிகட்கு அடியேன் விக்கிரன் பற்பல வணக்கஞ் செய்கின்றேன்.

சேடக முனிவர்:—வாழிய! விக்கிர! வாழி பல்லூழி! நீ இவ்வளவு தூரம் வரக் காரணம் என்னை? உனது அரசாட்சி இனிது நடைபெற்று வருகின்றதா? மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றார்களா? உன் மந்திரிமார்கள் மதிவலிமை யுடையவர்களா? உனக்குப் பிள்ளைகள் எத்தனை பேர்?

விக்கிரன்:—எந்தையே, தங்களைத் தரிசிக்க விரும்பி இங்கு வந்தேன். தங்கள் ஆசியாலும், ஆண்டவன்

அருள் வலியாலும் அரசாட்சி இனிது நடைபெற்று வருகின்றது. குடிமக்கள் யாதொரு குறைவுமின்றி மகிழ்ச்சியுடன் காலங் கழித்து வருகின்றார்கள். நமது மந்திரிமார்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள். உயர் குடியிற் பிறந்தவர்கள். அவர் உத்தமப் பண்பினர். தம் உயிர்க்குறுதி யெண்ணார். யான் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர். எல்லாச் செல்வமும் படைத்தும், மக்கட் செல்வம் இல்லாதவனாயினேன், அன்புறு தந்தையே! தங்களைப் போல யானும் தவம்புரிய விரும்புகின்றேன். யார்மீது எனது அரசபாரத்தை யிறக்கி வெளிக் கிளம்புவேன்?

சேடக முனிவர்:—விக்கிரனே, உன் வார்த்தைகளைக் கேட்டு மிக மகிழ்ந்தேன். உன்னுடன் அளவளாவி வெகு காலமாயிற்று. உனது மனமும் துறவை நாடு வதையறிந்து மிகவும் உவக்கின்றேன். யான் துறவு பூண நினைத்த போது நீ யெனக் குதவினாய். என் இராச்சிய பாரத்தை ஏற்றாய்! இப்பொழுது உனக்கு யான் உதவுகின்றேன்; கவலற்க. இதோ, இவண் நம் முடன் வீற்றிருக்கும் சிறுவன், உன் தங்கை மிருகாபதியின் புதல்வன். ஊழ்வினை வயத்தால் அவள் இங்கே வந்து இவனை ஈன்றாள். இவன் பெயர் உதயணன். கல்வி கேள்விகளில் இவன் சிறந்துளான். இவனை மிருகாபதியின் சம்மதத்தின் பேரில் அழைத் துச் சென்று இவனுக்கு முடிசூட்டி, நீ துறவு பூண்டு கொள்.

விக்கிரன்:—எந்தாய், இகத்திற்கும் பரத்திற்கும் உதவு கின்ற தந்தையே உத்தமத் தந்தையாவர். இம்மையில் நுகருவதற்கு எவ்வளவு செல்வம் வைத்த போதிலும்,

அஃதெல்லாம் அழிதன் மாலையது. அருட்செல்வம் ஒன்றே செல்வங்களில் தலை சிறந்ததாகும். அச்செல்வத்தைத் துறவு மூலந்தான் அடைய முடியும். அதை யான் பெறுவதற்கு உதவியது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். உதயணனை அழைத்துச் சென்று முடிசூட்டி அரசாட்சியை அவன்பால் ஒப்படைத்துத் துறவு பூணுவேனாக.

[விக்கிரன் உதயணனை அழைத்துச் சென்று, வைசாலி நகரத்தில் முடிசூட்டி மன்னனாகச் செய்து, தவ வனஞ்சென்றுவிட்டான். யூகி உதயணனுக்கு முதன் மந்திரியாகி அரசாட்சி புரிந்துவந்தான்.]

---

## ஐந்தாங்களம்

இடம் :—வைசாலி நகரம்

காலம் :—காலை

பாத்திரங்கள்:—உதயணன் (அரசன்), யூகி, சதானிகன்

உதயணன் :—மதிசால் அமைச்சரே! நமது நாட்டில் கள்வர், பகைவர், நமது அதிகாரிகள், முதலியோர்களால் துன்புறுத்தப்படாமல் குடிமக்கள் செவ்வனே காலங்கழித்து மகிழ்ந்து வருகின்றார்களா? நாட்டில் எந்தப் பக்கத்தும் மாந்தர் பஞ்சமின்றி வாழ்ந்து வருகின்றனரா? உள் நாட்டில் கலகமின்றி அமைதி நிலவுகின்றதா? மாந்தர்கள் சாதிப்போர், சமயப் போர் இன்றிச் சமரச வுணர்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றார்களா?

யூகி:—அரசரே, அரச நீதி முற்றும் உணர்ந்த தங்கள் ஆட்சியில் மக்கள் யாதொரு குறைபாடுமின்றி மகிழ்ச்சி

யாய் வாழ்ந்து வருகின்றார்கள். தங்களை வாயார வாழ்த்துகின்றார்கள்.

காவற்காரன்:—வாழிய மன்னரே! வைசாலி வேந்தரே வாழ்க! தங்களைக் காணவேண்டிக் கௌசாம்பி மன்னர் சதானிகர் நமது அரண்மனை ஆசார வாயிலில் காத்திருக்கின்றார்.

உதயணன்:—ஏ, காவலா, நமது மந்திரி பூகியுடன் சென்று அவரை வரவேற்று இங்கு அழைத்து வருக.

(இருவரும் போய் சதானிகனை அழைத்து வருகின்றனர்.)

பூகி:—வேந்தரே, கௌசாம்பி மன்னர் தங்கள் தந்தை யென இப்பொழுதுதான் தங்கள் தாயார் மூலம் அறிந்தேன்.

உதயணன்:—(தந்தையின் காலில் வீழ்ந்து வணங்கி) எந்தையே! தங்களையும அடியேன் தாயையும் பிரித்து, வைத்த ஊழ்வினை மீண்டு நம்மை யெல்லாம் சேர்த்து வைத்துளது. தந்தை முகங் காணாத பாவியானேனே என்று மனம் வருந்திக் கொண்டிருக்குங்கால், எளியேன் கருத்தறிந்த இறைவன் தங்களை இவண் ஈர்த்து வந்தனன் போலும். பரம கருணாநிதியாகிய பகவனே போற்றி போற்றி.

சதானிகன்:—(உதயணனை மார்புறத் தழுவி) என் குலக் கொழுந்தே, உன்னை யீன்ற உன் தாய் புண்ணியவதி. உனது பிறப்பினைக் காணும் பேறு பாவியேனுக்குக் கிட்டாது போயிற்று. பிறந்த பத்து தினங்கள் வரை மகப் பேற்று விழாக் கொண்டாடப்பெறும் பேறு எனக்கும் என்னரண்மனைக்கும் இல்லாது போயிற்று.

நீ எனது தவச் செல்வன். முதன் மைந்தன் எனினும் புத்திரோற்சவம் புரியும் பாக்கியம் எனக்கு வாய்க்காது போயிற்று. (கண்ணீர் விட்டுக் கலங்குகின்றான்.)

உதயணன் :—தந்தையே, பல கலைகளை யெல்லாம் நுண்ணறிவால் பயின்றறிந்த தாங்கள் இவ்வாறு வருந்தலாமா? நமது வள்ளுவப் பெருந்தகையார், "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" என்றருளியுள்ளது பொய்க்குமா? அரண்மனையில் எவ்வளவு செல்வம் இருப்பினும், அவற்றை யெல்லாம் நுகரும் பேறு பாவியேனாகிய எனக்கும், பாவியைப் பத்துத் திங்கள் சுமந்த தாய்க்கும் வாய்க்காது போயிற்று. எனினும் இப்பொழுதாவது அரசாட்சியையும், தங்களையும் நல்கிய பால்வரைத் தெய்வம் வாழ்க.

சதானிகன் :—கல்வி கேள்விகளிற் சிறந்த மைந்தனே! உனது ஞான உரைகள் கேட்டு மகிழ்ந்தேன். இறைவன் உனக்கு அருள் புரிவானாக. பல்லாண்டு வாழி! யான் உனது தாயைக் கௌசாம்பிக்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றேன். உன் கருத்தென்ன?

உதயணன் :—வேந்தர் பெருமானே! பெறலருந் தாயைப் பிரிய மனமில்லையெனினும் தங்கள் விருப்பத்திற்குத் தடை கூறவும் மனமில்லை. அழைத்துச் செல்லுங்கள். அடிக்கடி அவண் வந்து தங்களிருவரையும் கண்டு மகிழ்ந்து வருவேன்.

மிருகாபதி :—மைந்தனே, யான் உன் தந்தையாருடன் கௌசாம்பிக்குப் போய் அங்கு வதிகின்றேன். நீ நீதிநெறி தவறாது ஆட்சி புரிந்துவருவாயாக. மதிசான்ற யூகியை உன் உயிர்த்துணைவனாகப் பாவித்து நடந்துவா.

அவன் எது செய்தாலும் உன் நன்மையைக் கருதியே செய்வான். போய்வருகின்றேன். கடவுள் உனக்கு அருள்புரிவாராக.

சதானிகன் :—உதயணா, உனக்கு யான் சொல்ல வேண்டியது யாதொன்றுமில்லை. நீயுன் பாட்டனார் சேடக முனிவர் பாலும், பிரமசுந்தர முனிவர்பாலும் எல்லாக் கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றிருக்கின்றாய் என்று, யூகி கூறக் கேட்டேன். ஆகவே, யான் உனக்குப் புத்தி மதிகூற வேண்டியது அநாவசியம். போய்வருகின்றேன்.

[சதானிகனும், மிருகாபதியும் கௌசாம்பி சென்று சிலகாலம் அங்கிருந்து, பிங்கலன், கடகன் என்ற இரு புதல்வர்களை மிருகாபதி பெற்றாள். சதானிகன் துறவு மேற்கொள்ள விரும்பி, ஆட்சியை உதயணன் பால் ஒப்பித்து விட்டுத் தவஞ்செய்யக் காட்டிற்குச் சென்றான்.]

---

## ஆறுங்களம்

இடம் :—கௌசாம்பி

காலம் :—பிற்பகல்

பாத்திரங்கள் :—உதயணன், யூகி, மந்திரிமார்கள்

உதயணன் :—யூகி, எனது தந்தையார் சதானிகர் முடி துறந்து தவம்புரியக் கானகஞ் சென்றமையால், யான், இது காலை கௌசாம்பியையும் ஆட்சி புரிய வேண்டியதாயிருக்கின்றது. வைசாலி, கௌசாம்பி யென்னும் இரண்டிடங்களிலிருந்துகொண்டு ஆட்சி புரிதல் எனக்கு இயலாத காரியமாயிருக்கின்றது. ஆகவே, நீ

கௌசாம்பியிலிருந்து கொண்டுஎனது தம்பிமார்பிங்கல கடகரோடு ஆட்சி புரிந்துவா. இங்கே வயந்தகன், உருமண்ணுவா, இடவகன் என்பவர்களை மந்திரிகளாக வைத்துக்கொண்டுநான் ஆட்சி செலுத்திவருகின்றேன். தெய்வயானையும் எனக்குதவி இருக்கிறது. ஆகவே நீ சற்றும் கவலைப் படாமல் வைசாலி சென்று அரசாண்டுவா.

யூகி :—அரசரே, தங்களைப் பிரிய மனமில்லை. எனினும் தங்கள் கட்டளையை மறுக்கவும் மனமில்லை. அவ்வாறே வைசாலி சென்று ஆட்சி புரிந்து வருகின்றேன். இவ்விடத்து நலந்தீங்குகளைத் தூதுவர் மூலந் தெரிவியுங்கள். யானும் அமயம் நேர்ந்துழி இவண் வந்து போவேன்.

[யூகி, உதயணன்பால் விடைபெற்று, வைசாலி சென்று ஆட்சி புரிந்து வருகின்றான்.]

(சில நாட்களுக்குப் பின்)

உதயணன் :—(வயந்தகன் முதலிய மந்திரிகளை யழைத்து) அமைச்சர்களே, யாம் சில தினங்கட்கு முன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றிருந்தபோது நீர் வேட்கையால் வாடினோமல்லவா? அப்பொழுது ஓர் இயக்கன், நஞ்சுகன் என்பான் நமக்கு நீர் நல்கியது மாத்திர மன்றி, எந்தச் சமயத்தில் நினைத்தாலும் வந்து உதவுவதாகவும் வாக்களித்துச் சென்றானே! என்னே அவனது பரோபகாரச் சிந்தை! தன்னலமற்ற கொள்கை! எல்லாம் இறைவன் திருவருள்.

மந்திரிமார்கள் :— ஆருயிர்த் துணைவ, வேட்டையாடிக் களைத்திருந்த போது நமக்கு நீர்வேட்கை ஏற்பட்டது.

அதுபோது, "இக்காட்டில் ஏதேனும் தெய்வமிருப்பின் இரங்கி நமது தாகத்தைப் போக்கியருளும்," என்று எண்ணினேம். இறைவன் நமது கருத்தறிந்தான். இயக்கன் மூலம் கருத்தறிந்து முடித்தான். ஆண்டவன் நமது பரம பிதாவன்றோ? குழந்தைகள் வருந்தச் சகிப்பானா? உடனே உதவியருளினான்.

[அரண்மனை யானைப் பாகர்கள் உதயணனைப் பார்க்க வருகிறார்கள். உதயணன் அவர்கள் வந்திருப்பதையறிந்து அவர்களை உள்ளே வரவிடச் சொல்லுகின்றான்.]

உதயணன் :—யானைப் பாகர்களே, நீங்களனைவரும் ஒருங்கே இங்கு வருவதற்குக் காரணம் என்ன? உங்கள் முகத்தில் துக்கக் குறி காணப்படுகின்றதே! நமது அரண்மனையில் நிகழ்ந்த தென்ன? கூறுங்கள்.

யானைப்பாகர்கள் :—மன்னரேறே, வாழி. தாங்கள் நேற்று ஒரு ஆடன்மகளது கூத்தைக் காணச் சென்று வந்தவர் இரவு உணவு உட்கொள்ளுதன் முன், வழக்கம் போல் தெய்வயானையை வந்து பாராமலே, உணவருந்தி விட்டீர்கள். அதனாலேயோ அன்றிவேறெக் காரணத்தாலேயோ அவ் யானை பிளிறிக் கொண்டிருந்து பின்னர் ஓடிவிட்டது.

உதயணன் :— ஆ! ஹா! என்னே! என்னே! என்னுயிர்த் தெய்வ்யானை என்னைப் பிரிந்ததா? மதிமோசம் போனேனே! "தையலார் மயலிற்பட்டார் தமக்கொரு மதியுண்டாமோ." என்ற வாக்குப் பொய்க்குமா? ஆடன் மகளது ஆட்டத்திலும், அவளது இசையிலும் மயங்கிய யான், தெய்வயானைக்குக் கொடுத்திருந்த வாக்கை மறந்தேன். முன்னர் உணவருந்தினேன். யானை, சத்தியந்தவறியவன் என்று எண்ணி, என்னை மோசஞ்செய்து

விட்டுப் போய்விட்டது. எனது கோடபதியை வாசிக்கும்போது எந்த யானை வந்து கேட்கப் போகிறது? ஆஹா! பொச்சாப்பினால் வந்த கேடல்லவோ?

[உதயணன் மயங்கி சிங்காதனத்தில் சாய்கின்றான்.]

மந்திரிமார்கள் :—அரசரே, தாங்கள் தெய்வயானையின் பொருட்டு இவ்வளவு வருந்த வேண்டாம். அந்த யானையை எப்படியாவது தேடித்தருவோம். சகல கலா மன்னராகிய தாங்களே ஒரு யானையினிமித்தம் இவ்வாறு புலம்பினால், எம்போல்வார் தங்களை யெவ்வாறு ஆற்றுவோம். கடல் நீர் கொதிக்குமானால், அதை வளாவ நீருண்டோ? நாங்கள் வருந்தினால் தாங்கள் தேற்ற முடியும். தங்களைத் தேற்ற எம்மால் இயலுங் கொல்லோ? அரசர்க்கரசரே, எழுந்திருங்கள். கவல வேண்டாம். யானையை எப்படியாவது பிடித்துத் தருகின்றோம்.

[உதயணன் மூர்ச்சை தெளிந்து எழுந்து வீற்றிருக்கின்றான்.]

---

# அங்கம்—2

## முதற்களம்

இடம் :—உச்சையினி நகரம் (சபாமண்டபம்)
காலம் :—காலை
பாத்திரங்கள் :—பிரச்சோதனன், கணக்கர், சாலங்காயன்

பிரச்சோதனன் :—ஏ கணக்கரே, நமது அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய கப்பத்தை நமது சிற்றரசர் சரிவரச் செலுத்தி வருகின்றனரா?

கணக்கர் :—அரசர்க்கரசரே, வாழி. நமது அரசாங்கத்திற்குத் தவறாமல், நமக்குட்பட்ட சிற்றரசர்களில் இரு

வரைத் தவிர, ஏனையர் முறையே கப்பஞ் செலுத்தி வருகின்றனர்.

பிரச்சோதனன் :—ஏ கணக்கரே, அவ்விருவரும் யாவர்? இன்னாரென்று உடனே தெரிவியும். காரணம் என்ன? அவர்களைப் பிடித்துவர யாம் ஏற்பாடு செய்வோம்.

கணக்கர் :— அரசரே! வத்தவநாட்டரசரும், வைசாலி நாட்டிறையும் இறைப் பகுதியை வழக்கம்போலச் செலுத்தவில்லை. காரணம் ஒன்றுஞ் சொல்லுவதற்கில்லை. அவர்கள் மிகப் பராக்கிரம சாலிகளென்று அறிகின்றேன். மந்திரிமார்களுள் மதிசால் அமைச்சரும், நீதிநூற் பயிற்சியிலும், தந்திரத்திலும் மிகுந்தவருமான சாலங்காயரைக் கேட்டால் நன்கு தெரியும்.

பிரச்சோதனன் :—(சபையில் வீற்றிருந்த அமைச்சர் சிகாமணியாகிய சாலங்காயனைப் பார்த்து) மதிசான்ற அமைச்சரே! நமது ஆட்சியில் இதுகாறும் கேட்டிராத ஒரு செய்தி இன்று கேட்டேன். அச்செய்தி கேட்டதிலிருந்து என்மனங் கொதிக்கின்றது. வத்தவ நாட்டரசனும், வைசாலி நாட்டிறைவனும் வழக்கம் போல நமக்குச் செலுத்தவேண்டிய கப்பம் செலுத்தவில்லையாம். என் செய்வோம்? அவர்களிருவரையும் பிடித்து வர ஏற்பாடு செய்வோமா?'

சாலங்காயன் :—அரசரேறே, பதறவேண்டாம். எண்ணித் துணிதல் நன்று. வத்தவ நாட்டு அரசன் உதயணன். வைசாலி மன்னன் உதயணனுடைய முதன் மந்திரி யூகி. இருவரும் மிகுந்த சமர்த்தர். வெல்லுதற்கரியர். இருவரும் சேராமலிருக்கும்படிச் செய்யவேண்டும், யூகியுடன் போர் புரிவதற்கு நமது சேனைகளையும், தக்க

வீரர்களையும் வைசாலிக்கு அனுப்பினால், யூகி தன் சேனைகளோடு வந்து நம்முடைய சேனைகளுடன் போர் செய்வான். உதயணனுக்கு அவன் வந்து உதவி செய்ய இடமிராது. உதயணன் தெய்வயானையைத் தேடிக்கொண்டு யாழுங் கையுமாகக் காடுகளில் அலைகின்றான். அதனாலும், யூகி வந்து உதவுவதற்கு இடமில்லாமையாலும் உதயணனை நாம் பிடித்துக்கொண்டு வருவதற்குத் தக்க சமயம் இது; யாம் மாய யானையொன்றை நிருமித்து அனுப்பி மயக்கி உதயணனைப் பிடித்துவரச் செய்வதுதான் தக்க உபாயம்.

பிரச்சோதனன் :—அமைச்சரே, உமது மதிவன்மையையும், சமயோசித புத்தியையும் பாராட்டுகின்றேன். உம்போன்ற மந்திரிகளால்தாம் உலகிற்கு நன்மை உண்டு. நீர் கூறியவண்ணம் நமது சேனைகளிற் சிலவற்றை வைசாலிக்கு அனுப்பும். உம் விருப்பப்படி சிறந்த சிற்பிகளைக்கொண்டு ஓர் இயந்திர யானையைச் செய்யும்.

[பிரச்சோதனன் கட்டளைப்படி, உச்சைனி சேனைகளுக்கும் வைசாலி நகரத்து யூகிக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. சாலங்காயன் மாய யானையுடன் சென்று காட்டில் உதயணனை வஞ்சகமாகப் பிடித்து வந்துவிட்டான். உதயணன் தான் பிடிபட்டதை யூகிக்கு வயந்தகன் மூலம் தெரிவிக்கின்றான்.]

பிரச்சோதனன் :—அமைச்சரே, நீவிர் பிரித்தாளுந் தந்திரத்தால், யூகியைப் பிரித்து, உதயணனை வஞ்சனையால் கொணர்ந்தீர். மிகுந்த மகிழ்ச்சி. உடனே அவனை ஒரு சிறைச்சாலையில் அடைத்து வையும்.

[அவ்வாறே, சாலங்காயன் உதயணனை யொரு பெருஞ்சிறையில் அடைத்து வைத்திருக்கின்றான்.]

இரண்டாங்களம்

இடம் :—வைசாலியின் புறநகர்

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—யூகி, வயந்தகன், பிரச்சோதனன், சாலங்காயன்

யூகி :—வயந்தகா, நீ கொணர்ந்த ஓலையைப் பிரித்துப் படித்துப் பார்த்தேன். என்னே! வஞ்சனையால் என் தலைவனைப் பிடித்து விட்டார்களே! இதுவும் அரச நீதியோ? இருக்கட்டும். "இரும்பை எலி விழுங்கிற்று." என்றதற்கு "குழந்தையைப் பருந்து கொண்டு போயிற்று." என்றது போல உலகில் வஞ்சச் செயல் செய்தவனை வஞ்சச் செயல் செய்தே வெல்லவேண்டும். மாய யானையால் மயக்கி யெம்மரசனைப் பிடித்துத் தன்னகர்க்கு வருவித்த பிரச்சோதனனுடைய நகரத்தை யான் ஒரு யானையாலேயே அழிப்பித்து, உதயணனை மீட்பதல்லாமல், உஞ்சைநகரத்தைத்தீக்கிரையாக்கியும், அவனைக்கொண்டே வாசவதத்தையைப் பிரித்துப் பிரச்சோதனனறியாமல் வலிந்து கொண்டுவரச் செய்தும் அவனுக்கு அவளை மணஞ் செய்விப்பேன்.

வயந்தகன் :—அரசரே, எது செய்தாலும் நன்கு ஆலோசித்துச் செய்வது நலம். தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.

யூகி :—வயந்தகா, நீ கவலற்க. யான் மிகுந்த யோசனையுடன்தான் சொல்லுகின்றேன். நீ பிங்கல, கடகரிடஞ் சென்று கௌசாம்பியைப் பாதுகாத்துவரச் சொல். நீ மாத்திரம் யான் கூறுவதுபோல மாறுவேடம்பூண்டு

என்னுடன் வா. மற்றத் தோழர்களையும் கூப்பிடு; நம் பாலுள்ள கூனர், குறளர், சித்தர் முதலியவர்களோடும் என்பின் வா. "உதயணனது பிரிவினால் யூகி இறந்து போய்விட்டான்." என்ற செய்தியை எல்லா நாடுகளிலும், நகரங்களிலும் பரவச்செய்யவேண்டும்.

வயந்தகன் :—அரசரே, தங்கள் யோசனையின்படி நடக்கச் சித்தமாகக் காத்திருக்கின்றேன். தாங்கள் இறந்துவிட்ட பொய்ச் செய்தியைக் காட்டுத் தீப் போலப் பரப்புகின்றேன்.

[உதயணன் பிரிவாற்றமல் யூகி, இறந்துவிட்டான் என்ற செய்தி யெங்குப் பார்த்தாலும் பரவி விட்டது. பிரச்சோதனன் கேட்டு மகிழ்ந்தான். உதயணனுடைய நாடுகளிற் சில பகுதிகளையும் வலிந்து கைப்பற்றினன்.]

(உச்சைனியின் ஒருபுறம்)

யூகி :—வயந்தகா, நாம் இந்தப் பாழ் வீட்டில் இருந்து கொண்டு நமது தலைவனை எப்படியாவது விடுதலை செய்யவேண்டும். இப்பாழ் வீடுதான் நமது அரண்மனை. யான் கற்பிக்கும் பாஷைகளை நீங்கள் கற்று இவ்வூரில் வியாபாரஞ் செய்து வாருங்கள். இரவில் இங்கு வந்துவிடுங்கள். நீ மாத்திரம் பிரச்சோதனன் குமாரர்களோடு சேர்ந்து கல்வி கற்று, அவர்களுக்கு ஏவலும் செய்துவா.

வயந்தகன் :—வேந்தரே, தாங்கள் கூறியாங்குப் பணி புரிவோம்.

யூகி :—[ஒரு நாள் மிகுந்த நோயுள்ளவன் போலவும் தெய்வாவேசங் கொண்டவன் போலவும் தன்னைக் காட்டி நீர்க் கரக மொன்றைத் தலையிலேந்திக்கொண்டு

வெளியில் வருகின்றார்.] தேவலோகத்திலிருந்து ஒரு தேவன் இந்நகரில் வந்திருக்கின்றான். அவன் என்னுடைய தலைவன்; யான் அவனைப் பின் தொடர்ந்து வந்தேன். ஐந்தலை நாக மொன்றை இவ்வூரரசன் சிறையில் வைத்திருக்கிறான். அஃது எவ்விடத்தே யுளது?

நகரமாந்தர்:—என்னே! இவன் தெய்வாவேசங் கொண்டிருக்கின்றான்! ஐந்தலை நாகமென்கின்றான்! தலைவன் என்கின்றான்! ஒன்றுக்கொன்று பொருத்தமின்றிப் பிதற்றுகின்றானே!

[நகர மாந்தர் அவனைப் பின் தொடருகின்றனர்.]

பிரச்சோதனன்:—மந்திரீ, சில நாட்களாக நமது நகரத்தில் யாரோ ஒருவன் தெய்வாவேசங் கொண்டவன் போல் வீதியில் பிதற்றித் திரிகின்றானும். அவன் வருவதையறிந்து உதயணன் சிறைச்சாலையிலிருந்து ஏதோ பாடுகின்றானும். வேய்ங்குழல் ஊதுகின்றானும். இதன் கருத்தின்னதென்று அறிகிலேன்.

சாலங்காயன்:—மன்னரே, மாறு வேடம் புனைந்து வந்திருப்பவன் யூகியாக இருக்கலாமென்று நான் ஐயுறுகின்றேன்; அவன் இறந்திருக்கமாட்டான்.

(மறுநாள்)

பிரச்சோதனன்:—சாலங்காயா, என்னே! நமது பட்டத்து யானை நளகிரி மதங்கொண்டு சுழன்று சுழன்று, ஓடி ஓடி ஊரை அழிக்கின்றதே! இதற்கென் செய்யலாம்? உதயணனைச் சிறையிலிட்டதிலிருந்தே நமது நகரத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் புதுமைகள் நடந்து கொண்டிருக்கின்றனவே!—என் செய்வோம்?

சாலங்காயன் :—அரசரே, யானையை யடக்குவதற்குச் சிறையில் இருக்கும் உதயணனுல்தான் முடியும். ஆகவே உதயணனை அனுப்பி வையுங்கள்.

பிரச்சோதனன் :—அமைச்சே, வெல்ல முடியாமல் வஞ்சனையால் மாய யானையைக் காட்டிப் பிடித்து வருவித்துச் சிறையில் வைத்ததன்றி உதயணனை மதங் கொண்ட யானையின் முன்பும் அனுப்பினுனென்ற பழி வருமே. அதற்கென் செய்யலாம்?

சாலங்காயன் :—மன்னரே, அத்தகைய பழியொன்றும் வரமாட்டாது. உதயணன் யானைகளை யடக்குவதற் குரிய யாழைக் கையில் வைத்திருக்கின்றுன். இந்திர னுடைய யானையாக இருந்தாலும் அவனுடைய யாழ் இசைக்குவசமாகிநடக்குமேயன்றி யாதும் செய்யாது; ஆதலால் அவனை நளகிரியின் முன்பு அனுப்பலாம்; அது அடங்கிவிடும். இல்லையாயின் என்ன தீங்கு விளையுமோ? அறியேன்.

பிரச்சோதனன் :—அமைச்சரே, அப்படியாயின் இச் செய்தியை உதயணனிடம் தெரிவித்து நீரே அவனை அழைத்து வருக.

சாலங்காயன் :—அரசே, யான் உதயணனை வஞ்சனையாற் பிடித்து வந்தேனுதலின், அவனிடம் செல்லுதற்கு அச்சமும் நாணமும் உடையேன். ஆகவே யான் போக முடியாதென மறுப்பதற்கு அருள் கூர்ந்து மன்னித்திடுக. வேறு யாரையாவது அனுப்புங்கள்.

பிரச்சோதனன் :—சாலங்காயரே, நீர் போவதற்கு மறுக் குங் காரணத்தை யான் நன்குணர்வேன். சிவேதனை உதயணனிடம் அனுப்பிவையும்.

[சாலங்காயன் சிவேதனிடஞ் சென்று, அவனை உதயண னிடம் அனுப்புகின்றான். சிவேதன் உதயணனிடம் போகின்றான்.]

சிவேதன் :—(உதயணனைப் பலப்படப் பாராட்டி) ஐய, யான் பிரச்சோத மன்னரின் கட்டளைப்படி இங்கு வந்தேன். இப்போது இந்நகருக்கு நளகிரியென்னும் யானையால் நேர்ந்திருக்கின்ற பெருந் துன்பத்தை நீக்கு தல் உமது கடமை. சிறையினின்றும் நீக்கி உம்மைக் கௌசாம்பிக்கு விரைவில் அனுப்புவதாக மன்னர் கூறு கின்றார்.

உதயணன் :—உமது மன்னரின் விருப்பப்படி யானையை அடக்குகின்றேன். கவலைவேண்டாம்.

[உதயணன், மதங்கொண்ட யானையை மந்திரத்தால் அசைவறச் செய்துவிட்டு, யாழை வாசித்து அதன் கோபத்தையும் அடக்கி அதன்மேல் ஏறி வீதியில் சுற்றி வருகிறான்.]

நகரமாந்தர்கள் :—'மன்னவன் வாழ்க! வத்தவன் வாழ்க! ஒலிகெழு நகரத் துறுபிணி நீக்கிய வலிகெழு தடக்கை வயவன் வாழ்க'!

பிரச்சோதனன் : —(தேவிமாரோடும், புதல்வியரோடும் புலிமுக மாடத்து வந்து நின்றுகொண்டு உதயணனைப் பார்த்து) நீ புண்ணியவான்; தூயகுலத்துதித்தவன்; குணக்கடல்; மிகுந்த பராக்கிரம சாலி; மந்திர நூலில் வல்லவன். உன் நிலையை யறியாமல் உனக்குப் பெருந் தவறிழைத்துவிட்டேன்; பொறுத்திடுக. இவ்விலை வரம்பில்லாத ஆரத்தை யுனக்கு வெகுமதியாகக் கொடுக்கின்றேன். பெற்றுக்கொள்க.

உதயணன் :—அரசர் பெருமானே, தாங்கள் எனக்கு அளித்த வெகுமதிக்கு மிகவும் மகிழ்கின்றேன். என் நன்றி உங்கட்குரியதாகுக. உங்கள் பாராட்டுதலை மெச்சுகின்றேன். தங்களுடைய புகழுரைக்குத் தக்க வனல்லன்.

[உதயணன் பிரச்சோதனன் பின்னே நின்ற அவனது மகளாகிய வாசவதத்தையைப் பார்த்தான். அவள் எழிலில் ஈடுபட்டான். வாசவதத்தையும் உதயணனைப் பார்த்தவளவில் அவன்பால் காதல் கொண்டாள்; அரசர் சமூகமாதலால் இருவரும் ஏதிலாரைப் போலப் பொது நோக்குக் கொண்டவர்போல மனத்தை யடக்கித் தத்தமிடங்கட்கு மீண்டேகினார்கள்.]

பிரச்சோதனன் :—வத்தவ நாட்டரசே, உன்னைச் சிறை நீக்கம் இன்றே செய்து விட்டேன். காலத்தாற் செய்த நன்றியை யென்றும் மறவேன். இனிமேல் நீ குஞ்சரச் சேரியில் உள்ள அரண்மனையில் வசிப்பாயாக. நாங்களெல்லாம் உன் உறவினர்கள். இந்த இடம் உனது இடமென எண்ணிக்கொள்வாயாக.

[உடனே உதயணனைச் சிவிகையில் ஏற்றி, குஞ்சரச் சேரியில் புதிதாகக் கட்டப்பெற்ற அரண்மனையில் கொண்டு சேர்த்தனர்.]

---

## மூன்றுங்களம்

இடம் :—குஞ்சரச்சேரி

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—உதயணன், பிரச்சோதனன்

உதயணன் :—(தனக்குள்) மன்னவன் பின்னே நின்ற மாணிழை அரச குமாரி போலும்! ஆ! ஹா! என்னே

அவள் எழில்! அவள் என்னுளங் கவர்ந்தனளே! அவள் தந்தை நம்மைப் புறச் சிறைப்படுத்தி யிருந்தான். அவள் நம்மை அகச்சிறைப் படுத்தியுள்ளாள். மதங்கொண்ட யானையை அடக்கியதற்கு வெகுமதியாக நம்மைச் சிறைவீடு செய்தமை மாத்திரமன்றிச் சிறந்த மாளிகையுங் கொடுத்தான். மதங்கொண்ட யானையை அடக்கினோம். ஆனால் மதரரி நெடுங்கண் காரிகையாம் இளம்பிடிபாற் சென்ற என் மனமாகிய யானையை யடக்க முடியவில்லையே! கண்டது முதல் அக்கன்னி என்மனத்துட் கோயில் கொண்டாள்! அவ்வெழிலார் நங்கையை எவ்வாறு பெறுவேன்? கருத்தறிந்து முடிப்பவன் கடவுள்தான். பிரச்சோதன மன்னன் நம்மைச் சிறைப்படுத்தியதும் நன்மையாகவே முடியும்; எல்லாமவன் செயல்.

[பிரச்சோதனன் ஏவலால் சில வேலையாட்கள் உதயணனிடம் வருகிறார்கள்.]

வேலையாட்கள்:—வத்தவ, வாழ்க! தங்களை எங்கள் பெருமான் பிரச்சோதன மன்னர் அழைத்து வரும்படி உத்தரவிட்டுள்ளார். தாங்கள் தட்டாமல் வருமாறு வேண்டுகின்றோம்.

உதயணன்:—சேவகர்களே, அரசர் எதன் பொருட்டு என்னை அழைத்து வரச்சொன்னார்?

வேலையாட்கள்:—கோமானே, அரசர் பெருமான் கட்டளையைத்தான் யாங்கள் அறிவோம். எதன் பொருட்டுத் தங்களை அழைத்துள்ளார் என்பது எங்கட்குத் தெரியாது.

[யானைமீது உதயணன் ஏறி பிரச்சோதனனிடம் வந்து சேருகின்றான்.]

பிரச்சோதனன் :—வத்தவர் வாழ்வே, வருக! வருக! இந்த இரட்டைத் தவிசில் இருக்கலாம். யானும் உன்னுடன் அமர்ந்து உரையாட விரும்புகின்றேன்.

உதயணன் :—அரசரே வணக்கம். அடியேனை இவண் அழைப்பித்தது எதற்காக? விசேஷம் ஏதேனும் உண்டோ?

பிரச்சோதனன் :— உதயண, உன்னை வரவழைத்தது ஒரு நற்கருமத்தின் பொருட்டே. நாமிருவரும் ஒன்றே. இஃது உன்னுடைய இடம். நாங்கள் எல்லாம் உனது உறவினர்கள்.

உதயணன் :—அரசர் பெருமானே, தங்கள் இன்னுரைகளைப் பெரிதும் பாராட்டுகின்றேன். எளியேனைச் சிறைப்படுத்திக் கொணர்ந்து, தங்கள் சுற்றமாகச் செய்தீர்கள். தங்கள் அன்புக்கு அடியேன் என்றும் கடமைப்பட்டவனாவேன்.

பிரச்சோதனன் :—உதயண, உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகின்றேன். ஆனால் நீ என்ன நினைத்துக் கொள்வாயோ வென்ற அச்சம் யான் விரும்பியதைக் கேட்கத் தடைசெய்கின்றது.

உதயணன் :—மன்னவர் பெருந்தகையே, தாங்கள் அஞ்சவேண்டிய தென்ன விருக்கின்றது. "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று." என்ற வள்ளுவர் வாய்மொழியை நன்கு கடைப்பிடித் தொழுகும்யான் பிறர்செய்த தீமைகளை யுடனுக்குடன் மறந்து வந்துளேன். தாங்கள் செய்துள்ள சிறப்பை எண்ணுங்கால், யான் மாமனார் வீட்டில் இருப்பதாக எண்ணி மகிழ்கின்றது மாத்திரமல்லாமல் தங்கட்கு

எந்த வகையில் பிரதியுபகாரஞ் செய்யலாமென்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றேன். ஆகவே தாங்கள் சற்றும் தயங்காமல் எதை வேண்டுமானாலும் கேளுங் கள். என்னால் ஆகக்கூடியதா யிருந்தால் அதனை யுடனே முடித்துவிட்டு மறுவேலை பார்க்கின்றேன்.

பிரச்சோதனன் :—உதயணா, நீ இவ்வளவு உத்தமன் என் பதறியாது உன்னைச் சிறைப்படுத்தினேன். என் சிறு மையால் செய்த தவறுகளை யெல்லாம் உன் பெருமை யால் பொறுத்தாய். அதுமாத்திர மன்றி என்னையும் மன்னித்தாய். இப்பொழுது எனக்குதவி செய்வதா கவும் வாக்களிக்கின்றாய். இதை யெல்லாம் யோசிக்கு மிடத்து, "இன்னா செய்தாரை யொருத்த லவர்நாண நன்னயஞ் செய்து விடல்." என்ற குறளுக்கு இலக்கிய மாய் விளங்குகின்றாய். திருக்குறளை யோதி அதன்படி நடக்கும் திருவாளன் என்பது இன்றுதான் உணர்ந் தேன். அதிகமாக வளர்த்துக்கொண்டே போகாமல் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். நீ எனது மகள் வாசவதத்தைக்கும், என் குமாரர்கட்கும் முறையே யாழ்வித்தை, வில்வித்தைகளைப் பயிற்றுவிக்க வேண் டும். இதுவே எனது விருப்பம். நீ மேற்கொள்ளும் சிரமத்திற்கு நீ விரும்பும் எதையும் கொடுக்கத் தயங்கேன்.

உதயணன் :—அன்புறு தந்தைபோன்ற அரசரே, தங் கள் கருத்துணர்ந்தேன். இஃது என்னால் முடித்துத் தரக்கூடிய காரியமே. இதற்கு இவ்வளவு அச்சமும் நாணமும் ஏன்? தாங்கள் கூறியது போலவே, யானும் ஒன்று கூறுகின்றேன். யான் தங்கட்கு உறவினனே; தங்களை யெனது அன்புடைய மாமனாகப் பாவிக்கின்

றேன். ஆகவே எனக்குப் பிரதியாக ஒன்றுஞ் செய்ய வேண்டாம். கரும்பு தின்னக் கூலியா? தங்களரும் பெறற் செல்வி கரும்பனையாளுக்கு யாழ் கற்றுக் கொடுப்பதுவே ஒரு பெரும் பேறெனக் கருதுகின்றேன். தங்கள் செல்வர்கட்கும் வில்வித்தை பயிற்றுகின்றேன். கவலை வேண்டாம். ஒரு நன்னாளில் வாசவதத்தையையும், அரசிளங்குமரர்களையும் என்னிடம், அனுப்பி வையுங்கள். எனக்குத் தெரிந்த அளவு கற்றுக் கொடுக்கின்றேன்.

பிரச்சோதனன்:—உதயணா, உனது உதார குணத்தை மெச்சுகின்றேன்; கேட்டவுடனே முடியாதுயென்னாமல் எனது விருப்பத்தை நிறைவேற்ற இசைந்தாய். சற்றும் யோசிக்கவில்லை. இத்தகையோர்களை நினைத்தே "இரத்தலும் ஈதலேபோலும்." என்றனர் வள்ளுவர். யாழிசைச் செல்வம் என்மகட்கு வழங்க இசைந்தமைக்கு மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நமது புரோகிதரைக் கொண்டு நல்ல நாள் பார்த்து, நமது குழந்தைகளை உன்பால் அனுப்பிவைக்கின்றேன்.

[உதயணன் விடைபெற்றுக்கொண்டு குஞ்சரச்சேரிபுக்கான்.]

---

## நான்காங்களம்

இடம்:—பிரச்சோதனனது அரண்மனைப் பூஞ்சோலை

காலம்:—மாலை

பாத்திரங்கள்:—வாசவதத்தை, பிரச்சோதனன்

வாசவதத்தை:-(தனக்குள்) ஆஹா! அன்று புலிமுக மாடத்தின் முன் யான் கண்ட ஆடவர் காமனோ? அல்லது

மாந்தரோ! அவரைக் கண்டதுமுதல் என்மனம் ஒருவழி நிற்கவில்லையே. என்னே அவரது வீரம்! என்னே அவர் கலைத் திறம்! என்னே! அவர் யாழிசைத் திறன்! அவர் விஞ்சையரோ? விண்ணவரோ? மானிட வடிவந்தாங்கி யென்மனங் கொள்ளைகொள்ள வந்தனரோ? அறியேன்; அத்தகைய அரசிளங் காளையைத் தனியன் என்றுகூட எண்ணாமல் நளகிரியை அடக்குவதற்கு யாழொடு செல்கவென்று கூறி அவர் அதனை அடக்குஞ் செயலை உற்று நோக்கிக்கொண்டே நின்ற என் தந்தையாரின் கண்கள் மரத்தாலியன்றனவோ? சற்றுக்கூட இரக்கமில்லையே? அவ்வாடவர் திலகத்தை மீட்டுமொரு முறை காண்பேனோ? இறைவன்தான் அருள்புரிய வேண்டும். அலந்தார்க்கு அருள் புரிபவன் அவன் தானே.

[மயங்கி ஒரு தவிசின்மேல் சாய்ந்திருக்கிறாள். அப்பொழுது சேடியர் இருவர் அரசனது ஆணையால் அவளை அழைத்துச்செல்ல வருகின்றனர்.]

சேடியர் :—எங்களருமைத் தத்தையே, நீ ஏன் எங்களையெல்லாம் விடுத்துத் தனியே இவண் வந்து சோகமுற்றவள் போல் தங்கியிருக்கின்றாய்?

வாசவதத்தை :—சேடிமாரே, எனக்குச் சோகமொன்றும் இல்லையே. இப் பூஞ்சோலையின்கண் காணப்பெறும் இயற்கை யழகில் என் மனத்தைப் பறிகொடுத்தேன். குயிலோசை கேட்டது. அடுத்தாற் போல யாரோ ஒருத்தி யாழ் வாசிப்பது காதில் விழுந்தது. நமக்கு இப்படிப்பட்ட யாழிசைச் செல்வம் கிடைக்கவில்லையே என்று எண்ணினேன். துக்கம் மேலிட்டது. வேறொன்றுமில்லை.

சேடியர் :—தத்தையே, உனது உள்ளக் கருத்தை யறிந்து முடிப்பவர்போல, உனது தந்தை-அரசர் பெருமான்-உதயணனிடம் நீ யாழ் பயில ஏற்பாடு செய்துளார். அரசகுமாரர்கட்கும் வில்வித்தை பயிற்ற ஏற்பாடு செய்துளார். உன்னை அழைத்துப்போகவே நாங்கள் இருவரும் இங்கு வந்தோம். எழுந்திரு. போவோம்.

வாசவதத்தை :—சேடிகாள், என்னோடு விளையாடாதீர்கள். நீங்கள் சொல்லுவது உண்மையா? வேடிக்கைக்காகச் சொல்லுகிறீர்களா? எங்களப்பா உண்மையாகவா உதயணனை யெங்கட்குக் குருவாக நியமித்திருக்கிறார்? (அவர்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு) சொல்லுங்களடி! என்னைக் கேலி செய்யாதீர்கள். யான் வீணையைப்பற்றிச் சொன்னதால் உடனே இப்படிப் பேசத் தொடங்கி விட்டீர்களோ? என்னவோ?

சேடியர் :—தத்தாய், உண்மையில் உன்னைக் கூட்டிப் போகவே வந்திருக்கிறோம். வா, போவோம். அங்கு வந்த பிறகு உண்மையா பொய்யா வென்பது தெரியும். எதற்காக நாங்கள் உன்னைக் கேலி பண்ணவேண்டும்? நாங்களென்ன சமயந் தெரியாத மூடிகளா? நீ வருத்தமாக இருக்கிறபோது கேலி பண்ணுவமா? இத்தனை காலம் எங்களோடு பழகியும் எங்கள் குணம் உனக்குத் தெரியவில்லையே! உம். உன்பேரில் பிசகில்லை. எங்கள் கெட்ட காலம் அப்படி யெல்லாம் உன்னைப் பேசச் சொல்லிற்று. உம். செல்வம் சொல்லுக்கஞ்சுமா?

வாசவதத்தை :—அடி தோழிகளே, இதற்கெல்லாம் கோபித்துக்கொள்ளுகிறீர்களே. நீங்கள் சொன்னது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆகவே நிஜந்தானா

என்று தெரிந்துகொள்ளக்கேட்டால் அதற்கு உடனே கோபித்துக்கொண்டீர்களே. நான் கேட்டது தவறாகத் தோன்றினால் என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் தோழி யென்ற முறையில் இது கேட்கக்கூடவா உரிமையில்லை. இதுவும் என் விதி வசம். நீங்களென்ன செய்வீர்கள்? எனது கெட்ட கிரஹம் உங்களைக் கோபித்துக் கொள்ளத் தூண்டுகிறது. உம். (அழுகின்றாள்.)

சேடியர் :—ஏண்டியம்மா, இதற்கெல்லாம் நீ அழுகிறாய்? உன்னோடு இவ்வளவு காலம் நெருங்கிப் பழகிய எங்களுடைய வார்த்தையை நம்புவதற்கு இவ்வளவு தயக்கமா என்று நினைத்து, நாங்கள் எங்களை நொந்து கொண்டோமே தவிர, வேறல்ல. நீ உடனே அழுது விட்டாய். அழுகையை நிறுத்து; போவோம். "கன்னியர்க்குக் கண்ணீர் கண்ணிமையிலே," என்னும் வாக்கியத்திற்கிணங்க உடனே கண்ணீரை மளமளவென்று உதிர்த்துவிட்டாயே! அழவேண்டாம். தத்தையே, நற்காரியத்திற்குக் கூப்பிட வந்திருக்கின்றோம். அபசகுனம் போல அழாதே. வா, போவோம், சந்தோஷமாக.

[எல்லாரும் அரசன் சமூகத்தில் போய்ச் சேருகின்றனர்.]

பிரச்சோதனன் :—குழந்தாய், தத்தையே, நீ எவ்வளவு ரூபவதியாக இருந்தபோதிலும், உனக்கு இசைப்பயிற்சி இல்லாவிட்டால், நறுமணமற்ற அழகிய செவ்வரத்த மலர்போலக் கட்புலனுக்கு மாத்திரம் உன் கணவனுக்கு இன்பம் அளிப்பாயே தவிர, செவிப்புலனுக்கு ஒருவித இன்பமும் பயக்க மாட்டாயே! அதை யெண்ணியே,

நமது குஞ்சரச்சேரி அரண்மனையில் வதியும் வத்தவர் பெருமகனிடம் உன்னை யாழ்ப் பயிற்சிக்கு அனுப்ப எண்ணியுள்ளேன். உன் கருத்தையறிந்து கொள்ளாமலேயே உதயணனிடம் ஏற்பாடு செய்துவிட்டேன்.

வாசவதத்தை:—அப்பா, தங்கள் கட்டளைப்படியே நடக்கக் காத்திருக்கின்றேன். எனக்கு என்ன வேண்டுமென்பது தங்களுக்குத்தானே தெரியும். இதற்கு என்னைக் கேட்கவும் வேண்டுமோ? "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்." என்று வள்ளுவர் கூறிய தந்தையின் இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாய் விளங்குந் தங்கட்கு யான் கூறவேண்டுவதும் ஒன்றுண்டோ? எனக்கும் யாழ்ப் பயிற்சி மிகப்பிடித்தமே.

பிரச்சோதனன் :—தத்தாய், உன் வார்த்தைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தேன். நீ சீக்கிரம் போய்ப் படுத்துறங்கு. நேரமாய்விட்டது. நாளைக் காலையில் சூரியோதய காலத்திற்கு உன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு இங்கு வா. யானே உன்னை அழைத்துச் சென்று உதயணனிடம் ஒப்படைத்து வருகின்றேன். உன் தம்பிமார்களுக்கும், அவர்கள் வில் வித்தை கற்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல். அவர்களும் ஆயத்தமா யிருக்கட்டும்.

வாசவதத்தை:—அப்பா, அப்படியே யாகட்டும். நாளை வைகறையில் துயில் நீத்துக் காலைக்கடன்களை முடித்து, நீராடி இறைவனை வணங்கி என் சகோதரர்களுடன் இங்கு வந்து தங்களைக் காண்கின்றேன். தாங்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்திருங்கள்.

யான் அந்தப்புரஞ் சென்று அம்மாளிடம் இச்செய்தியைத் தெரிவிக்கின்றேன். போய் வருகின்றேன். நமஸ்காரம், அப்பா.

[வாசவதத்தை போகின்றுள்.]

---

## ஐந்தாங் களம்

இடம் :—பிரச்சோதனமன்னன் அரண்மனே—சபா மண்டபம்

காலம் :—அதிகாலே

பாத்திரங்கள் :—பிரச்சோதனன், சாலங்காயன்

பிரச்சோதனன் :—சாலங்காயரே, நமது செல்வி வாசவதத்தையை இன்று காலே உதயணனிடம் யாழ்ப் பயிற்சியினிமித்தம் அழைத்துப்போக எண்ணியுள்ளேன். நமதரசிளங்குமரர்களேயும் வில் வித்தையினிமித்தம் அவனிடம் விட உத்தேசித்திருக்கின்றேன். இரண்டு தினங்கட்குமுன் உதயணனே இவ்விடம் வரவழைத்து அவனுடன் இதைப்பற்றி பேசி ஏற்பாடு செய்திருக்கின்றேன். இன்னும் ஒரு நாழிகையளவில் வாசவதத்தையையும் நம் குமாரர்களேயும் இங்கு எதிர்பார்க்கிறேன். மூன்று சிவிகைகள் ஆயத்தமாயிருக்க வேண்டுமெனச் சொல்லியுள்ளேன். அவசரமாகச் செய்ய நேர்ந்தமையாலும், கலே விஷயமாதலாலும் உம்முடன் கலந்தாலோசிக்கவில்லே. மேலும் இதில் உமகுக் கருத்து வேறுபாடிராதென்ற நம்பிக்கையுடையேனுதலின், முதலில் உம்மிடம் இதைப்பற்றி யொன்றுந் தெரிவிக்கவில்லே.

சாலங்காயன் :—அரசரே, வாசவதத்தையை உதயணனி டம் யாழ்ப் பயிற்சிக்கு அனுப்பத் தாங்கள் எண்ணி இருப்பது மகிழ்ச்சிக்குரியதே. எதற்கும் என்னிடம் கலந்தாலோசித்திருந்தால் நன்றுயிருந்திருக்கும். "மந் திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.' என்ற பாண்டி யன் வாக்குப்படி, யான் எந்தக் காரியத்தையும் பரி சிலனை செய்து அதைப் பற்றித் தங்கட்குத் தெளிவாய் எடுத்துரைத்திருப்பேன். சிற்சில வேளைகளில் தாங்கள் அவசரப்பட்டு விடுகிறீர்கள். நமது நாயனர், "எண் ணித் துணிக கருமந் துணிந்தபி னெண்ணுவ மென்ப திழுக்கு." என்றபடி, ஆலோசனை செய்யாத காரியங் கள் பிறகு மனம் புண்ணடைவதற் கேதுவாகின்றன.

பிரச்சோதனன் :— மந்திரி, இது சாமானிய விஷயந் தானே, இதில் என்ன வரப்போகிறதென்று நினைத்து உம்மைக் கலவாமல் ஏற்பாடு செய்துவிட்டேன். வரக் கடவ தீங்குகள் உளவோ? இருப்பின் தெரிவியும், கேட்போம்.

சாலங்காயன் :—அரசரே, தங்கட்குத் தெரியாத விஷய மில்லை. உதயணன் இளம்பிராயத்தன். நமது தத்தை யும் இளமையும் கட்டழகும் ஒருங்கே வாய்க்கப் பெற் றவள். இருவருக்குள் காதல் ஏற்படலாம். அதன் விளைவாக உடன்போக்கும் ஏற்படலாம். பிறகு ஊரார் அலர் தூற்றுவார்கள். அதற்குத்தான் அஞ்சுகின் றேன்.

பிரச்சோதனன் :—மந்திரி, "எழுத்தறிவித்தவன் இறை வனன்றோ?" இசையாசானும் அங்ஙனந்தானே கருதப் படவேண்டும். மாணவனையும் மாணவியையும் ஆசான் தனது மக்களாகவன்றோ பாவித்தல் வேண்டும்?

ஆகவே, காதல் எழுவதற்கிடமில்லை. பக்தியும் வாத்சல்யமும் அன்றோ ஏற்படும். நீ சொல்லுதல் தருமத்திற்கு விரோதமாயிருக்கிறது.

சாலங்காயன் :—மன்னரே, தாங்கள் கூறுவனவெல்லாம் குரு சிஷ்ய இலக்கணங்கள் தாம். மாணவன் விஷயத்தில் குரு தந்தைபோல் நடந்துகொள்ளுகின்றான். மாணவனும் குருவைத் தந்தைபோல் பாவிக்கின்றான். ஆனால், மாணவி விஷயத்தில் மாத்திரம் ஒரோவழி குரு காதலனாக மாறுகின்றான். மாணவி நிறை யுள்ளவளாயிருந்தால், அத்தகைய கள்ளக் குருவை மதியாது, தனது கற்பைக் காத்துக்கொள்ள, அவனை விட்டு வெளியேறுகின்றாள். இன்றேல், அவளுக்கும் குருபக்தி காதலாக மாறினால் அவளும் காதலியாக மாறிவிடுகின்றாள். ஒரோவழி, மாணவி முதலில் காதலியாக மாறுவதுமுண்டு. அச் சந்தர்ப்பத்தில் குரு தன்னொழுக்கத்தைக் காப்பாற்றக் கூடியவனாயிருந்தால், அவள் விருப்பத்திற்கிணங்காமல், அவளைத் துரத்தி விடுவான். இன்றேல், அவனும் காதலனாக மாறினாலும் மாறலாம். காதலுக்குக் கண்ணில்லையன்றோ? தவிர, "மன்னர் திருவும் மகளிர் எழில் நலமும் துன்னியார் துப்பார்." என்பது பெரியார் வாக்கன்றோ? ஆகவே,யான் சற்றுத் தயங்கினேன். எப்படியெனினும், தாங்கள் முன்னரே தீர்மானித்தபடி, வாசவதத்தையையும் அரசிளங்குமாரர்களையும் உதயணன்பால் அனுப்பிவையுங்கள். நீர்வழி மிதவைபோல, விதிவழிதானே மதி செல்லும்.

பிரச்சோதனன் :—சாலங்காயரே, எனக்கொன்றும் அப்படித் தோன்றவில்லை. உதயணனைப் பார்த்தால் ஒழுக்கம் தவறாத உத்தமனாகக் காணப்படுகின்றான். நமது

கன்னியும் கற்பிழக்கத் துணியாள். நமது சம்மத மின்றி அவ்வாறு நடப்பார்களா?

சாலங்காயன் :—வேந்தரே, நாம் எவ்வளவுதான் ஒருவனைச் சோதித்து, ஒரு வினையின்கண் விட்டபோதிலும், சில சமயங்களில் தன் வினையின் தன்மையால் அவன் மனம் திரிந்துவிடுகின்றது. இதைக் கருதியே நமதுபொய்யில் புலவர், “எனைவகையாற் றேறியக்கண்ணும் வினைவகையான் வேறுரு மாந்தர் பலர்.” என்று கூறியுள்ளார். இருவரும் காதல் கொள்ளும் பருவத்தினர். ஆகவே இதைப்பற்றிச் சொன்னேன். காதல் கொள்ளுங்கால் தாய் தந்தையரைக் கேட்டுக் காதல் கொள்ளுவதில்லை.

“ யாயு ஞாயும் யாரா கியரோ!
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்!
யா னுநீயு மெவ்வழி யறிதும்!
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே.”

என்றபடி அன்பு கெழுமிய நெஞ்சங்கள் தம்முள் ஒன்றுபட்டுவிடும்.

பிரச்சோதனன் :—மந்திரீ, இனி யோசிக்கவேண்டாம். எல்லாம் அவன் செயல். குறித்த நாழிகை வந்துவிட்டது. வாசவதத்தையும், நமது குமரர்களும் இதோ வந்து விட்டார்கள். சிவிகைகளும் வந்து விட்டன. யான்சென்று இவர்களை உதயணன்பால் ஒப்பித்து வருகின்றேன்.

சாலங்காயன் :—அரசரே, அங்ஙனமே யாகுக. இறைவன் இன்னருள் புரிவானாக.

[எழுந்து தன்னிடம் போகின்றான்.]

பிரச்சோதனன் :—தத்தாய், நீ குறித்த நேரத்தில் உன் இளைஞர்களுடன் வந்துற்றாய். நிரம்ப சந்தோஷம். உன் இஷ்ட தெய்வத்தை வணங்கி வந்தனையா ?

வாசவதத்தை :—அப்பா, தங்களிடம் யான் தெரிவித்த வண்ணமே, வைகறைத் துயில் நீத்து, இறைவழி பாடுள்பட எல்லாவற்றையும் முடித்து வந்துளேன். இதோ, என் இளைஞர்கள் வந்துளார்கள்.

[எல்லாரும் சிவிகைமீது ஏறி, குஞ்சரச்சேரி நோக்கிப் புறப் படுகின்றனர்.]

---

ஆறுங்களம்

இடம் :—குஞ்சரச் சேரியின் மாளிகை

காலம் :—காலை

பாத்திரங்கள் :—உதயணன், பிரச்சோதனன், வாசவதத்தை

உதயணன் :—(தனக்குள்) இன்று நமது வாழ்நாளில் ஒரு நன்னாளாகும். நமது உள்ளங்கவர்ந்த கள்வி இங்கு நமது சிஷ்யையாக வருநாளாகும். இந்நேரம் புறப் பட்டு வந்துகொண்டிருக்கலாம். இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் எழிலார் மதிமுகங் காணலாம்.

[யோசித்துக் கொண்டிருக்கும்போது, சில ஏவலாளர் உதயணன் இருந்த மாளிகையின் கதவைத் தட்டுகின் றனர். உதயணன் கதவைத் திறந்து பார்க்கிறான்.]

ஏவலாளர்கள் :—வத்தவர் பெருமானே, வாயிற் கதவைத் திறக்க உத்தரவிடுங்கள். எங்கள் பிரச்சோதன மன்

னரும், அரசகுமாரரும், அரசகுமாரியும் வந்துள்ளார் கள்.

உதயணன் :—ஏ பணியாட்களே, நமது வாயிற் கதவைத் திறந்துவிடுங்கள்.

[பிரச்சோதனன் முதலியோரை வரவேற்று, ஆசனம் வழங்குகிறான்.]

பிரச்சோதனன் :—(தன் மகளைக் காட்டி) இவள்தான், என் தவச் செல்வி, வாசவதத்தை. (புத்திரர்களைக் காட்டி) இவர்கள் என் மைந்தர்கள். என் மகளுக்கு யாழ்வித்தையும், இம் மைந்தர்கட்கு வில்வித்தையும் பயிற்றுதல் வேண்டும்.

உதயணன் :—[தனக்கெனப் போடப்பட்ட ஆசனமொன் றில் வீற்றிருந்து, எதிரில் உள்ள ஆசனம் ஒன்றைக் காட்டி] அரசரே, தங்கள் செல்வியை இப்பீடத்தில் இருக்கச் சொல்லுங்கள்.

பிரச்சோதனன் :—தத்தையே, உதயணன் முன் போடப் பட்டுள்ள ஆசனம் உனக்காகும். அதில் வீற்றிருந்து யாழ் கற்றுக்கொள். உன் தம்பிமார்கள் அங்கிருந்து வில் வித்தை முதலியன கற்பார்கள்.

வாசவதத்தை :—[கை குவித்துக்கொண்டு] வத்தவ நாட்டதிபரே, நமஸ்காரம். தங்களிடம் யாழ் வித்தை பயிலும் பேறு பெற்றேன்; தாங்கள் இன்று முதல் அடியாளது ஆசிரியராய் விட்டீர்கள். தாங்கள் கற்பிக் கும் முறைப்படி கற்றுக்கொள்ள முயலுவேன்.

பிரச்சோதனன் :—உதயண, எனது புத்திரி வாசவ தத்தையையும், இவ்வரசிளங் குமரர்களையும் உன்பால்

ஓம்படை செய்துவிட்டேன். இனி நீயே இவர்கட்குத் தந்தையும் குருவும் ஆவாய்.

உதயணன் :—அரசர் பெருமானே, யான் இவர்களை நன்கு கவனித்துக் கொள்ளுகின்றேன். தங்கட்குச் சிறிதும் கவலை வேண்டாம். காலையில் அரச குமாரர்களையும், மாலையில் தத்தையையும் அனுப்பிவையுங்கள்.

பிரச்சோதனன் :—உதயண, அப்படியே யாகட்டும். உன்னிஷ்டப்படி அனுப்பிவைக்கின்றேன். நீ இவ்வளவு பொறுப்பேற்றுக் கொண்டமைக்காக உனக்கு யான் கடமைப்பட்டவனாவேன். யான் போய்வருகின்றேன். இவர்களைப் பாடம்முடிந்த பின் அனுப்பிவைக்கலாம்.

[பிரச்சோதனன் உதயணனிடம் மகளையும், குமாரர்களையும் விட்டு, முன்னடி அரண்மனைக்குச் செல்லுகின்றான்.]

உதயணன் :—தத்தையே, உனக்கு யாழ் பயிற்றுதலே சிறந்த புண்ணியமெனக் கருதுகின்றேன். உன் திரு முகச் செவ்வியை நோக்கி இன்புறுவதினும் வேறு இன்பம் உளதோ? செவிகட்கு உனது குதலை மொழிகளைக் கேட்டின்ப மூட்டுவதினும் வேறென்ன வழியுளது? பெண்ணரசே, உன்னைக் காணு நன்னாள் எந்நாளென்று வருந்தி நின்றேன். வாழி!

வாசவதத்தை :—வத்தவர் கோமானே, என்னை வாழ்விக்க வந்த மருந்தே, தங்களைப் புலிமுகமாடத்தின் முன் கண்ட நாளிலிருந்தே தங்களை மீண்டும் காணுவ தெப்போதோ என்று ஏங்கி நின்றேன். ஆண்டவன் நம்மிருவரையும் இங்கு குரு சிஷ்யையாகச் சேர்த்து வைத்துளான். நம்மைச் சேர்த்துவைத்த பால்வரைத் தெய்வம் வாழ்வதாக!

உதயணன் :—பாவாய், யான் சிறையிற்பட்ட துன்பம், நளகிரியை அடக்கும்போது உண்டான வருத்தம், உன் தந்தை யென்னை வஞ்சனையாற் பிடித்துவந்ததால் ஏற்பட்ட அவமானம், எல்லாம் உன் முகத்தைப் பார்த்ததும், சூரியனைக் கண்ட பனிபோல் பறந்து விட்டன. நீ நாடோறும் தவறாது மாலையில் யாழுடன் வந்து பயின்று கொண்டிரு. மாலைதான் யாழுக்குரிய காலமாகும். காலையில் உன்னிளைஞர் வந்து போகட்டும்.

வாசவதத்தை:—குருநாதரே, தங்கள் கட்டளைப்படி நடக்க என்றும் சித்தமாயிருக்கின்றேன். தங்களைக் கண்டது முதல் என்மனம் என்வசமில்லை. எனதுடல், பொருள், ஆவி மூன்றையும் உமக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டேன்; தாங்களே யெனது தெய்வம்.

[சிறிது நேரம் அரசகுமாரர்கட்கு வில்வித்தை பயிற்றுகின்றான். உதயணன்பால் விடைபெற்றுக்கொண்டு வாசவதத்தையும், அரச குமாரர்களும் அரண்மனைக்குத் திரும்புகின்றார்கள்.]

---

## அங்கம் 3

### முதற்களம்

இடம் :—உச்சைனியின் அரண்மனை

காலம் :—காலை

பாத்திரங்கள் :—பிரச்சோதனன், சேனாதிபதி, சாலங்காயன்

பிரச்சோதனன் :—(தனக்குள்) என்னே, இந்நகரமாந்தர் நமது செல்வி வாசவதத்தையைப்பற்றியும்,உதயணனைப்

பற்றியும் அலர் தூற்றுகின்றனரே. இல்லாத செய்தி இவ்வாறு பரவுமா? ஏதேனும் உண்மை இருக்குமோ? நமது மதிசான்ற சாலங்காயன் உதயணனிடம் வாசவதத்தையை யொப்புவிக்கப் புறப்படு முன்பு தனது கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொன்னான். உண்மையிலேயே அவன் வரும்பொருள் உரைக்கும் மந்திரிதான். இக்காலத்தில் ஒரு யுவனும் யுவதியும் ஒருவருடன் ஒருவர் பேசுவதையோ, ஒருவரை யொருவர் பார்ப்பதையோ கண்டாலே வீண்பழி சுமத்துவது உலக இயல்பன்றோ, ஒருகால் இம்முறையில் நமது தத்தையின்மீது நகரமாந்தர் அடாத பழி சுமத்துகின்றனரோ, என்னவோ? எல்லாவற்றிற்கும் நமது மந்திரி சாலங்காயனை வரவழைப்போம்.

[காவற்காரனை யழைத்து சாலங்காயனை அழைத்துவரச் சொல்லுகின்றான். சாலங்காயனும் வந்து சேருகின்றான்.]

சாலங்காயன் :—அரசரே, நமஸ்காரம். என்ன தாங்கள் ஒரு மாதிரியாகக் காணப்படுகின்றீர்களே? தங்கள் உடம்பிற்கு ஏதேனும் அசௌக்கிய முண்டோ? அன்றி நமது அரசாங்கத்தில் ஏதேனும் குறை நேர்ந்து விட்டதா? அல்லது, நேற்று நடந்த நீர் விழாவில் எதிர் பாராத விபத்து ஏற்பட்டதா? முகவாட்டத்திற்குக் காரணம் என்ன? மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும் ஒத்திருக்கு முள்ளத் துரவோராகிய தாங்கள், இன்ப துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும் சம நோக்குடையவர்களாயிற்றே? அவ்வாறிருந்தும், இன்று இவ்வாறு மனம் வருந்தக் காரணம் என்னைகொல்?

பிரச்சோதனன் :—சாலங்காயரே, நமது செல்வி உதயணனிடஞ் சென்று யாழ் பயின்று வருகின்றுளன்றோ? அதுகொண்டு இவ்வூரார் அலர் தூற்றுகின்றனர். இருவரும் காதல் வயப்பட்டிருப்பதாகவும், உதயணன் வாசவதத்தையை அழைத்துப் போய்விடத் தீர்மானித்திருப்பதாகவும் ஜனங்கள் பேசிக்கொள்ளுகிருர்களாம். நமது மந்திரி சிவேதனும், ஏனைய உளவுக்காரர்களும் எனக்குத் தெரிவித்தார்கள். உமக்கு ஏதேனும் தெரியுமா?

சாலங்காயன் :—வெற்றி வேந்தரே, அதைப்பற்றி அப்பொழுதே தெரிவித்தேன். தாங்கள் பிடிவாதமாகவும், என்னுடன் கலந்தாலோசிக்காமலும் செய்துவிட்டீர்கள். மந்திரி யூகி இறக்கவில்லை யென்றும், அவன் நம் நகர்க்கண் இருந்து பேய்பிடித்தவன் போல உதயணனுக்கு உதவி வருகின்றுனென்றும் தங்கட்கு முன்னரே தெரிவித்தேன். அவனுடன் இன்னும் பலர் மாறுவேடம் புனைந்து இந்நகரில் வதிகின்றனர். அவர்களெல்லாம் சேர்ந்துகொண்டு ஏதேனும் சூழ்ச்சி புரியலாம். நாம் வஞ்சனையால் உதயணனைப் பிடித்துவந்த செய்தியைக் கேட்ட யூகி, பழிக்குப் பழி வாங்காமல் விடுவதில்லை யென்றும, வஞ்சனையால் உதயணனைப் பிடித்துச் சென்றதற்காக, அவனைத் தந்திரமாகச் சிறைமீட்பதல்லாமல், வாசவதத்தையையும் அவ்வாறே அழைத்துக்கொண்டு கௌசாம்பி சென்று, மணம் முடித்து விடுவதாகவும் சபதஞ் செய்திருக்கின்றுனும். நேற்றிரவு இச்செய்திதான் என் காதில் விழுந்தது. அதைக் கேட்டது முதல் எனக்கு மனச் சாந்தியில்லை. அதைத் தங்களிடம் இன்று காலையில் தெரிவிக்க

வேண்டுமென்றிருந்தேன். அதற்குள் தாங்களும் ஆள் விட்டனுப்பினீர்கள்.

காவலன் :—மன்னர் மன்னரே, அமைச்சரே, தங்களிருவரையும் பார்க்க, நமது சேனைத்தலைவரும், சில வீரர்களும் அவசரமாய் வந்திருக்கிறார்கள்.

பிரச்சோதனன் :—ஏ காவல, உடனே அவர்களை வரவிடு.

[காவலன் அவர்களை வரவிடுகின்றான்.]

சேனைத்தலைவர் :—மன்னவரேறே, மதிசால் அமைச்சரே, அடியேன் நமஸ்காரம். தங்களாட்சியிலும் இப்படிப் பட்ட அநியாயம் நடக்குமா? இரும்பை எலி விழுங்குமா? குழந்தையைப் பருந்து தூக்கிச் செல்லுமா?

பிரச்சோதனன்:—படைத்தலைவரே, நடந்த விஷயத்தை உடனே தெரிவியும்.

சேனைத்தலைவர் :—அரசரே, அமைச்சரே, நேற்று நடந்த நீர் விழாவின்போது, மாலையில் இருட்டிய பின்னர், யானை மதங்கொண்டு குழப்பத்தை யுண்டு பண்ணிற்று. சில விடங்களில் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இக் குழப்பத்தில், ஜனங்கள் அங்கு மிங்கும் சிதறி குய்யோ முறையோ என்று கதறிக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். அப்போது உதயணனைச் சேர்ந்தவர் பலர் நமது யானை பத்திராபதியின்மேல் உதயணனும் வாசவதத்தையும் ஏறி ஓடிப்போக உதவினார்கள். யானையின் காதில் ஏதோ ஒரு மந்திரத்தை யொருவன் உபதேசித்தான். யானை மிகவும் விரைந்து செல்ல ஆரம்பித்தது. நாங்கள் தடுக்க முயன்றோம். எங்களை நன்றாகப் புடைத்து விட்டார்கள் அங்கிருந்த உதயண

னின் மாறுவேடம் பூண்ட ஆட்கள். ஊமைபோலவும், செவிடர் போலவும் நம் நகரத்தில் இருந்தவர்கள் தங்கள் மாறு வேடத்துக்குத் தக்கபடி பேசிச்சண்டை இட்டார்கள். வெகு நேரம் போராடியும் பயன்பட வில்லை. நமது சேனையில் பலர் மாண்டனர்.

பிரச்சோதனன் :—என்னே! என்னே! நமது செல்வி வாசவத்தையையா உதயணன் எடுத்துச் சென்றான்? அட பாவி! யான் அவனை நம்பி அவனிடத்தில் என் மகளை யாழ் வாசிக்க விட்டேனே! எனது நம்பிக்கைக் குப் பாத்திரமாக இல்லாமல் துரோகம் செய்தானே! இவனைச் சும்மா விடுவேனா? கௌசாம்பியின்மேல் படையெடுத்துச் செல்வோம். சாலங்காயரே, நீர் அன்று கூறியனவெல்லாம் உண்மையாயிற்று. நீரே புத்திசாலி. உம்மைக் கலந்தாலோசிக்காமல் செய்தது என் தவறு. நமது பொய்யில் புலவர். "இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன், கெடுப்பா ரிலானுங் கெடும்." என்ற வாக்கு பொய்க்குமா? இடித்திடித்துப் புத்தி புகட்டும் அமைச்சர் நீர் இருந்தும், உம்மறிவைப் பயன் படுத்திக்கொள்ளாது போனது எனது தவறு. இதற் கென் செய்யலாம்? மாசற்ற நங்குலத்திற்குப் பெரும் பழி வந்துவிட்டதே!

சாலங்காயன் :—அரசரே, உலகியல் அறிந்தே தங்களிடம் அப்பொழுது, தத்தைக்கு உதயணன் ஆசானாக அமைவது பற்றி ஆட்சேபித்தேன். காரியம் மிஞ்சி விட்டது. அதைப்பற்றிப் பேசிப் பயனென்ன? நாம் உதயணன் கப்பம் கட்டவில்லை யென்ற காரணத்தால், காட்டில் மாய யானையைக் காட்டி, அவனைக் கட்டி, இங்குக் கொணர்ந்து சிறைப்படுத்தினோம். எனது

யோசனையால் இப்படிச் செய்தோம். யூகியோ உதயண னுக்கு மந்திரி மாத்திரமல்லன்; இன்னுயிர்த் தோழனு மாவான். அவர் இருவரும் ஈருடல் ஓருயிர்போல் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, யூகி தன் மதிவன்மை யால் மன்னனை மீட்டது மாத்திரமல்லாமல், வாசவதத் தையையும் எடுததுச் சென்முன். இதற்கினி வருந்துவ தால் பயனில்லை; படையெடுத்துச் செல்வதாலும் பய னில்லை. நமது பண்டை நாகரிகத்தில், அகத்திணைத் துறைகளுள் உடன்போக்குத்துறையென்பதும் ஒன்று. அதன்படி உதயணன் செய்து விட்டான். நமது அர சிளங் குமரியின் முழுச்சம்மதத்தின் பேரிலேயே இது நடந்திருக்கும். ஆகவே இதில் வருந்த வேண்டியது ஒன்று மில்லை. நம் குலத்துக்கு இதனுல் இழிவுமில்லை. அவனும் மாசறு குலத்து வந்தோன்; மாண்புறு குணத்தன்; குலத்தாலும் பிறப்பாலும் உயர்ந்தவன் தான். உதயணனைப் போன்ற உத்தமன் நமது பெண் ணுக்கு மணமகனுக வாய்த்தல் அரிதினும் அரிதே. "நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம், விதியின் பயனே பயன்." என்றபடி இன்னருக்கு இன்னர்தான் வாழ்க்கைக்குரியார் என்று நான்முகன் முற்கூட்டியே எழுதிவிடுகின்முன். அவன் எழுத்தை மாற்ற எவரால் முடியும்? அந்த வேதாவிற்கே முடியாது. ஆகவே நமது குலக்கொடி தத்தை, நல்ல இடத்திற்போய்ச் சேர்ந்ததற்கு நாம் மகிழ வேண்டுமே யன்றி, வருந்து வதால் பயனில்லை.

பிரச்சோதனன் :—மந்திரீ, உமது அறிவுரைகள் என்னை அகம் மகிழச் செய்தன. நீர் இவ்வளவு கூர்ந்த மதியினர் என்பது இன்றுதான் உணர்ந்தேன். உமது வார்த்தை

களால் ஒருவாறு மனந்தேறினேன். கௌசாம்பியில், வாசவத்தைக்கு மணவினை நடக்குங்கால், யாமனை வரும் சென்று, அதை இன்பகரமாய் முடித்து வர வேண்டுமெனவும் நிச்சயித்தேன்.

சாலங்காயன் :—அரசரே, தங்களின் சமயோசித புத்திக்குச் சந்தோஷம். தங்களைப் போன்ற தந்தைமார்கள் உலகில் வாய்ப்பதரிது. மலையின் உச்சியில் விளையும் நாரத்தங்காய் மலைமேலே யிருந்துவிடுவதில்லை, கடலில் விளையும் உப்புடன் கலந்தே தீரும். சந்தனம், அரைத்தால்தானே கமழும். யாழ் எவ்வளவு அழகியதாக இருந்த போதிலும், அதைமீட்ட ஒருவர் வேண்டுமல்லவா? ஆகவே, நமது செல்விக்குக் கண்ணிறைந்த கணவன் வேண்டியதே. அதிலும், உண்மையான காதல் மணம் மிகவும் உசிதம். தாய் தந்தையர்கள் தங்கள் இளங் கன்னியர்களை வற்புறுத்தி, அவர்கள் முன்பின் அறியாத காளையர்களிடம் ஒப்பிக்கின்றார்கள். அத்தகைய மணத்தால் விளையுந் தீமைகள் யாம் அறிந்தவையே. ஆகவே, தாங்கள் உடனே மனந் தேறியதும், கௌசாம்பிக்குச் செல்வோ மென்றதும் எனக்கு மகிழ்ச்சி யளிக்கின்றன.

பிரச்சோதனன் :—அமைச்சரே, நீர் சமாதானமாக கௌசாம்பி நகர்க்கிறைவனாகிய உதயணனுக்கு மிகவும் மரியாதையாக ஒரு திருமுகம் எழுதிக் கொண்டு வாரும். அதில் மணவினை நாளைக் குறித்து எழுத மறக்க வேண்டாம். என்ன யெழுத வேண்டுமென் பதைப் பற்றி உமக்கு யான் ஒன்றுங் கூறத் தேவை இல்லை. ஆண்டிலும், அனுபவத்திலும், அறிவிலும் என்னைக் காட்டினும் நீர் சிறந்தவர். ஆகவே நீரே

எழுதிக் கொண்டு வாரும். அதில் யான் கையொப்ப மிடுகின்றேன்.

சாலங்காயன் :—அரசரே, அப்படியே ஆகட்டும். எழுதிக் கொணருகின்றேன். தாங்கள் கையொப்பமும், முத்திரையு மிட்ட பின்னர், கௌசாம்பிக்கு அனுப்புவோம். இன்ப துன்பத்தில் மனந்திரியாது இருத்தல் ஞானியின் இலக்கணமாகும். எல்லாம் ஈசன் செயல். அவனன்றி யோரணுவும் அசையாது. இவ்வுண்மைகள் தாம் நமது வாழ்வில் மகிழ்ச்சியும் சாந்தியும் உண்டு பண்ணும்.

[அரசரிடம் விடைபெற்றுச் சாலங்காயர் போய்விடுகின்றார். மன்னரும் வேறு விஷயத்தில் கருத்தூன்றிச் சென்று விடுகிறார்.]

---

## இரண்டாங்களம்

இடம் :—சயந்திநகரம்

காலம் :—காலை

பாத்திரங்கள் :—உதயணன், பெருங்கணி, வள்ளுவன்

உதயணன் :—நகர மக்களே, நீங்களனைவரும் ஒருமுகமாக என்னையும், வாசவதத்தையையும் மனமுவந்து வரவேற்றமைக்கு மிகவும் மகிழ்கின்றேன். உங்களனைவருக்கும் எமது நன்றி யுரியதாகுக.

நகர மக்கள் :—தெய்வ யானையைத் தேடிப் பெறுவதற்காகச் சேனையின்றித் தனியே சென்று, பகைவனாற் பற்றப்பட்டு, உச்சைனி சென்று வதிந்து, பகைவனை வென்று அப் பகைவனுடைய செல்வப் புதல்வியை

செங்கரம் பற்றி அழைத்துக்கொண்டு வந்த ஆண் சிங்கமே, நெடிது வாழ்க. திருமால் மார்பைச் சார்ந்து இன்புற்றிருக்கும் திருமகள்போல, எங்கள் அரசனைச் சார்ந்து இன்புறுதற்கு முற்பிறப்பில் தவஞ் செய்த புண்ணியப் பாவையே, வாழ்க.

உதயணன் :—நகரமக்களே, உங்கள் நன்மையை நாடி நாடாள்வதே எமது கடமை; உங்களை என் கண்களே போல் கவனிக்கின்றேன், போய்வாருங்கள்.

[காவலாளியைக் கூப்பிடுகின்றான்.]

காவலாளி :—வத்தவர் பெரும, ஏவலை எதிர்நோக்கி நிற்கின்றேன்.

உதயணன் :—காவல, நீ சென்று பெருங்கணியை அழைத்து வா.

[சென்று பெருங்கணியைக் கூட்டி வருகின்றான்.]

பெருங்கணி :—அரசர் பெருமானே, நமஸ்காரம். அவ்விடத்துக் கட்டளை யென்னவோ? தெரிவித்தருள வேண்டுகிறேன்.

உதயணன் :—பெருங்கணியே, நாம் வாசவதத்தையைத் திருமணம் புரிதற்கேற்ற நன்னாளை ஆய்ந்தறிவித்தல் வேண்டும்.

பெருங்கணி :—இறைவரே, இதோ, தங்கள் கட்டளைப்படி ஏற்றதொரு நாளை இப்பொழுதே தெரிவிக்கின்றேன்.

[பஞ்சாங்கத்தைப் பார்த்து நல்ல நாளைக் குறிப்பிடுகின்றான்.]

உதயணன் :—காவல, வள்ளுவ முது மகனை அழைத்து வா.

[வள்ளுவ முது மகன் வருகின்றான்.

வள்ளுவன் :—மன்னர் மன்னரே, நமஸ்காரம். தங்களுடைய ஆஞ்ஞை யாதோ?

உதயணன் :—வள்ளுவ, இற்றைக் கேழாநாள், எமக்கும் உச்சைனி நகர மன்னன் பிரச்சோதனன் மகள் வாசவதத்தைக்கும் திருமணம் நடைபெறும் என்ற செய்தியை நகர மக்கட்குப் பறையறைவித்துத் தெரிவிப்பாயாக.

வள்ளுவன் :—அரசர் பெருமானே, உத்தரவு. போய் வருகின்றேன். (யானைமீதிருந்து வீதிகடோறுஞ் சென்று மணமுரசறைந்து நகரத்தாரெல்லாரும் அறியும்படி) அரசன் வேல் வெற்றி பெற்று விளங்குக; பூமகள் புணர்க; மண்மகள் மலிக நகரத்தீர், நான் கூறுவனவற்றைக் கேளுங்கள்; பாவச் செயல்களை நீக்கித் திருவையுடையீராய்ப் புகழ் பெற்று விளங்குங்கள்; பிரச்சோதன சக்கரவர்த்தியின் குலமகளாகிய வாசவதத்தையை நம்முடைய அரசர் பெருமான் மணஞ் செய்யும் நாள் இற்றைக்கு ஏழாநாளாகும். (என்று முரசறைகின்றான்.)

[உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அதன் பிறகு உதயணனும் வாசவதத்தையும் அரண்மனையில் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாமல் மிக்க காதலையுடையவர்களாய் வாழ்ந்து வருவாராயினர்.]

மூன்றுங்களம்

இடம்:—புட்பக நகரம்

காலம்:—நள்ளிரவு

பாத்திரங்கள் :— யூகி, இடவகன், சாங்கியத்தாய்

யூகி :—இடவகா, யான் உச்சைனினின்றும் இயந்திர வண்டியாகிய பொறியினியங்கும் வையத்தைக் கைக்கொண்டு, எனக்கு வேண்டுவனவெல்லாம் எடுத்துக்கொண்டு, சாங்கியத்தாயையும் என்னுடன் அழைத்துக்கொண்டு வந்தேன். அன்பனே, யானைமாயத்தாற் பிடியுண்டு சிறையிலகப்பட்ட உதயணனை விடுத்தல் வேண்டி, நான் இறந்துவிட்டதாகப் பொய்ச் செய்தி பரப்பி, உச்சைனியை யடைந்தது முதலிய செய்திகளை யெல்லாம் சொல்லக் கேட்டனை யன்றோ?

இடவகன் :—யூகி, "கெட்ட காலை விட்டன ரென்னுது நட்டோ ரென்பது நாட்டினை நன்று". நீயே உத்தம நண்பன்.

யூகி :—இடவகா, உதயணன் நீர்விழாவின் கண்ணே வாசவதத்தையைப் பிடிமீதேற்றி வந்த பின்னர் நிகழ்ந்த செய்திகளைச் சொல்.

இடவகன்:—அன்ப, உதயணனையும், வாசவதத்தையையும் ஏற்றிவந்த பத்திராவதியென்னும் பிடி, ஐந்நூறெல்லையளவும் ஓடிப் பாலைவனத்தில் வீழ்ந்து உயிர் நீத்தது. அவ்விருவரும் பகற்காலத்தை ஒரு மரத்தடியில் கழித்தனர். இரவில் படைகளைத் தொகுத்துச் செல்ல வயந்தகன் என்னிடம் வந்தான். உதயணன் வாசவதத்தையைப் பாதுகாத்துக்கொண்டு தனியே அங்கிருந்

தனர். பொழுது புலர்ந்த பின்பு அக்காட்டிலுள்ள சவரர், புளிஞர் ஆகியோர் உதயணனுடன் போர் செய்யத் தொடங்கினர்; அவ்வேடர்களைப் பொருது விரட்டி விட்டோம். பிறகு, அவ்விருவரையும் சயந்தி நகரம் அழைத்துச் சென்றோம்.

யூகி:—இடவகனே, அவ்விருவரும் சயந்தி நகரத்தில் என்ன செய்கின்றனர்?

இடவகன்:—யூகியே, சயந்தி நகரத்தில் அவ்விருவருக்கும் முறைப்படி மணஞ் செய்வித்தோம். உதயண மன்னர் வாசவதத்தையோடு இன்புற்று வாழ்கின்றார்.

யூகி:—நண்பனே, நமது மன்னர் மணமுடித்துக்கொண்டது மகிழ்ச்சிக் குரியதே. கௌசாம்பி நகரை ஆருணி கைக்கொண்டிருக்கின்றானே அதை மீட்பதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்துள்ளாரா? அல்லது அதைப்பற்றி யோசனையாவது செய்திருக்கிறாரா? என்றைக்காவது அதைப்பற்றி உன்னிடம் பிரஸ்தாபித்திருக்கிறாரா?

இடவகன்:—நண்பா, உதயண மன்னர் பகல் இரவாவதும், இரவு பகலாவதும் அறியார். ஆருணி, கௌசாம்பியைக் கைப்பற்றி யிருப்பதுகூடத் தெரியாது. தம்பிமாராகிய பிங்கல, கடகரையும் நினைக்கின்றாரில்லை. நகுடராசனைப் போலக் காமவின்பம் ஒன்றையே நினைந்து, அதனையே பாராட்டிக் கொண்டு பிறர் எதையும் தெரிவித்தற்குச் சமயங் கொடாராயினர். வாசவதத்தைதான் அவருக்குச் சகலமும். ஒரு கணங்கூட அவளை விட்டுப் பிரிவதில்லை. மாரன் அரசொழிய மற்றோர் அரசில்லை. சர்வமும் மாரன் மயமாகக் காணப்படுகின்றது. இதற்கென் செய்யலாம்?

யூகி :—அன்ப, அரசர் இதுகாறுந் துன்புற்றிருந்தவர். ஆகவே, அவர் இடைவிடாமல் இன்பத்தை நுகர்வது இயல்பே. நம்முடன் வந்த சாங்கியத்தாயை இங்கு அழைப்பாயாக.

[இடவகன் சாங்கியத்தாயை அழைத்து வந்து யூகியின் முன் இருக்கச் செய்கின்றான்.]

சாங்கியத்தாய் :—யூகியே, நாம் எப்பொழுது இங்கிருந்து புறப்படுவோம்? நாம் எங்குச் செல்ல வேண்டும்? இதுகாறும் நீ யுன்னுயிர்த்தோழன் உதயணன் பொருட்டு அளவற்ற துன்பத்தை யனுபவித்தாய். வழியில் பிரயாணத்தொல்லையால் வாடினாய். நமக்குப் போக்கிடம் எங்கே? அங்குப்போய் ஓய்வெடுக்க என்மனம் அவாவுகின்றது.

யூகி :—தாயே, நமதுமன்னர், மங்கை நல்லாள் இன்பத்தில் மயங்கிக் கிடக்கின்றார். பிரச்சோதன மன்னனுடைய சிறையில் கட்டுண்டு கிடந்தவரைச் சிறை மீட்டோம். இப்பொழுது அவனது மகள் வாசவதத்தையின் அன்பால் கட்டுண்டு, தம் கடமையையும் மறந்தொழுகுவாராயினர். அவரை இனி மேலும் பாதுகாத்தல் உமது கடமையாகும்.

"அற்றங் காத்தலின் ஆண்மை போலவும்,
குற்றங்காத்தலின் குரவர் போலவும்,
ஒன்றியொழுகலின் உயிரேபோலவும்,
நன்றியன்றிக் கன்றியது கடிதற்குத்
தகவில செய்தலிற் பகைவர் பொலவும்"

ஒழுகுதல் அன்பரது செயலென்பது நீரறிந்ததே. உதயணன், ஐம்புல வின்பச் சேற்றுள் அழுந்திக்கிடக்கிறார். அவரை யெப்படியாவது மீட்டல் வேண்டும்.

சாங்கியத்தாய் :—யூகி, நீ சொல்வதனைத்தும் அறிந்தேன். இதற்குத் தக்கதொரு மார்க்கம் நீதான் சொல்லவேண்டும். நீ அறிவிற் சிறந்தவன். சமயோசித புத்தி சாதுரியம் இயற்கையிலே நன்கு வாய்க்கப் பெற்றவன். ஆகவே, நீயே யொரு யோசனை கூறு.

யூகி :—தாயே, எனக்கு ஒன்று தோன்றிற்று. அதை யானும் மற்றைய தோழர்களுஞ் சேர்ந்து பலவாறு பரிசிலனை செய்து ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். அதைத் தங்கட்குச் சொல்லுகின்றேன்.

சாங்கியத்தாய் :—யூகி, நீ சூழ்ந்து செய்வதற்கு மற்றொரு சூழ்ச்சியும் உண்டோ? நீங்களெல்லாம் சேர்ந்து யோசித்துள்ளதைக் கூறு. யான் என்ன செய்ய வேண்டுமென்பதைப் புலப்படுத்து. அதையவ்வாறே முட்டின்றி முடித்துத் தருகின்றேன், உதயணனுடைய நன்மையை நாடுவதில் உன்னைவிடச் சிறந்தவர் உலகில் யாருமில்லை. இஃதுறுதி. ஆகவே என்னிடம் உங்கள் சூழ்ச்சியைத் தெரிவிப்பாயாக.

யூகி :—தாயே, இலாவாண நகரத்தின் பக்கத்தே யுள்ள மலையைச் சேர்ந்த சோலையொன்றில் அவரை உண்டாட்டு அயருமாறு செய்வித்து, அவர் அங்ஙனம் செய்யும் நாட்களுள் ஒருநாள் வாசவதத்தையை அவர் பிரியும்படி செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பிரிந்து சென்ற பொழுது, அவர் இருந்த வீட்டைத் தீக்கிரையாக்கி, வாசவதத்தையை சுருங்கை வழியே யழைத்து வந்து நீங்கள் என்னிடம் சேர்க்கவேண்டும். நெடுந்தூர வழிப் பிரயாணத்திற்காக வைத்திருந்த அவலை உண்டு, விக்கல்தோன்றி, யூகி இறந்துவிட்டான் என்பதையும் அவருக்குச்சொல்லி, அவரை அரசாட்

சிக்கு உரியவராகச் செய்தல் தங்களுடைய கடமை. இது நாங்கள் எல்லாரும் ஆலோசித்த செய்தியாகும்.

சாங்கியத்தாய்:—யூகி, உனது யோசனை சாலச் சிறந்தது. அதன்படியே செய்யக் காத்திருக்கின்றேன். உதயணன் நன்மையைக் கருதிச் செய்வதால், நாம் கையாளும் உபாயங்கள் கொடூரமானவையாகத் தோற்றினும் பாதகமில்லை.

யூகி:—தாயே, இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் பொய் வதந்தியை யுண்டுபண்ணிவிட்டு, யான் இந்நகரத்தருகே இருந்து ஆவன புரிவேன்.

[யூகி அவலையுண்டு விக்கி இறந்தவன்போலத் தன்னைப் புலப் படுத்துகிறான்.]

இடவகனும், ஏனையோரும்:—ஆ, இன்னுயிர்த்தோழா, நீ இறந்தபின் உயிர்தரித்திரோம். "பசைந்தாரில் தீர்தல் தீப்புகுதல் நன்று," என்பதுபோல, எம்முயிரை விட்டுவிடுதலே மேல். ஆனால், நமக்கு விதித்த நாட்களைக் குறைக்கவும் கடக்கவும் நம்மால் ஆகாது. என் செய்வது? விதியை யாரால் வெல்ல முடியும்? சிறந்த அறிவுடையவனாகிய இவனுடலைச் சுடுதல் முறையன்று; இவனுடம்பைக் கங்கையாற்றில் இடுவதுதான் முறை.

[அவனுடைய உடம்பைப் பிறரறியாமல் மறைத்து வைக்கின்றனர்.]

சாங்கியத்தாய்:—இடவகா, யான் செய்ய வேண்டியதைக் கூறுவாயாக.

இடவகன்:—தாயே, நீர் சென்று முன் போலவே அரசரிடத்தும், அரசியிடத்தும் அன்போடு பழகவேண்டும்;

யூகி கூறியவற்றை உரியகாலத்தில் நிறைவேற்ற வேண்டும்.

[சாங்கியத்தாய் சயந்தி நகரம் அடைகிருள்.]

---

## நான்காங்களம்

இடம் :—சயந்தி நகரம்

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—உதயணன், சாங்கியத்தாய், வாசவதத்தை, யூகி

உதயணன் :—(சாங்கியத் தாய் வருவதைப் பார்த்து இருக்கை விட்டெழுந்து நின்று) தாயே, வரவேண்டும். வரவேண்டும். தங்கள் திருவடிகளுக்கு அநேக நமஸ்காரம். எங்கிருந்து வருகிறீர்கள்? எவ்வாறு வந்தீர்கள்? இவ்வாசனத்தில் அமரவேண்டும்.

[அவன் ஓராசனத்தைக்காட்ட அவள் அமருகிருள்.)

சாங்கியத்தாய் :—உதயண, யான் நேற்று மாலை உன் தோழர்களுடன் புட்பக நகரம் வந்து சேர்ந்தேன். உன்னையும், குழந்தை வாசவதத்தையையும் காணும் பேரவாவினுல் இங்கு வந்துளேன்.

உதயணன் :—உத்தம நண்பர்களின் கடமையை உணர்ந்து முடித்துதவிய அருமை யூகி நம்முடன் வந்திலனே?

சாங்கியத்தாய் :—நீ வாசவதத்தையைப் பிடியின் மேலேற்றிக் கொண்டு வந்தனை யன்றே! அதே இரவில் அங்கே போர்புரிய வந்த வீரர்களை யெல்லாம் வென்று, அந் நகரின் அகத்தும் புறத்து முள்ளார் கூறியன யாவுங்

கேட்டு, அதற்கேற்ப மேற்கொண்டு செய்ய வேண்டிய வற்றை யெல்லாம் செய்வித்ததும், உடனே இருட் காலத்திலே மறைந்து, பிறர்காணு வகையில் இயந்திர வைய மொன்றில் என்னையும் ஏற்றிக்கொண்டு இப்பால் வந்து பாதுகாப்பு மிக்க இடமொன்றில் என்னை இருக்கச் செய்து, "வேடர்களின் உறையுளாகிய இவ் விடத்தில் செய்தற்குரிய காரியங்களைச் செய்து வருவேன். நீர் அரசரை யடையும்," என்று கூறிய பின்னர் யானிவண் வந்துள்ளேன்.

உதயணன் :—தாயே, நீங்கள் வாசவத்தையைப் பார்த்து வாருங்கள். (வாசவதத்தையைக் காணச் செல்கின்றாள் சாங்கியத்தாய்.)

வாசவதத்தை :—(சாங்கியத்தாய் வரக்கண்டதும் திடுமென எழுந்து) தாயே நீங்களா? வாருங்கள். வாருங்கள், தாயே! இளமை தொடங்கி என்னை மிகப்பிரிய மாய் வளர்த்த அருமைச் செவிலித் தாயே, (அவளைக்கட்டித் தழுவி யுவகைக் கண்ணீர் ததும்ப, தழுதழுத்த குரலுடன்) என்னை விட்டுப் பிரியாத இத் துணை அன்பு மிக்க உங்களிடம் விடைபெறுதும், உங்களுக்கு அறிவியாதும் வந்து விட்டேனே! (நற்றாய், தோழியர் முதலியோரை நினைந்து கண்ணீர் விடுகின்றாள்)

சாங்கியத்தாய் :—கண்ணே, தத்தாய், வருந்தவேண்டாம். வருந்தவேண்டாம். பிறந்த வீட்டினரையே நினைந்து பெரிதும் வருந்துதல் வேண்டாம் குழந்தாய். இவ்வாறு அவலங்கொள்ளுதல் நம்மனைய மங்கல மகளிர்க்கு மரபன்று; மாண்புமன்று. இதோ, இங்கேவா. அதோ தெரிகின்ற கட்டுமலையைப் பார். அதில் ஏறுவோம் வா.

(இருவரும் கட்டுமலையில் ஏறுகின்றனர்.) நங்கையே, பார்ப்பாயாக. அதோ தோன்றுகின்றது பார் நினது தந்தையாம் அரசர் பெருமான் நகரம்! அணித்தாகத் தோன்றுகின்ற தல்லவா? இன்னும் என்ன கவலை? கவலையை விடுவாய் கண்ணே.

வாசவதத்தை:—தாயே, தங்களைக் கண்டதும் நமது நகரமும் அரண்மனையும், நற்றாய், தோழியர் முதலிய யாவரும் எனது அகக் கண்முன் தோன்றினர். அதனால் தானம்மா என்னை யறியாமலே கண்ணீர் விடலாயினேன். நீங்கள் என்னைவிட்டு என்றும் பிரியாது இங்கேயே என்னுடன் இருந்து விடுங்கள் அம்மா; ஆம், அப்போதுதான் எல்லோரையும் பிரிந்த சோகம் ஒருவாறு நீங்கும். இருங்களம்மா.

சாங்கியத்தாய்:—தத்தையே, உனது வருங்கால நன்மை கருதி யான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுதல் நல்லதம்மா. கேட்டதை நீ பிறரறியாது மனத்திடை வைத்திருந்து உரியகாலத்தில் ஏற்ற முறையில் அதன்படி நடந்து கொள்ளவேண்டும். அதுதான் உனக்கழகும், கடமையுமாகும். மறுது உடன்படுவாயல்லவா?

வாசவதத்தை:—தாயே, தங்கள் மாற்றத்திற்கு எதிர்மாற்றம் என்னிடம் என்றுமில்லையே! நீங்கள் கூறுவதெதுவும் எனது நன்மைக்கே யென்று நன்கு உணர்வேன். எதுவாயினும் சரி, சொல்லுங்கள்; தயங்கவேண்டாம். "நிறையெனப் படுவது மறை பிறரறியாமை," யாகலின் நீங்கள் கூறுவதை எனது நிறையாற் காத்து மனத்திடைவைத்து வேண்டியவற்றை வேண்டும்போது முடித்துவைக்கிறேனம்மா, தயங்காது கூறுங்கள்.

(சாங்கியத்தாய் மறைவாக யூகி கூறியவற்றை அறிவிக்க, தத்தையும் உணர்ந்து உடன்படுகின்றாள்.)

[பின்னர் சாங்கியத்தாய் யூகிபாற் சேருகின்றாள்.]

யூகி:—தாங்கள் உதயணனையும் வாசவதத்தையையும் பார்த்தீர்களா? நமது "அழற் கருமம்" பற்றிக் கேட்டு வந்தீர்களா? தத்தையாரின் உடன்பாடு கிடைத்து விட்டதல்லவா?

சாங்கியத்தாய்:—ஆம் யூகியே, கருதிச் சென்றவாறே கண்டனன். கூறவேண்டியவற்றையும் கூறினேன். தத்தையும் நமது சூழ்ச்சிக்கு உடன்பட்டுவிட்டாள். இனிச் செய்யவேண்டுவது யாதோ?

யூகி:—தாயே, இதோ ஒரு படம் உளது, இதனையெடுத்துச் சென்று உதயணனிடம் கொடுங்கள். இது அவள் வடிவம் போன்றது. இப்படத்தின் நான்கு கண்களுள்ளும் மேலேயுள்ள கண் மழுங்கியதாகத் தீட்டப்பட்டுள்ளதல்லவா? இதை உதயணனிடம் காட்டுங்கள்.

(அவள் உதயணன்பாற் சென்று அப்படத்தைக் கொடுக்கிறாள்)

உதயணன்:—(படத்தைப் பார்த்தவாறே) தாயே, இப்படம் நன்கு வரையப்பட்டுள்ளது. மிகவும் நுட்பமான ஓவியத்திறனுடன் விளங்குகின்றது. மக்கள் உறுப்புகளுள், "அடிகளே ஆட்கள்; தோள் மனைவி; பல் மக்கள்; கண் தோழர்; தலை இருமுது குரவர்," என்று நூல்கள் கூறுகின்றன. ஆனால், இப்படத்தில் வரையப் பட்டுள்ள கண்கள் நான்கனுள் மேலாய கண் மழுங்கித் தோன்றுகின்றதே! நம்முடைய தோழர் நால்வருள்

மேம்பட்டவனை யூகிக்கு ஏதோ துன்பம் வந்துளதற் கறிகுறியா ஈது? தாயே யூகிக்கு ஏதேனும், இடர்ப் பாடு ஏற்பட்டதா? விரைந்து கூறுங்கள். என் மனம் தடுமாறுகின்றதே.

சாங்கியத்தாய் :—உதயண, உன் யூகம் சரியே. அவன் உச்சைனியிலிருந்து வருகையில் அவலையுண்டு விக்கி இறந்துபோயினன். உன்னிடம் தெரிவிக்க அஞ்சியே, முன்னர் உன்னைக் கண்டபோது இவ்விஷயத்தைத் தெரிவிக்கவில்லை. உயிருடன் இருப்பதாகவும் பொய் புகன்று மழுப்பிவிட்டேன். எனினும் இப்போது கூற நேர்ந்துவிட்டது.

உதயணன் :—யூகியே! என்னருமைத் தோழா! இளமை தொட்டு என்பால் தாயினும் அன்புடையாய்! என்னை விட்டுத் தனித்தேகினையே! இது முறையோ? பிரச் சோதனன் காட்டில் மாய யானையால் என்னைக் கட்டிச் சென்றதைக் கேட்டு, நீ செய்த சபதப்படி என்னை மீட்டதோடு, வாசவதத்தையையும் என்னுடன் அனுப் பினையே! மீண்டும் என்முகம் பாராது சென்றனையே! இஃதென்ன நீதி?

அறிஞர்கள் :—அரசர் பெருமானே, நீங்கள் இவண், விரோதிகளுக்குமுன் வருந்துதல் இறைமையன்று; முறைமையுமன்று. தளர்ச்சியின்றி இருத்தல் வேண்டும். நல்வினை துணைசெய்யின் யூகியைப் பெறுதலுங் கூடும்.

உருமண்ணுவா :—அரசரேறே, தாங்களா இவ்வாறு வருந்துவது! வருந்துவதாற் பயனேதுமுண்டோ? நாளுக்குநாள் உடல் இளைத்துப்போகும்; 'கவலை யுடையார்க்குக் கண்ணுறக்க மில்லை,' என்றபடி தங்கள்

உறக்கமும் கெட்டொழியும். உறக்கமின்றேல் உடல் நலமேது? மனத்தளர்வும் உடன் வரும். இதனால் பகைவர்கட்கும் நகைப்புக்கிடம் உண்டாக்குவதாகும். கவலையை விடுங்கள். (சற்று யோசனை செய்வதுபோல் நடிக்கிறான்.) ஆம். இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. விபுலகிரிப் பக்கம் ஒரு முனிவர் இருக்கின்றார். அவர் முக்காலமு முணர்ந்த முழு ஞானி. அவர்பால் நம் குறைகளைக் கூறின், ஒரு வழி காட்டித் துன்பத்தைப் போக்கி விடுவார். ஆகலின், அம்மலைச்சாரற் கருகே ஒருண்டாட்டயரச் செல்வோமாயின், உமது மனமும் சற்று அமைதியடையும்; முனிவர் அருளும் கிடைக்கும்.

உதயணன்:—தோழா, நீயும் ஏனைய ஆருயிர்த்தோழர்களும் எப்பொழுதும் என் நலமே நாடி வந்திருக்கின்றீர்கள். அதனால் எண்ணற்ற இடையூறுகட்கும் உட்பட்டீர்கள். நீங்கள் கூறுவனவும், செய்வனவும் எனக்கு நன்மை புரியத் தக்கனவாகவே இருக்கும். ஆகவே, உங்கள் கருத்துப்படியே எங்கேனும் சென்று மீண்டால், என் மனநோயும் ஒருவாறு தீரலாம். உங்கள் விருப்பப்படியே உண்டாட்டயர்தற்கு ஆவன செய்வோம்.

[உதயணனும் நண்பரும் ஆடவர், மகளிர் சூழ இலாவாண நகரருகே சேர்ந்து ஆடல், பாடல், நீர் விளையாட்டு முதலிய விநோதங்களில் ஈடுபடுகின்றனர். காலம் விரைகின்றது.]

---

## ஐந்தாங்களம்

இடம் :—இலாவாண நகர்ப்புறத்தே ஒரு முனிவர் ஆசிரமம்

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—முனிவர், உதயணன், உருமண்ணுவா, விரிசிகை

முனிவர் :—(தம் முன்வந்த உதயணனுக்கு இருக்கை யளித்து) மன்ன, உன் குலப் பெருமையையும் குடிப் பிறப்பையும் உணர்ந்தேன். நீ மரத்தின் அடியைச் சார்ந்து நிற்கையில், நீ பிடித்திருந்த வெள்ளைப் பூ ஒன்று நின் கை தவறிக் காலில் வீழ்ந்ததே, அதன் பலன் இன்னதென அறிவையோ?

உதயணன் :—முனி சிரேஷ்டரே, தங்கள்பால் எங்கள் எதிர் காலத்தை யறியவே நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். என் கையினின்றும் நழுவிய மலரின் பயனை அறியும் ஆற்றல் எமக்கேது? முக்காலமும் உணர்ந்த தாங்களே கூறியருள வேண்டும்.

முனிவர் :—அரசிளங்குமர, நீ இங்கு வந்ததும் கீழே அமராமல், பசுமரத்தைச் சார்ந்திருந்தமையால், அது நின் உயிர்த்தோழன் உயிரோடிருத்தலையும், அவன் பின்னர் வந்து உன்னை அடைதலையும் புலப்படுத்தும் நற்குறியாம். இது நிச்சயம்; கவலற்க. கைப்பற்றிய வெண்பூவின் வீழ்ச்சி, நீ இப்போது அனுபவிக்கும் போகத்திற்கு இடையூறு வருதலைக் காட்டும். வீழ்ந்த அவ் வெண்மலரும் சேய்மையில் வீழாமல், நின் காலடி

யிலேயே தங்கினமையால், இழந்த போகம் மீண்டும் உனக்குக் கிட்டும் என்பதிற் சற்றும் ஐயமில்லே.

உதயணன் :—முனி புங்கவரே, தங்கள் மொழிகளால் ஒருவாறு ஆறுதலடைந்தேன். தாங்கள் கூறியன யாவும் நிகழ்வது நிச்சயம் என்றும் நம்புகின்றேன். தங்களைப் போன்ற பெரியார்கள் தரிசனத்தால் பெறற்கரிய பலன் உண்டு என்பதை நன்கறிவேன். அநேக நமஸ்காரம். விடைபெற்றுக் கொள்கின்றேம்.

[உருமண்ணுவா முதலியவரோடு தான் தங்கியுள்ள இடத்தை யடைகின்றன்.]

உருமண்ணுவா :—இறைவரே, இச்சோலை வளத்தையும், மகளிர் ஆடல் பாடலையும் கண்டும் கேட்டும் மகிழ்கின்றேமல்லவா? நம்முடன் வந்தவர் பலரும் அருவியாடுதல், சுனை குடைதல் முதலியவற்றுள் ஈடுபட்டுள்ளனர். நீரும், பூங்குழை மகளிர் பொன் வள்ளத்தேந்திய தேறலையும், சுவைமிக்க மதுவையும் மாந்துதலாலும், ஒருயிருடைய இருதலைப் புள்ளென வாசவத்தையுடன் இன்ப ஆடல்களில் ஈடுபட்டிருப்பதாலும் மலைச்சாரலின்பத்தைத் திளைக்கின்றீர் அல்லவா? இவ்விடம் இந்திர லோகம்போ லில்லையா?

உதயணன் :—தோழ, நீ சொல்லுவ துண்மையே. உன் யோசனையின்படி இங்கு உண்டாட்டயர்தலுக்கு வாராதிருப்பேனயின், என் மனம் சஞ்சலமற்றிருக்க முடியாது. இப்போது ஒருவாறு மனம் ஆறுதல் அடைந்தது; யூகியும் மீண்டும் வரலாம் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுளது. அதோ தெரிகின்றதே ஒரு ஆசிரமம் அது யாருடையது?

உருமண்ணுவா :—அரசரே, அதுபற்றி வயந்தகன் நன்கு அறிவான். ஆகலின் அவனை யுடன்கொண்டு அங்கு சென்று வருதல் நலமெனக் கருதுகிறேன்.

[வயந்தகனுடன் உதயணன் அவ்வாசிரமம் அடைகிறான்.]

விரிசிகை :—(உதயணனை நோக்கி) ஐயா, தாங்கள் யார்? தங்களைப் போன்ற ஒருவரை இதுவரை கண்டதில்லையே! (தனக்குள்) இவன் அனங்கனே! அழகு வழிகின்றதே! (அன்பு தோன்ற பல்வகை மலர்களை உதயணனிடம் கொடுத்து) ஐய, தங்களன்பு ததும்பும் முகத்தைக் காண அகம் மிக மகிழ்கின்றேன். தயவு செய்து இம்மலர்களைப் பிணையல்களாகத் தொடுத்துக் கொடுப்பீர்களாயின், பாவையும் யானும் அணிந்து கொள்வோம்.

உதயணன் :—(தனக்குள்) இவள் இவ்வனத்துறையும் திருமகளோ! இல்லை. முனிவர் மகளே. (பிறகு அவளை நோக்கி) கொடு. உன் விருப்பம்போல் மாலைகளைத் தொடுத்துக் கொடுக்கிறேன்.

விரிசிகை :—ஐய, தங்கள் அன்புக்கு என் நன்றி. சற்று நேரம் கழித்து வருகின்றேன். அதற்குள் மாலைகளைக் கட்டித் தயாராக வைத்திருங்கள்.

(சற்று நேரம் கழித்து வருகின்றாள்)

உதயணன் :—விரிசிகையே, இதோ மாலைகள். இங்கு என்னருகே வா. உனக்கு அலங்காரமாக இவற்றைச் சூட்டி விடுகின்றேன்.

[அருகில் வருகிறாள். மாலைகளை அவள் உச்சியிலும், தலைப் பக்கத்திலும், மயிர் முடியிலும் அலங்காரமாகப்புனைந்து அனுப்புகின்றான்.]

வாசவதத்தை:—(வெளியே சென்று தழைகளேயும் கண்ணிகளேயும் கொணர்பவள், விரிசிகையைக் கண்டு வியந்து) விரிசிகையே, மிக நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றாயே. யார் உனக்கு இத்தனை யலங்காரம் செய்தவர்?

விரிசிகை:—அங்கோர் அரசிளங்குமரர் உண்டாட்டயர வந்துளார். அவர்தாம் எனக்கு இவ்வொப்பனை இட்டருளினர். அவர் மிகவும் நல்லவர். இவ்வலங்காரஞ் செய்தவர் அவரே. அவர் வாழ்வாராக!

வாசவதத்தை:—சரி, போ. நீ புண்ணியவதிதான். நின்னை யலங்கரித்தவரும் நல்ல புண்ணியவானே. (அவள் சென்றதும் கண்ணீர் வடித்துக் கொண்டு, கையிலிருந்த கண்ணிகளேயும் தழைகளேயும் எறிந்துவிட்டுக் கோபத்துடன் உதயணனிடம் வருகின்றாள்.)

உதயணன்:—தத்தாய், இதுகாறும் எங்குச் சென்றனை? நீ இல்லாமல் இங்கு எனக்கு மிகவும் வேதனையாயிருந்தது. திரு இல்லாத இடம் பாழிடமாகவன்றோ தோன்றுகின்றது! என் தத்தாய், வாடியிருக்கின்றாய்? அழுதனைபோல் தோற்றுகின்றதே? என்ன நேரிட்டது? உடனே உன் குறையை முடித்து மகிழ்விப்பேன், சொல்.

வாசவதத்தை:—அன்பரே, என்னிடம் ஏன் இந்தப் பசப்பு மொழிகள்? சற்று முன் செய்தவை யாவும் எனக்குத் தெரியுமே. விரிசிகைக்கு அலங்காரஞ் செய்துவிட்டீர்களன்றோ! தன்னருகேயுள்ள தாமரை மலரின் கண்ணுள்ள தேனையுண்ணாது, நெடுந்தொலையிலிருக்கும் நெய்தற்றேனை நாடிச் செல்லும் வண்டனையர் ஆடவர்

என்பதை இன்றே கண்கூடாகக் கண்டேன். உங்களை நம்பி மோசம் போனேன். பரமாதரைக் கண்ணெடுத்தும் பாராதவர் எனக் கருதினேன். சரி; எல்லாம் என் விதிப்பயன். பிறரை நோவதாற் பயனில்லை. என்னை உடனே என் தந்தையாரிடம் அனுப்பிவிடுங்கள்.

உதயணன் :—மானே, நீ கோபித்துக்கொள்ளாதே. விரிசிகை தன்னை யலங்கரித்துவிடுமாறு மிகவும் இரந்து வேண்டினள். வேண்டுகோளுக்கிரங்கிக் களங்கமற்ற முறையில் அலங்கரித்து அனுப்பினேன். அதுவும், உனக்கு மனவருத்தமுண்டுபண்ணும் என்று அறியாது செய்துவிட்டேன். அறிந்திருந்தால் நான் ஏன் அவ்வாறு செய்கிறேன்? இதற்கு இவ்வளவு கோபமா? நான் செய்தது தவருயின் என்னை மன்னித்துவிடு.

வாசவதத்தை :—அன்பரே, இதுதான் முதல்தடவை தாங்கள் இப்படிச் செய்தது. இனியும் இம்மாதிரி செய்வீராயின் இலேசில்விடேன். இதனை மன்னித்தேன். இனி மறந்தும் இவ்வாறு செய்வதில்லை என வாக்களியுங்கள்.

உதயணன் :—அன்பே, உன் விருப்பப்படியே ஆகட்டும். இஃது உறுதிதான்; என்னை நம்பு.

[இலாவாண நகர்ப்புறத்தே ஒடுங்கியிருந்த யூகி, அந்நகரத்திலுள்ள அரண்மனைக்கும் தானிருக்கும் இடத்திற்கும் பிறரறியாமல் சுருங்கை வழி இயற்றிப் பின்மேல்நடக்க வேண்டியவற்றை உருமண்ணுவாவுக்கும் வயந்தகற்கும் உணர்த்த, அவர்கள் அவன் கூறியதைச் சாங்கியத் தாய்க்குக் கூறுகின்றுர்கள்.]

சாங்கியத்தாய் :—(உதயணனிடம் வந்து) அரசரே, கொடிய விலங்குகள் உலவும் மலைச் சாரலில் இருந்தால்

ஒரு சமயம் யாதேனு மொன்றால் வாசவதத்தைத் திடு மென அச்சமடைதலும் கூடும்; அது மெல்லியலார் தன்மையன்றோ? ஆதலால் வருமுன் காத்துக்கொள்ள வேண்டிய நாம், இனி இவ்விலாவாண நகரத்துள்ள அரண்மனையைச் சார்ந்திருத்தல் நலமாகுமன்றோ?

உதயணன் :—ஆம் தாயே, தாங்கள் கூறுவது முற்றும் உண்மையே. இப்பொழுதே புறப்பட்டுப் போவோம்.

(எல்லோரும் அரண்மனை யடைகின்றனர்)

---

ஆறுங்களம்

இடம் :—இலாவாண நகர் அரண்மனை

காலம் : —காலை

பாத்திரங்கள் :—உதயணன், வாசவதத்தை, யூகி, சாங்கியத்தாய்

உதயணன் :—(தன்னை நாடிவரும் தோழர்களைப் பார்த்து) தோழர்களே, வாருங்கள்; காலையில் இங்கு வந்ததில் விசேஷமொன்றுமில்லையே ?

தோழர்கள் :—விசேடமொன்றுமில்லை. நாம் இங்கு ஒரு காரியமுமின்றிக் காலத்தை வறிதே கழித்துச் சோம்பி யிருத்தல் சரியன்று. இங்ஙனமிருப்பின் திருமகள் நம்மைப் புறக்கணிப்பாள். ஆதலால், எங்கேனும் சென்று வருதல் வேண்டும்.

உதயணன் :—நீங்கள் சொல்வது சரியே; ஆனால் யான் இப்போது புறப்பட்டுவரச் சௌகரியமில்லை. சிலநாளாகட்டும் பார்ப்போம்.

(சில தினங்கட்குப் பின்னர்)

வாசவதத்தை:—ஆருயிர்த் தலைவரே, தாங்கள் வேட்டஞ் சென்று மீளுங்கால், அரும்பு, மலர், தளிர் புனைந்து அழகிய கண்ணிகட்டி எனக்குக் கொணர்ந்து தந்தருள்க.

உதயணன்:—தத்தாய், இதோ புறப்பட்டேன்; கவலற்க. யாரங்கே? எனது பரிமாவை யணிபூட்டிக் கொணர்க.

[குதிரையிவர்ந்து வேட்டம் புகுகின்றான் வேந்தன். உடனே முன் செய்திருந்த யோசனைப்படியே அமைச்சர்களால் அரண்மனை தீக்கிரையாகின்றது. சாங்கியத்தாய் தத்தையைச் சுருங்கை வழியே யூகி யிருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்லுகிறாள்.]

யூகி:—(வாசவதத்தையை வணங்கி) தாயே, கேட்பாயாக; உமது தந்தை நம் காதலராகிய உதயணனைச் சிறைப்படுத்தினமையால், பாஞ்சாலராயன் கௌசாம்பி நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். உதயணன் சகோதரர்களாகிய பிங்கல, கடகரும் அஞ்சி யோடினர். அஃதறியாத நம் மன்னவர் யாதொரு நினைவுமின்றி, கவலையுமின்றி உம்முடன் இடைவிடாது உறைவாராயினர். பகைவனைக் கொன்று, உதயணனை நல்ல பதவியில் நிறுத்த வேண்டுமாயின், நீ சில காலம் அவரை விட்டுப் பிரிந்திருத்தல் அவசியம் எனப்படுகின்றது. இவ்வரிய வரத்தை நீர் எனக்கருள்க.

வாசவதத்தை:—இது யார்? (சாங்கியத் தாயை நோக்கி) யூகி இறந்து விட்டதாகக் கேள்வியுற்றேனே. என்னுடன் பேசினது யாரோ, தெரியவில்லையே!

சாங்கியத்தாய்:—தத்தாய், இவனே யூகி. அரசனுக்குற்ற அரும் பெரும் நண்பன் இவனே. அரசன் ஆசியல்

கவலையற்று இருப்பதை மாற்றவே இவ்வாறு தான் இறந்துவிட்டதாகப் பெயர் பண்ணிவிட்டபின், இவன் இங்கு வந்து யாவுமியற்றுவிக்கின்முன். நீ அச்சம் நீங்குக.

வாசவதத்தை:—பெறவரும் பெற்றிசால் யூகியே, வந்த தனம். என்னிறைவர் பொய்யானையாற் சிறைப்பட்ட ஞான்று அவரை மீட்பதற்கு மாயவித்தை பலபுரிந்த மாண்பினய்! நீ விரும்பியவற்றைச் செய்க. யான் மனமு வந்து உடன்படுகின்றேன்.

உதயணன்:—(தாரும் தழையும் கண்ணியும் பிணையலுங் கொண்டு மீள்வோன் காஞ்சனமாலை யழுவதைக் கேட்டு விரைந்தோடி வருகின்றனன்.) காஞ்சனே, ஏன் அழுகை? என் காதலிக்கு என்ன நேர்ந்தது? விரைந்து சொல்.

காஞ்சனமாலை:—மன்னர்பிரானே, கொடுமை! கொடுமை! அதனை என்னென்பேன். அரண்மனை தீக்கிரையானது! ஐயோ! எவ்வாறு கூறுவேன்? வாசவதத்தையாம், என்னுருயிர்த் தலைவியும் சாங்கியத் தாயும் சாம்பராயினரே! என் செய்வேன்! (அழுகின்முள்.)

உதயணன்:—ஐயோ! என்னுருயிர்க் காதலி இறந்தனளோ? ஐயோ! தத்தாய், என்னைவிட்டு எங்குச் சென்றுவிட்டாய்? எவ்வாறு பிரிந்தாய்? நின்னழகைக் கண்டும் நெருப்பு உன்னைச் சுடுதற்கும் மனங் கொண்டதே! ஆ! என்ன அநியாயம்? இனி எனக்கு இவ்வறிய வாழ்வெதற்கு? இனியொரு கணமும் தாளேன். இதோ உன்னுடன் யானும் வந்துவிட்டேன். (உன்மத்தனைப்போல் தீயருகே ஓடுகின்முன்.)

மந்திரிமார்கள் :—(அவனைத் தடுத்து) வெற்றி வேந்தரே, நம் பகைவர் மகிழும்படி நீர் இங்ஙனம் நிலை குலைந்து வாடுதல் நீதியோ? யூகி யில்லாவிடில் உதயணனுக்கு யாதும் செயலில்லை என்று பாமரமக்கள் கூறும் சொல் எங்களைச் சுட்டெரிக்கின்றதே! ஆகவே நீர் அறிவிழக் காது ஆற்றலைத் திரட்டி உமது குலத்தைத் தாங்க முற் படுதலே முறைமை யாம்.

உதயணன் :—மதி மிக்க மந்திரிகளே? என் செய்யட்டும்? எனக்கு இவ்வுலக வாழ்வு எதற்கு? எனினும் உங்கள் சொற் கடவாமல் உயிர் தாங்குவேனாக. எல்லாமவன் செயல்!

[யூகி, சாங்கியத்தாய், வாசவதத்தை, பின்னர் உருமண்ணுவாவால் அனுப்பப்பெற்ற காஞ்சனமாலை இந்நால்வரும் மாறுவேடம் புனைந்து அங்க நாட்டிலுள்ள சண்பை நகரில் மித்திரகாமன் வீட்டில் தங்கிக் காலங் கழிக்கலாயினர்.]

---

## அங்கம்—4

### முதற்களம்

இடம் :—இலாவாண நகரம்

காலம் :—பிற் பகல்

பாத்திரங்கள் :—உதயணன், உருமண்ணுவா, இசைச்சன்

உதயணன் :—(தனக்குள்) அந்தோ! இந்திரர் அமிழ்தினு மினிய வாசவதத்தையை யிழந்தேன்! அடிசிற் கினியாள், அன்புடையாள், படிசொல் தவறாத பாவை! ஆ! அவளைப் பிரிந்த பின்னர் இவ்வாழ்வு எற்றுக்கோ? மதி சான்ற யூகியுமிலனே! அவலை யுண்டு விக்கி அவனி

நீத்தனனே! அவளையு மிழந்தேனே! செய்வது யாதெனத் தோன்றவில்லையே! துன்பம் தொடர்ந்து வருகின்றது. பட்ட காலிலே படுகின்றது போலும்! (பெருமூச்சு விடுகிறான்.)

உருமண்ணுவா :—அரசரேறே, தாங்கள் கடந்ததை எண்ணி உளம் வருந்தி உடல் வெம்பி வலி குன்றுவதால் பயனென்ன? "கற்றார்முன் தோன்றா கழி விரக்கம்," என்பது அறிஞர் வாக்கு. ஆகலின் இனிமேல் ஆக வேண்டிய காரியத்தைக் சவனிக்கவேண்டும். நமது கௌசாம்பி நகரத்தை நாமில்லாத காலத்தில் கைப்பற்றி ஆட்சி புரிந்துவரும் பாஞ்சால மன்னன், யூகி இறந்த செய்தி கேட்டதனாலும், வாசவதத்தையின் பிரிவால் தாங்கள் வாடியிருப்பதை அறிந்ததனாலும், இனி தனக்கு யாதொரு தீங்கு முண்டாகாது எனக்கருதி, மிக அலட்சியமாய் நகர ஆட்சியையும் சரிவரக் கவனியாது இறுமாந்துள்ளான். அஃதன்றியும் தன் செல்வச் செருக்கால் குடிகளைப் பேணுக் கொடுங்கோல் ஆட்சியும் அங்கு நடப்பதாகவும் அறிகிறேன். நாம் இவ்வமயம் மகத மன்னன் நட்பையும் படையையும் பெற்றுப் பகைவனை வெல்ல முயலவேண்டும். இஃது உடனே செய்தற்குரியது.

உதயணன் :—நண்பனே, நீ கூறுவதற் குடன்படுதலும் பொருத்தமே. ஆனாலும் யூகியையும் தத்தையையும் இழந்த என்மனம் அரசாட்சி முதலியவற்றில் இனி ஈடுபடாதெனவே தோன்றுகிறது. உலக வாழ்விலேயே வெறுப்புத் தட்டுகிறது.

இசைச்சன்:—வேந்தரே, யான் கூறுவதைக் கேளுங்கள். மந்திரத்தால் முடியாத காரியம் யாதுமில்லை; வாசவ

சத்தை இறந்து வேறு பிறப்பை யடைந்திருப்பினும் பழைய உருவத்தோடு அவளைத் தருவதற்குரிய மந்திர மொன்றுண்டு. இதனைக் கற்று வல்லவனுகிய அந்தணன் ஒருவன் இராசகிரியம் என்னும் நகரத்தில் இருக்கின்முன். அவனை யடைந்து வழி பாடியற்றி வேண்டிஞல் வாசவதத்தையை நாம் பெறுதல் எளிதாகும்.

உதயணன் :—தோழனே, அப்படியும் ஒரு மந்திர முண்டோ ! அம்மந்திரம்வல்ல அந்தணனை இப்போதே நாம் போய்ப் பார்க்கவேண்டும். உடன் புறப்படுதல் நன்று.

உருமண்ணுவா:—இசைச்சன் கூறுவதுண்மை யாகவே இருக்கும். நமது வீரர்களுள் நூற்றுவரைத் தேர்ந்தெடுத்து, வேற்று வேடம் கொள்ளச்செய்து, நாமும் யாத்திரைக்குரிய பார்ப்பன வடிவங்கொண்டு புறப்படுதலே தக்கது.

(உதயணன், உருமண்ணுவா, வயந்தகன், இசைச்சன், நூறுவீரர்கள் யாவரும் மாறுவேடந் தாங்கிப் 'புன்ருளகம்' என்னும் நாட்டையும் காளவனத்தையுங் கடந்து பிறகு கருப்பாச நதியையும் தாண்டிக் கான் வழியே; செல்லுகின்றனர்.)

உதயணன் :—(கலைமான் பாதுகாக்கப் பெண்மான் மருண்டு நோக்கி நிற்றலைக் கண்டு) பிணையே, என் உயிர்த்துணைவி சென்ற இடத்தைக் கூருயா? உன்னை யொத்த என் தோழி உன்னிடம், தான் செல்லும் இடத்தைக் கூறியிருப்பாள். அன்புகூர்ந்து அறிவிப்பா யாஞல், யான் அவளிடம் சென்றுய்வேன்.

(இவ்வாறே வண்டு, புரு, மயில், தென்றல் முதலியவற்றைக் கண்டு தனித்தனியே விளித்து, ஆரற்றிக் கொண்டே செல்கிருன்.)

## இரண்டாங்களம்

இடம்:—மகத நகர்ப்புறம் - தாபதப்பள்ளி

காலம்:—மாலை

பாத்திரங்கள்:—உதயணன், உருமண்ணுவா, காகதுண்டர், பதுமாவதி முதலியோர்

உதயணன்:—(தனக்குள்) நாம் நாடிழந்தோம்; நாயகியை இழந்தோம்; நற்றவக் குரிசில் யூகியையும் இழந்து விட்டோம். இலாவாண நகரைவிட்டு இங்கு வந்தும் அமைதியில்லையே! எவ்வளவு தேறுதல் கூறியும் மனம் சாந்திபெறவில்லையே. இருமுதுகுரவர்களை யிழந்தால் ஓராண்டளவும், மனைவியை யிழந்தால் மற்றொருத்தியை மணங்கொள்ளு மளவும், புத்திரனை யிழந்தால் எப்பொழுதும் துன்பம் நிலை பெற்றிருக்கு மென்றுங் கூறுவார்கள். எமக்கு மற்றொரு மனைவி வாய்த்தலும் உளதோ? அன்றி நமது தத்தையே மீள வரினும் வருவாள் கொல்லோ? ஒன்றும் தெரியவில்லையே. அனலிற்பட்ட புழுப்போல வாடுமென் நெஞ்சம் மது உண்ட வண்டெனா மயங்கிச் சுழலுகின்றதே! "எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லையே," என்றபடி என் துயர் ஆறாத் துயராக வன்றோ விளைந்து விட்டது?

(உருமண்ணுவா முதலானோர் காகதுண்டர் என்னும் பெரியவரை யணுகி தம் குறைகளைக் கூறி, எவ்வாறேனும் தங்கள் சொல்லுக் கிணங்கி, தாம் கூறுகின்றபடி தக்க வகையாற் கூறி, உதயணனுக்குத் தைரிய மூட்டுதற்கு உடன்பட வேண்டுமென்று வேண்டி, அவரை யுடன் படுத்தி உதயணன்முன் அழைத்து வருகின்றனர்.)

உருமண்ணுவா :—வீர வேந்தரே, இவர்தாம் முன்னர் இசைச்சன் கூறிய பெரியவர். இவரைக் காணவே நாம் இங்குவந்துளோம். இனி நம் குறை தீர்ந்துவிடும்.

உதயணன் :—(மிகுந்த ஆவலோடு) பெரியீர், வணங்குகின்றேன். தங்களருள் நாடியே இங்கு வந்தேன். எனது குறை தீர்த்தருளுங்கள். இன்றேல் தீப்பாய விடை தாருங்கள். வணக்கம்.

காகதுண்டர் :—மன்னவ, அஞ்சற்க; கவலையை விடுக. உலகில் எவ்வளவு கொடுந் துன்பங்கள் அடுக்கி வரினும் மனம் உடைதல் தகாது. "வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தி னுள்ளக் கெடும்." என்ற பொய்யில் புலவர் கருத்துப்படி இவற்றை யெல்லாம் நமது அறிவாற்றலால் வெல்லுதல் வேண்டும். இரண்டு திங்களளவும் இடைவிடாது விரதங் காத்து இவணிருக்க வேண்டும். அப்பால் ஈமத்தில் யாம் செய்ய வேண்டிய சாதனை ஒன்றுண்டு. அது முடிந்த பிறகு வாசவதத்தை பழைய உருவில் வருவதுறுதி. உனது இராச்சியமும் கிடைத்துவிடும். நம்பிறைற் பலனுண்டு.

உதயணன் :—பெரியீர், தங்கள் விருப்பப்படி விரதமேற் கொள்கிறேன். தங்களுடைய இப்பேருதவிக்குக் கைம்மாறும் உளதோ ! நீர் நெடிது வாழ்வீராக. விடை தாருங்கள்.

(அவரை விட்டுப் பிரிந்து தம்மிருப்பிடம் அடைகின்றனர்.)

வள்ளுவமுதுமகன் —(முறசறைகின்றான்) நகர மக்களே, நமது மன்னர் தருசக புதல்வி, மகத நன்னாட்டு மணி விளக்கு, பதுமாவதியம்மையார் காமன் விழாய்வயரும் இதுபோது, காமனை வழிபடுவதற்காகக் காமகோட்டம்

நோக்கிச் செல்வார். நகரத்தை அலங்கரித்திடுங்கள்.
(முரசு அறைகின்றான்.)

(நகரலங்கரிக்கப்படுகிறது. பதுமாவதி, யாப்பியாயினி முதலிய தோழியருடன் பல்லக்கேறுகின்றனர். பல்லக்கு காமகோட்டத்தெதிர் நிற்கிறது.)

பதுமாவதி :—(காற்றால் திரை விலக, உதயணனைக் காண்கின்றனள்) யாரது? நம் கண்ணுக்கு விருந்தளிக்கும் இக்காளை யாரோ? வேதியர் கோலந் தாங்குகின்றனரே. நாம் வணங்கும் காமன்தான் இவ்வடிவில் வந்துற்றனனோ? இன்னார் என்று தெரியவில்லையே! காவல் கடவாத என்மனம் நிறையழிந்ததேன்? முற்பிறப்புத் தொடர்போ! யாவுமவன் செயல்.

உதயணன் :—(பதுமாவதியைப் பல்லக்கில கண்டதும்) என்ன அழகு! என்ன ஆச்சர்யம்! அதற்குள்ளாகவா அப்பெரியார் எனது வாசவதத்தையை மீட்டளித்து விட்டனர்? இவளைக் காணின் என்னருமைத் தத்தையைப் போலவே தோன்றுகிறதே! மேலும் என்மனம் என்னையறியாது, பள்ளத்துட் பாயும் வெள்ளமென, இவள்பால் செல்வதன் காரணம் யாது? இறைவன் திருவுளமென்னவோ? இவள் யாரென்றறிய என் மனம் விழைகின்றது. (பக்கத்திருந்த அவள் தோழியைக் கண்டு) இவள் யார்? இவள் பெயரென்ன? நீங்களெல்லாம் இங்கு வரக் காரணம் என்ன?

ஐராவதி :—(இவ் வேதியன் பொருள் விருப்பத்தால் வந்தவன் போலுமெனக் கருதி) வேதியர் பெருமானே, இவள் இந்நகரத்தரசியாரின் சகோதரியும், காசிராஜன் மனைவியுமான உதையையோடை பெற்ற செல்வப் பெண். பதுமாவதி என்பது இவள் பெயர். கன்னிப்

பருவத்துள்ள இவள் காமன் விழாக் கொண்டாடுகின்ருள். இதோ தெரிவது அவன் கோட்டமே. அவனை வணங்கவே இவண் வந்துள்ளாள். விழா முடிவில் வேதியர்கட்கு வேண்டிய தானம் கொடுக்கக் கருதியுள்ளாள். இங்கே இருப்பின் நீரும் ஏதேனும் பெறலாம்.

உதயணன்;—அம்மையே, ஆகட்டும். இருந்து தானம் பெற்றுப் போகவே நானும் விரும்புகின்றேன்.

இராவதி:—ஐயரே, உமது நாடு எது? ஊரியாது? கோத்திரம் என்ன?

உதயணன்:—எனது நாடு காந்தாரம். ஊர் இரத்தினபுரம். என்னுடைய தந்தையாரின் பெயர் சாண்டியன். என் பெயர் மாணிகன் என்பது. என்னைப் பார்த்தாலே அந்தணன் என்பது புலப்படும்.

இராவதி:—வேதியரே, தானம் கொடுக்கும்போது தவருது வந்து பெற்றுச் செல்லும். உம்போன்ற ஒழுக்கம் வாய்ந்தவர்களைக் கண்டால் எம் தலைவி மிகவும் மகிழ்வாள். "பாத்திரம் அறிந்து பிச்சை யிடு," என்னும் பழமொழிக் கிணங்கத் தக்கார்க்கு ஒன்றீவதே கொள்கையாக உடையவள் எம் தலைவி. ஆகவே நீரும் தவருது வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உதயணன்:—அம்மையே, உனது பரிவிற்கும், பாராட்டிற்கும் எனதுளமார்ந்த நன்றி யுரியதாகுக. உனது தலைவிகையாற் பெறும் தானம் சாலவும் சிறப்புடைத்தே. பதுமாவதி என்ற பெயருக்கேற்ப அவள் இலக்குமியை உருவிலும் திருவிலும் ஒத்திருக்கின்ருள். அத்தகையவள் வழங்குந் தானமும் ஒன்றுக்குப் பத்தா

கப் பெருகும். என் வறுமையும் ஒழிந்துவிடும்; வருகிறேன்.

(உதயணன் தன் தோழர்களிடம் போய்ச் சேருகின்றான். மாலைப் பொழுது வருகிறது. அவன் பதுமாவதியைப் பற்றிய நினைவுடன் வீற்றிருக்கின்றான்.)

உதயணன் :—(தனக்குள்) வாசவதத்தையைக்கூட இவள் மறக்கச் செய்கின்றனளே! பதுமாவதியின் சேல்விழிகளும், பிறைநுதலும் என் கண் முன்னின்று மயக்குகின்றனவே! தேனினுமினிய சொற்கள் என் செவியில் ஒலிக்கின்றன.

"வனப்பமை வையம் தனக்குமறை யாகிய
கஞ்சிகை கடுவளி யெடுப்ப, மஞ்சிடை
வானர மகளிரில் தானணி சுடர,
முகைநலக் காந்தள் முகிழ்விரல் நோவத்
தகைமலர்ப் பொய்கைத் தண்செங் கழுநீர்
சில்லெனப் பிடித்து மெல்லென விழிந்து
நண்ண வருவோள் போலு மென்கண்
ஆற்றேன்;"

தவஞ் செய்தேனும் யானிவளை யடைவேன்.

உருமண்ணுவா முதலிய தோழர் :—மன்னர்பிரானே, ஏதோ ஒன்றைப் பற்றி ஆழ்ந்து யோசித்துக்கொண் டிருக்கிறீர்கள் போலும்! என்ன விசேடமோ? அறிவித்தால் தீங்கில்லையே;

உதயணன் :—தோழர்களே, நீங்கள் பதுமாவதியைக் கண்டதில்லை. அவள் இவ்வூர் அரசிளங்குமரி; மணம்

முற்றாத மங்கை; அவள் நேற்று என் முன்னர்த் தோன்றினாள். என் உள்ளம் கொள்ளை போய்விட்டது. உள்ளங் கவர்ந்த அக் கள்வியைப்பற்றியே நினைந்து உருகுகிறேன். அவளைப் பெற வழி கூறுங்கள்.

தோழர்கள் :—அரசர்பெரும, வனிதையர் திலகம் வாசவதத்தையை அடைய நோன்பு இயற்றாமல் மற்றொரு கன்னியை நாடுவது நீதியா? "ஆடவர் மனம் ஒரு வழிப்பட்டதன்று. ஆண் வண்டு போன்றது. பல மலர்களிலும் உள்ள தேனை நாடும் வண்டு போன்று பல கன்னியர்பால் மனத்தைச் செலுத்துபவர் பதரனைய ஆடவர்," என்று பெரியோர் கூறுவர். கல்வி, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி முதலிய பண்புமிக்க தாங்களும் அவ்வாறு பதடியர் போலப் பல மகளிரை விரும்புதல் தகுமோ?

உதயணன் :—தோழர்களே, இவ்வாறெல்லாம் பேசி என் மனத்தைப் புண்படுத்தாதீர்கள். பதுமாவதியின்றேல் எனக்குப் பசியில்லை; தாகமில்லை; உறக்கமுமில்லை. எவ்வாற்றானும் அவளை அடைந்தே தீருவேன்.

---

மூன்றாங்களம்

இடம் :—இராசகிரிய அரண்மனைக் கன்னிமாடம்

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—பதுமாவதி, செவிலித்தாய், ஐராவதி

பதுமாவதி :—(தனக்குள்) நேற்று காம கோட்டத்தருகே காணப்பெற்ற வேதியர் எத்துணை எழில் வாய்ந்தவர்! முகத்தில்தான் என்ன களை! என்ன கம்பீரம்! நல்ல

புலமை வாய்ந்தவராகவு மிருப்பர்போலும்! எட்டுணை யும் ஐயமில்லை. அவர் பார்வை என்னுள்ளத்தை அப்படியே கொள்ளை கொண்டு விட்டதே!

"நறுமலர்க் காவினுள் துறுமிய பூந்துணர்க்
கொடிக்குருக் கத்திக் கொழுந்தளிர் பிடித்து
நாள்மலர்ப் புன்னைத் தாள்முதல் அணைந்து
பருகு வன்ன நோக்கமொடு பையாந்து
உருகும் உள்ளமோ(டு) ஒருமரன் ஒடுங்கி
நின்றேன் போலவும், என்றோள் பற்றி
அகலத்(து) ஒடுக்கி நுகர்வோன் போலவும்,
அரிமலர் நெடுங்கண் அகவயின் போகாப்
புரிநூல் மார்பன் புண்ணிய நறுந்தோள்
தீண்டும் வாயில் யாதுகொல்?"

ஒன்றும் தோன்ற வில்லையே. மாலை மதியமும் தோன்றி விட்டது. தென்றலும் வீசுகின்றது. உருவிலாளன் தன் தொழில் தொடங்கிவிட்டனனே. ஏழையர் மேல் அம்பு தொடுத்தல் ஏச்சுக்கிட மென்றறியானோ! இறைவனே! எங்ஙனமேனும் அந்த வேதியரை யென் நாயகராக்கத் திருவருள் புரிவாயாக.

[இரா முழுதுங் உறக்கமில்லை. கண் சிவந்து பொலிவழிந்து இருப்பதை மறுநாட்காலை செவிலி பார்க்கிறாள்.]

செவிலித்தாய்:—பதுமாவதி, கண்ணே, ஏனம்மா ஒரு மாதிரி வாட்டமுற்றிருக்கின்றாய்? நேற்றிரவு நல்லுறக்கம் இல்லையா? கண்கள் சிவந்திருக்கின்றனவே; காரணம் என்னம்மா?

பதுமாவதி:—நேற்றிரவு முன்னேரத்தில் நமது கன்னி மாடத் தருகே நாய்கள் வெகு நேரம் வரை குரைத்துக் கொண்டே யிருந்தன. பின்னேரத்தில் ஓரதிசயக் கனவும் கண்டேன். அதில் உதயணன் வேதிய வடிவில்

என்னைக் காதலித்துப் பிறகு தன் உண்மை வடிவில் மணம் புரிந்துகொள்வதாகக் கண்டேன். திடீரென விழித்துக்கொண்டேன். பிறகு உறக்கமே வரவில்லை. அதனால் என்முகம் ஒரு மாதிரியாக இருக்கிறது. வேறொன்றுமில்லை.

செவிலித்தாய் :—பதுமாவதி, நீ கண்ட கனவு பலித்தலும் கூடும். அப்படிப் பலித்தால் மிகவும் நல்லதே. உதயணன் சிறந்த அரசன்; அருங்கலை விநோதன்; அமராபரணன்; யாழறிபுலவன். அவனை மணக்க நீ முற்பிறவியில் தவமாற்றி யிருக்கவேண்டும். இப்போது பல்லக்கேறிச் சோலைக்குச் செல்வோம்வா. சோலை வனப்பும், அங்கு வீசும் தண்ணிய காற்றும் உன் மனத்துக்குச் சற்று அமைதியளிக்கும்.

பதுமாவதி:—நோன்பு முற்றும் வரையில் நாம் சோலை சென்று கொண்டிருத்தலே நன்று. என் கனவு பலித்தால் யான் வெகு பாக்கியவதியே. உதயணனைப் பற்றிப் பலர் புகழக் கேட்டறிந்துளேன். இப்போது சோலை செல்வோமே.

[தோழியர் சூழச் சோலையடைகின்றனள். அதே சோலையில் ஒரு புன்னையின் நிழலில் உதயணனும் வயந்தகனும் நிற்கின்றனர்.]

பதுமாவதி :—(தோழி ஐராவதியின் கழுத்தைக் கட்டித் தழுவிக்கொண்டே) தோழி, அந்தண வடிவொடு அங்கு நிற்பவர் யாவர்? நீ யறிவையோ ?

ஐராவதி:—பத்மா, முன்னொரு நாள் நீ கன்னிமாடம் சென்ற பின்பு, யான் அன்பின் மிகுதியால் அவர் வரலாற்றைக் கேட்டறிந்ததுண்டு. மாணகன் என்பது

அவர் பெயர். தோழருடன் இந்நாடு காண வந்தவர்; நோன்புமுடிந்தபின் நீ அளிக்கும் தானம் பெற விரும்பியே அவர் இவண் தாமதித்தனர் போலும்.

பதுமாவதி:—தோழீ, அவர் கையிலுள்ள பந்தைப் பிறர் அறியாது வாங்கித் தர வல்லாயோ?

(தலைவியின் குறிப்பைக் கூறி சாடையாகப் பந்தை வாங்கித் தருகிருள்.)

உதயணன்:—தோழர்களே, வாசவத்தனையை நினைந்து உழன்ற என் மனங்கவர்ந்த பதுமாவதி தன் மனத்தையும் என்பால் நிறுத்திக் கலந்த நேசமுள்ளவளாய் காணப்படுகின்ருள். இறைவன் எங்கள் பங்கில் உள்ளான் போலும்!

இசைச்சன்:—இசைச் செல்வரே, தாங்கள் விரைவில் எந்த முடிவுக்கும் வரவேண்டாம். அவசர முடிவுகள் அப்படியே பலனளிப்பதில்லை. நன்கு யோசிக்கவேண்டும். இந்நாட்டுப் பெண்மணிகள் நிறை மிக்கவர்கள்; அவர்கள் கருத்தறிதல் எளிதன்று. பதுமாவதியும் அத்தன்மையளே.

உதயணன்:—தோழனே, நீ சொல்வது பெண்களின் பொது விலக்கணம். பதுமாவதியும் உத்தமியே. அவள் நிறையைக் குறை கூறுவதாகக் கருதற்க. அவள் என்பாற் காதல் கொள்ளுதல் தவருகாது. ஒத்த குலனும், கல்வியும், திருவும் உடையவர்கள் விதி கூட்டிவைக்க, ஒருவரை யொருவர் கண்டபோதே காதல் கொள்ளுதல் இழுக்கன்றே! நூல் வழக்கும், உலக வழக்கும் இதுவே யன்ருே?

(உதயணனும் பதுமாவதியும் மனமொருமித்து விடுகின்றனர். தருசகன் மேம்பாட்டைப் பொருத மன்னர்களாகிய விரிசிகன், அரிமான் முதலிய அயலரசர் ஒரு நாள் தருசகன் நாட்டின்மீது படையெடுத்து வருகின்றனர். மாணகனாகிய உதயணன் பதுமாவதியால் அஃதறிந்து தன் தோழருதவியால் பகைவர்களை வென்று விடுகிறான்.)

---

## நான்காங்களம்

இடம் :—இராசகிரியம்—அரண்மனை

காலம் :—காலை

பாத்திரங்கள் :—தருசகன், வயந்தகன், காவலன்

தருசகன் :—(தனக்குள்) என்னே இவ்வுலகியற்கை! யாம் வாளா விருக்குங்கால் நமது மகிழ்ச்சியையும், மாண்பு சான்ற வாழ்வையும் கண்டு அழுக்காற்றினால் விரிசிகன் முதலியோர் படை யெடுத்துள்ளனரே! யாம் என் செய்வது? நம் முதவிக்கு யாருமிலரே. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை. மேலும், அழுக்காறு மிக்க பகைவர் அழிவதுறுதி. "அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்," என்பது பொய்யாமொழி யன்றோ! தெய்வமே, இதுவும் உன் சோதனையோ?

காவலன் :—மகதர் மன்னவ, வாழ்க நின் கொற்றம். தங்களைப் பார்க்க நமது கீழைக் கோபுர வாயிலில் ஒருவர் வந்திருக்கிறார். பெயர் வயந்தகனும். உதயணனால் அனுப்பப்பட்டவராம். சமூகத்தில் உத்தரவானால் பேட்டி காணக் காத்திருக்கின்றார்.

தருசகன் :—ஏ காவல, உடனே சென்றழைத்துவா.

[வயந்தகன் வருகின்றான்.]

வயந்தகன் :—மகத நாட்டரசரே, வாழி! வாழி!! யான் கௌசாம்பி மன்னர் உதயணனுக்கு உயிர்த் தோழன். என் பெயர் வயந்தகன். எனது தோழர் தம் தேவி வாசவதத்தையை இழந்தமையால், அந்த வருத்தத்தைப் போக்கிக்கொள்ளத் தங்கள் நாட்டிற்கு என் அனைய இன்னுயிர்த் தோழரோடு போந்தனர். பொறாமை காரணமாகத் தங்கள்மீது படையெடுத்துப் பகைவர் வருவதை யறிந்தனர். தம் தந்தைக்கும் தங்கட்குமிடை நட்புண்டென்பதை யறிந்தவராதலின், நட்பைக் கருதித் தங்கள் பகைவரைத் தாக்குதல் தம் கடனெனக் கருதித் தாமே தம் துணைவரொடு விரிசிகன் முதலிய நம் பகைவரை வென்று முதுகு கண்டு வந்தனர்.

தருசகன் :—வயந்தகா, நீ கூறிய நற்செய்தி எனக்கு மட்டற்ற மகிழ்வூட்டுகின்றது. இந்நேரம் வரை எவ்வாறு பகைவரை விரட்டுவதென்றெண்ணி மனங்கலங்கினேன். கடவுளே உனது மன்னன் கருத்திடைப் புகுந்து காப்பாற்றியருளினன் எனல் தகும். உதயணனைக்காண என் மனம் பெரிதும் விழைகின்றது. அழைத்து வருக.

[வயந்தகன் உதயணனைக் கொணர்கிறான்.]

உதயணன் :—கொற்றவ, வணக்கம். இன்று உம்மைக் காணும் பேறு பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன்.

தருசகன் :—உத்தம, உதயண, விறல்வேல் வேந்த, நின் வரவு நல்வரவாகுக. உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

"கெட்டகாலையும் கேட்டோருவப்ப நட்டோர்க்காற்றும் நன்னராளா," உன்னால் இந்நாடு பெருமை பெற்றது. இந்நாடு இன்றுன் வரவைப் பெறுதற்குப் பெருந்தவ மாற்றி இருக்கவேண்டும். நின்னைக் காணுந்தோறும் என் மனத்துள் இன்ப மெழுகின்றது. என்பாக்கியமே பாக்கியம். இனி எனக்கென்ன குறை? நீ காலத்தாற் செய்த பேருதவியை என்றும் மறவேன். "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது," என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி, யான் எனது மண்ணரசு முழுதுமே கொடுப்பினும் உனக்குக் கைம்மாறு செய்தவனாகேன். என்று முரியன் யான்.

உதயணன்:—அருங்குணத் தண்ணலே, என் தந்தையின் நட்புக்கடனை யான் செய்து முடித்தேன். அவ்வளவே. 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்,' ஆகலின் இதிற் பாராட்டுதற்கிடமின்று. தாங்கள் என்பாற் கொண்ட அன்பின் பெருக்கையே உம் அமுதமொழிகள் எடுத்துக் காட்டுகின்றன.

தருசகன்:—நண்ப, உனக்கு அது சாமானியமான கடமையாகத் தெரியலாம். எனக்கோ அது பெறலரும் பேருதவியாகும். நீ வாழி பல்லூழி! என்னுடன் சின்னாட்டங்கி எனதினிய உபசாரத்தைப் பெற்றுப் போகவேண்டும்.

உதயணன்:—மன்னர் பெரும, தங்கள் விருப்பப்படி எவ்வளவு காலம் வேண்டு மானாலும் இங்குத் தங்கி இருந்து போகின்றேன். எனக்கும் வாசவதத்தையை இழந்த நாள்முதல் மன வமைதியில்லை. சிறிது காலம் இங்கிருந்தால் மனவமைதி தோன்றக் கூடு மெனக் கருதுகிறேன். தங்கள் நாட்டு இயற்கை வளம் என்

மனத்தைக் கொள்ளைகொண்டு விட்டது. இந்நாட்டு மூதறிஞர் பலரைக் கண்டு அளவளாவுதலாலும் என் மனம் சாந்திபெறும்.

தருசகன்:—உதயண, நீ நிச்சயமாகச் சாந்தி பெறலாம். உன் மனம் மகிழச் செய்து அனுப்புதல் என் பொறுப்பும் கடனுமாகும்.

வயந்தகன்:—மகதர் மன்னவ, ஒரு வேண்டுகோள். 'ஆருணி' யென்னும் பாஞ்சால மன்னன், கௌசாம்பியில் உதயணன் இல்லாத போது, அக்கிரமமாகச் சிங்காதனம் ஏறி ஆண்டு வருகின்றான். அவனை முறியடிப்பதற்குத் தாங்கள் உதயணனுக்கு உதவிபுரிய வேண்டும்.

தருசகன்:—வயந்தக், எனக்குப் பேருதவியாற்றிய நம் மன்னவனுக்கு இது கூடச் செய்யேனா! நிச்சயம் உதவுகின்றேன். யான் உன்னிடம் ஒன்று தெரிவிக்க விரும்புகின்றேன். அஃதென்னை யெனின், எமது செல்வியாகிய பதுமாவதியை உதயணனுக்கு மணம் புரிவிக்க விரும்புகின்றனன். இதற்கு உதயணன் விரும்புமாறு செய்தல் உன் கடமையாம்.

வயந்தகன்:—எனதரசர் தங்களுடன் சம்பந்தம் செய்துகொள்ள பெரிதும் விரும்புவர். அவரிடம் கூறி இசைவிக்கின்றேன்.

[உதயணனுக்கும் பதுமாவதிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. பின்னர் மகத மன்னன் துணை கொண்டும், பிங்கல, 'கடகர் உதவிபெற்றும் கௌசாம்பியிலிருந்த ஆருணியின்மேற் படை யெடுத்து வென்றி கொள்கின்றனன் உதயணன். இழந்த அரசு மீட்டும் கைவரப்பெற்ற உதயணன் மன அமைதியொடு செங்கோல் கொள்ளத் தொடங்குகிறான்.]

# அங்கம்—5

## முதற்களம்

இடம் :—கௌசாம்பி - அரண்மனை

காலம் :—காலை

பாத்திரங்கள் :—உதயணன், மந்திரிகள், அருஞ்சுகன்

உதயணன் :—மதிமிக்க மந்திரிமார்களே, நாம் சில காலம் இவ்வரசினின்றும் விலகி யிருந்தோம். இடைக்காலத்தே ஆருணி யரசனது கொடுங்கோன்மை நிலவியது. "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே," என்றபடி மாந்தர் பலர் நாடு துறந்து காடு புக்கனர். நாட்டில் உள்ள மக்களும் நலிவெய்தி யுள்ளார்கள். பசியும் பஞ்சமும் தாண்டவம் புரிகின்றன. ஆகவே நம் குடிமக்களின் குறைகளை உடனே நீக்குதற்கு ஏற்றன செய்வீர்களாக.

மந்திரிகள் :—மதிசால் மன்னரே, ஆருணி யரசன் ஆட்சியில் மக்கள் அடைந்த துன்பத்துக்கு அளவே யில்லை. குடிகள் பழி தூற்றி வந்தார்கள். அவர்கள் கண்ணீரே அவனைப் போரில் பொன்றுவித்ததெனலாம். "ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்," என்பது பொய்க்குமா? நாங்கள் தேவாலயங்களையும், அருந்தவப் பள்ளிகளையும், அந்தணரிருக்கைகளையும், தோட்டம், வாவி முதலியவற்றையும் புதுப்பிக்கின்றோம். உணவும் உடையுமின்றித் தவிப்பவர்க்கு உடனே உதவி அளிக்கின்றோம். வேண்டியன யாவும் விரைந்து நல்கி

வருகின்றோம். சீக்கிரத்திலேயே நாடு நன்னிலை யெய்தும். நீர் கவலையடைய வேண்டுவதில்லை.

உதயணன் :—மந்திரிமார்களே, நீங்கள் செய்து வருவன கேட்டு மகிழ் வெய்துகின்றோம். உஞ்சையினின்றும் என்னையும் வாசவதத்தையையும் ஏற்றி வந்த பிடி வீழ்ந்த இடத்தைக் குறிப்பிடுகின்றேன். அவ்விடத்தே அவ்வியானையின் ஞாபகார்த்தமாக ஒருமாடம் எடுப்பித்து, அதில் அப்பிடியின் உருவமைப்பித்துக் காலை மாலை வேளைகளில் அதற்கு வழிபா டாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வழியே செல்வோர்க்குப் பசி தீரும்படி அடிசிற் சாலை யமைத்து அன்னம் அளித்தல் வேண்டும். நறுந் தண்ணீர்ப் பந்தரும் அமைத்துதவ வேண்டும். இதற்கு வேண்டிய பொருள் களைக் கொண்டு செல்லுங்கள்.

மந்திரிகள் :—செங்கோற் செல்வரே, தங்கள் விருப்பப் படியே யாவும் நிறைவேற்றுகின்றோம். தங்களது நன்றி பாராட்டினைக் கருதி வியப் பெய்துகின்றோம். அப் பண்பே தங்களை வாழ்வில் உயர்த்துகின்றது. வாழி யரசே வாழியர்!

வாயில் காவலர் :—அரசர்க் கரசரே, தங்களைப் பார்க்க யாரோ ஒரு வேதியர் - அருஞ்சுகன் என்பவர் - உஞ் சையினின்றும் போந்துளார்.

உதயணன் :—அவரை உடனே அழைத்து வாருங்கள்.

அருஞ்சுகன் :—மன்னர் மன்னரே, வணக்கம். யான் உஞ்சையினின்றும் வருங்கால் வழியில் ஒரு மூங்கிலில் மாட்டிக் கொண்டிருந்த இந்த யாழை எடுத்து வந்தேன். இது மிகவும் அருமையாக இசைக்கின்றது. இங்கே

வந்ததும், தாங்கள் கோடபதி என்ற தங்கள் யாழை இழந்துவிட்டதாகச் சிலரால் அறிந்தேன். ஒருகால் இதுவாக இருக்கலாமோ என்றெண்ணியே இதை ஈண்டுக்கொண்டு வந்தேன்.

உதயணன் :—அன்பு மிக்குடையீர், இது என்னுடைய யாழே. ஐயமின்று. இஃதிழந்த நாள் தொட்டு என் மனம் வருந்திக்கொண்டேயிருந்தது. இன்று நீர் இதனை யென்பால் சேர்த்தருளினீர். உமக்கு எதுவாயினும் கொடுப்பேன். என்னவேண்டுமோ கூறும்.

அருஞ்சுகன் :—கொற்றவ, வெகுமதியின் பொருட்டிதனைக் கொணர்ந்தே னில்லை. இது கிடைத்தற்கரிய தெய்வ யாழ். இதை வைத்துக் கொள்ளுதற்கு எளியேனுக்குத் தகுதியில்லை. தங்களைப்போன்ற இசை வல்லுநர்க்கே இஃதுரியது எனக் கருதிக் கொண்டுவந்தேன். தவிரவும், தாங்கள் இத்தகைய யாழொன்றினை இழந்து வருந்துவதாகவும் கேள்வியுற்றேன். உடனிவண் வந்தேன். இது தங்களுடையதே என்றறிந்ததும் என் மகிழ்ச்சி பொங்குகின்றது. தங்களன்பே சாலும். அதுவே எனக்குரிய பரிசெனக் கொண்டேன். சென்று வருகின்றேன். விடை தாருங்கள்.

உதயணன் :—அருமறையாளரே, நீர் வேண்டாம் எனினும் சும்மா அனுப்புவது என் தகுதிக்கு ஏற்றதல்ல. இவ் வருங்கலங்களையும், பொருட் குவையினையும், இந் நகரருகேயுள்ளதோர் ஊரினையும் உமக்குப் பரிசிலாக அளித்தேன், மறுது ஏற்றுக்கொள்க.

அருஞ்சுகன் :—தங்கள் சித்தம் என் பாக்கியம். (எல்லாவற்றையும் எடுத்துப் போகின்றான்.)

உதயணன்:—(கோடபதியை வாசிக்கிருன்.) கோடபதியை வாசித்ததும் தத்தையின் நினைவு வருகின்றதே! என் அருமை வாசவதத்தையே, இதோ நீ பயின்ற யாழ். இதனை வாசித்து என்னை மகிழ்விக்க நீ வாராயோ? அந்தோ மறந்தனையே.

(பலவாறு புலம்பிக்கொண்டிருக்கின்ருன்.)

---

இரண்டாங்களம்

இடம் :—கௌசாம்பியின் அரண்மனை

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—உதயணன், பதுமாவதி, வயந்தகன்

உதயணன் :—பதுமாவதி, நீயும் யாழ் வாசிக்க விரும்புகின்ருய். உனது விருப்பம் நல்லதே. என் மனம் வாசவதத்தையிடமே சென்றுகொண்டிருக்கின்றது. ஏனெனின் இந்தக் கோடபதி யென்னும் யாழை வைத்துக்கொண்டுதான் வாசவதத்தைக்கு இசைப் பயிற்சி அளித்து வந்தேன், இதை நடுக் காட்டில் இழக்க நேர்ந்தது; இறையருளால் மீட்டும் இவ்யாழ் கைவரப் பெற்றேன். இதனை வாசிக்கும் போதெல்லாம் அவள் என் மனக்கண் முன் தோன்றுகிருள். ஒருகால் இறையருளால் இவ் யாழை அடைந்ததுபோல வாசவதத்தையை மீட்டும் அடைந்தாலும் அடையக்கூடும். யாவும் அவன் செயல். அவ்வாறு அடைந்த பிறகு உனக்கு யாழ் வித்தை பயிற்றுவேன். அதுவரை பொறுமையோடிருப்பாயாக.

பதுமாவதி :—தலைவரே, தாங்கள் கூறுவதனைத்தும் உண்மையே. யாழைப் பார்த்ததும் வாசவதத்தையின் நினைவு வருதலியல்பே. இது உயர்ந்தோர் ஒழுக்கம்.

வயந்தகன் :—(இவ்வுரை யாடலைக் கேட்டுக்கொண்டே வருகின்றான்) அரசரே, இதுகாறும் இரு மனைவியரையும் சமமாக நினைத்து ஒழுகி வந்த தாங்கள் இன்று வாசவதத்தைபால் அதிக அன்பு காட்டுதற்குக் காரணம் என்னையோ?

உதயணன் :—வயந்தகா, நீ கேட்ட கேள்வி பொருத்தமற்றதாகும். இஃது என் மனத்தை மிகவும் புண்படுத்துகின்றது. இப்படிபட்ட பொருத்தமற்ற கேள்விகளை இனிக் கேட்காதே.

வயந்தகன் :—தாங்கள் கோபித்தல் தகாது. என்னவோ என் மனத்துப்பட்டது. நண்பர் என்ற முறையில் கேட்டு விட்டேன். நிற்க, வாசவதத்தையை மீட்டுத் தரும் பெரியோரைத் தரிசித்து வழி பாடாற்றுதற்கு நாம் மகதம் சென்றிருந்தகாலை, பதுமையிடம் மயங்கினதும் தங்கள் நிலைக்குத்தக்க தொன்றன்றே? நும் மனம் ஏன் இவ்வாறு மாறுகின்றது?

உதயணன் :—வயந்தக, மீட்டும் அவ்வாறே பேசுகின்றாய். வாசவதத்தைக்கும் பதுமைக்கும் உருவத்திலும் குணத்திலும் வேற்றுமையில்லை. ஆகவேதான் யான் பதுமையை விரும்பினேன். தவிர, ஊழ்வினையும் அதற்கொத்திசைத்தது.

வயந்தகன் :—அன்பரே, யான் அறிவில்லாதவனெனக் கருதி இகழ வேண்டாம். யான் கூறுவதை ஊன்றிக் கேட்டிடுக. முன்பு இராசகிரியத்தின் புறத்தேயுள்ள

சோலையில் யாம் கண்ட பெரியார் இப்போது இங்கு வந்துள்ளார். வாசவதத்தையை வருவித்துத் தருவ தாகவும் கூறுகின்றார். ஆனால் நீர் சில தினங்கள் பதுமையை நீங்கித் தனியே தூய்மையோடிருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றார்.

உதயணன் :—வயந்தகா, வந்தவுடன் நீ இதைச் சொல்லி இருக்கக் கூடாதா? என்னென்னவோ பிதற்றி விட்டுப் பின் கூறினையே. நிரம்ப சந்தோஷம். எனதுயிர்னைய வாசவதத்தை வருவதாயின் பதுமையை எவ்வளவு காலம் வேண்டுமாயினும் பிரிந்திருப்பேன். தூய்மை யாகவும் இருக்க முடியும். அவர் எங்கே?

வயந்தகன் :—அரசரே, தாங்கள் அந்தப்புரத்தில் தனிமை யாகத் தூய வெள்ளுடை தரித்து விரதம் பூண்டொழுகி வாருங்கள். வாசவதத்தையைப் பெறலாம்.

உதயணன் :—அப்படியே ஆகட்டும்.

[அவ்வாறேஅந்தப்புரத்தில்யாழுடன் தூய்மையான இடத்தில் தத்தையை நினைத்தவனாகத் துயில்கின்றான். அப்போது வாசவதத்தையை ஒரு சிவிகையி லேற்றிக் கொணர் வித்து அவட்கு உதயணனைக் காட்டுகின்றான் வயந் தகன்.]

வாசவதத்தை :—என்னே, என் காதலரா இப்போது வெண்டுகில் தரித்து, விரதம்பூண்டு தலைவிரிகோல மாய்ப் படுத்திருக்கின்றவர்? விந்தையினும் விந்தையா யுளதே. யான் எண்ணியது எவ்வளவு தவறு! அவர் என்னையே எண்ணியன்றோ நைகின்றார். அவர்மீது பழி சுமத்தும் பான்மையுற்றேனே! மகத மன்னன் உதவி பெறுதற்காகப் பதுமாவதியை மணந்துகொண் டனரே யன்றி வேறின்று. இவர்மீது எட்டுணையுங்

குற்றமில்லை. வீணிற் கடிந்துகொண்டேனே! என்னே என் அறிவீனம்!

உதயணன் :—(கனவு கண்டு) வாசவதத்தாய், உனக்கு வீணையைப் பயிற்றுவிக்குங்கால் உனது பார்வையால் வருந்திய யான் உன்னைப் பிரிந்து ஆற்றாதவனாயினேன். என்னை மறந்தாயோ? (இன்னும் அரற்றுகின்றான்)

வாசவதத்தை ;—என்னுயிர் நாதன் கனவிலும் இவ்வண்ணமே போலும். "தம்மையன்றி வேறு தெய்வமில்லாத மகளிர் பிரிந்தகாலை அவர்களை நினைந்து வருந்துதல் ஆண்மை நல்லார்க்கியல்பே," என நூலிற் பயின்றுளேன். இன்றே அதன் உண்மையை நேரிற் கண்டேன். இத்தகைய நல்லொழுக்கம் மிக்கார் மறுமையின்பமும் பெற்று. மகிழ்வாராக. (கோடபதியை மெதுவாக எடுத்து வாசிக்கின்றாள்.)

உதயணன் :—(வீணை யொலி கேட்டு) தத்தாய், வந்தனையோ! என்னை நெடுநாட் பிரிந்து எவ்வாறு ஆற்றி இருந்தாய்? (அரற்றுகிறான்)

வயந்தகன் ;—(மெதுவாக) தத்தாய், நீ மெதுவாக எழுந்து வந்துவிடு. இவ்விடம் நாளைய தினம் யூகியுடன் வர வேண்டும். வா போவோம்.

[இருவரும் யூகிபாற் செல்கின்றனர்.]

---

## மூன்றுங்களம்

இடம் :—கௌசாம்பி அரண்மனை - அந்தப்புரம்

காலம் :—காலை

பாத்திரங்கள் :—உதயணன், வயந்தகன், யூகி

உதயணன் :—வயந்தகா, நேற்றிரவு வாசவதத்தை வரக் கண்டேன். கனவா? நனவா? அறியேன். கோடபதியை மீட்டிப் பயின்று இன்பம் தந்தாள். என் காதாற் கேட்டேன். எனக்கொன்றும் புரியவில்லை. அவள் மீது ஆவல் இன்னும் அதிகரிக்கின்றதே. என் செய்வேன்? அதிசீக்கிரம் அவளைக் காணுவிடில் என்னுயிர் பிரிவது திண்ணம்.

வயந்தகன் :—அரசரே, தாங்கள் அவளையே எண்ணிக் கொண்டிருத்தலால், நினைவு கனவாகி யிருக்கலாம். கனவிற் கண்ட பொருளை நனவில் அடைதல் தேவர்க்கும் எளிதன்று. இதனைக் கேட்டாரும் நகைப்பர். வாசவதத்தையின் வடிவங்கொண்ட இயக்கியென்னும் தெய்வமொன்று இங்குளது. அதனைத் தடுக்கும் மந்திரம் எனக்கும் தெரியும். யான் சென்று அதனைச் செய்வேன். உமது இடர் நீங்கும்.

உதயணன் :—நாம் எப்போது மகதத்தினின்றும் இவண் போந்துள்ள பெரியாரைத் தரிசிப்போம்? அவரிடம் என்னை யழைத்துச் செல்.

வயந்தகன் :—அரசரே, நமது மதுகாம்பீர வனத்தில் தான் அப் பெரியார் தங்கியிருக்கின்றார். இன்றிரவு போவோம். பகற் போதில் செல்லுவது முறையன்று.

உதயணன் :—வயந்தக, உன் கருத்துக் கொப்ப இன்று இரவே போவோம். நான் தயராக இருப்பேன். நீ வந்துவிடு. பெரியார்க்கும் நம் வருகையை முன்னர் தெரிவித்துவிடு.

வயந்தகன் :—ஐய, அவ்வாறே யாகட்டும். (செல்கிறான்.)

[இரவு மணி எட்டாகின்றது. வயந்தகன் உதயணன் பால் வந்து சேர்கிறான்.]

உதயணன் :—வயந்தக, நீ சொல்லியவாறே எட்டு மணிக்கே வந்துவிட்டாயே. சந்தோஷம்; கால ஒழுங்கை நன்கு அனுசரிக்கும் உத்தமனே, செல்வோமா? (போகின்றனர்)

[மதுகாம்பீர வனத்தில் உள்ள மாடத்தின்கண் ஓர் அறையில் தவக் கோலத்தோடு யூகி வீற்றிருக்கின்றான். மற்றோர் அறையில் சாங்கியத் தாயோடு வாசவதத்தை யிருக்கின்றாள். வயந்தகன் உதயணனை யூகி யிருக்கும் அறைக்கு அழைத்துச் செல்கின்றான்.]

உதயணன் :—வயந்தக, இவர் வனத்திற் கண்ட பெரியார் அல்லர். இவன் யூகியே! என்னை நீ ஏமாற்றப் பார்க்கிறாய். இவனைக் கட்டித் தழுவவும், கலந்தளாவவும் என் மனம் விழைகின்றது. (உற்றுப்பார்க்கிறான்) இதோ இவன் மார்பில் யானைக் கொம்பின் தழும்பு. ஆம். ஐயமில்லை. இவனே யூகி, இவன் யூகியே! ஆஹா! என் பாக்கியமே பாக்கியம்! யூகி, வந்தனையோ?

'ஊறில் சூழ்ச்சி யுகந்த ராய!
நாறிருங் கூந்தலை மாறிப் பிறந்துழிக்
காணத் தருகுறு முனிவனை, நீயினி
யாணர்ச் செய்கை யுடைத்தது தெளிந்தேன்.
வந்தனை' யென்றுதன் சந்தன மார்பில்

பூந்தார் குழையப் புல்லினன் பொருக்கெனத்
தீந்தேன் கலந்த தேம்பால் போல
நகையுருத் தெழுதரு முகத்த ளாகித்
துறந்தோர்க் கொத்(து) அன்றுநின் சிறந்த
அருள்வகை.''

இனி யென்னை விட்டு எக்காரணங் கொண்டும் இமைப் போதும் பிரிதல் ஒண்ணாது. இனியும் அவ்வாறு என்னை விட்டுப் பிரியின் எனதுயிரும் இவ்வுடலை விட்டுப் பிரியும்.

யூகி :—(புன்முறுவலோடு) வேந்தே, உமது நன்மை கருதியே இத்தகைய சூழ்ச்சிகள் புரிய நேரிட்டது. அவற்றால் உமக்குப் பல துன்பங்கள் விளைத்தேன். ஆயினும் எண்ணியாங்கு முடித்தேன். அதற்கு முன்னவனும் முன்னின்றுதவினான். யாவும் இனிய முடிவுற்றன. அரசே, வாசவதத்தை நின்னைக் காணத் தவம் புரிந்து தவிக்கின்றாள். போய்ப் பார்ப்போமே. (பக்கத்தறைக்குச் சென்று சாங்கியத் தாயுடனிருந்த வாசவதத்தையை இருவருங் காண்கின்றனர்.)

உதயணன் :—எனதரும்பெறற் காதலி, உன்னைக் காணாது இவ்வுலகையே வெறுத்தேன். வாழ்வு பெருஞ்சூன்யமாயிற்று. இன்றே யான் செய்த நோன்பின் பலன் பெற்று உவந்தேன் என்னுயிரனையாய், யானுனைப் பிரிந்ததும் ஊழ்வலியோ? "புணர்ந்தவர் பிரிவர்; பிரிந்தவர் புணர்வர்,'' என்ற பெரியார் வாக்கிற் கிணங்க, யாம் பிரிந்திருந்தோம்; பின்னர் மீட்டுங்கூடினோம்.

வாசவதத்தை :—ஆருயிர்க் காதலரே, தங்கட்குப் பெரியதோர் அநுகூலம் பிறக்குமென்பதை யூகி உணர்த்திய

தன் பேரில் தங்கள் கட்டளையைப் பெருது தங்களை விட்டுப் போய்விட்டேன். அப் பெருத்த அபசாரம் செய்த என்னை மன்னித்தருளுங்கள். (அவன் காலில் வீழ்ந்து வணங்குகிருள்.)

உதயணன் :—(அவளைக் கைகளால் தழுவி யெடுத்து) தத் தாய், வருந்தற்க. நீ செய்த தொன்றும் தவருகாது. எனக்கு அரசுத்திரு நல்குவதற்காக என்னை விட்டுப் பிரிந்திருந்த உன் தியாக புத்தியையும் திட உறுதியை யும் போற்றுகின்றேன். மேலும் நற்பலனை நாடிச் சேர்க்கும் மார்க்கம் எவ்வளவு கரடு முரடாயினும் பழு தில்லை. கவலற்க. (சாங்கியத்தாயைப் பார்த்து)

"துன்பக் காலத்துத் துணை யெமக் காகி
இன்ப மீதற்(கு) இயைந்துகை விடாது
பெருமுது தலைமையின் ஒருமீக் கூரிய
உயர்தவக் கிழமைநும் முடம்பின் ஆகிய
சிற்றுப காரம் வற்றல்செல் லாது
ஆலவித்தின் பெருகி ஞாலத்து
நன்றி யீன்றது."

தங்கள் உதவியை யென்றென்றும் யான் மறவேனுகை.

[யாவரும் உடன் அரண்மனை வந்து சேர்கின்றனர்.]

## நான்காங்களம்

இடம் :— அரண்மனைக் கொலு மண்டபம்

காலம் :— காலை

பாத்திரங்கள் .— உதயணன், யூகி, பதுமாவதி

உதயணன் :— யூகமிகுந்த யூகியே, மீண்டும் உன்னையும், வாசவதத்தையையும் யாம் அடைந்ததைப் பற்றி இந் நகர மாந்தர்கட்கு முரசறைவித்துத் தெரிவித்தனையோ?

யூகி :— அரசரே, யாவும் முன்னரே வள்ளுவ முதுமகன் மூலம் குடிமக்கட்கு முரசறைவித்துக் கூறப்பட்டன. அனைவரும் இந் நற்செய்தி யறிந்து விழவெனக் குதூ கலிக்கின்றனர். ஆரவாரம் கடலினும் பெரிது !

உதயணன் :— யூகியே, நின்னைப் பெற்ற எனக்கினி என்ன குறையுண்டு? பெறலருந் திருவினையும், எனதாருயிர்ப் பிங்கல, கடகரையும், பெண்ணருங்கலமாம் வாசவ தத்தையையும், கோடபதியையும் பெற்றேன். இனிப் பெற வேண்டியன யாவுள? நீ செய்த பேருதவிக்குக் கைம்மாறுண்டோ? எனினும் என் மன அமைதிக் காகவே உனக்குச் சேதி நாட்டையும் வைசாலி நகரை யும் உரிமை யாக்குகின்றேன். மறுக்காமல் ஏற்றுக் கொள்க. மற்றும், நீ இன்னுஞ் சிலகாலம் ஓய்வு பெறு மாறும் வேண்டிக் கொள்கின்றேன். என் பொருட்டு உழைத்து, நின்னுடல் இளைத்தனை. உன்பால் முகமன் உரைகள் பயனில. "இனையர் இவரெமக்கு இன்னம் யாமென்று புனையினும் புல்லென்னும் நட்பு." என்று வள்ளுவர் கூறுகின்றார். உன்னைப் புகழ்தல் என்னையே புகழ்வதாகும்.

யூகி:—அரசரே, யான் உம் பொருட்டுச் செய்த சூழ்ச்சிகளால் உமக்கு மனவருத்தம் உண்டாக்கியதற்கு என்னை மன்னித்தருள்க. அதுவே யான் விரும்புவது.

உதயணன்:—நீ இவ்வாறு பேசுதல் வேண்டா. நீ என் தெய்வம். நீ இன்றேல் உதயணன் உயிர் வாழான் என்று மக்கள் கூறுவது பொய்யில்லாப் பொருளுரையே; இம்மியும் ஐயமில்லை.

யூகி:—விடை பெற்றுக் கொள்கின்றேன். பிறகு வருகின்றேன்.

[யூகி சென்றதும், பதுமாவதி வருகின்ருள்.]

பதுமாவதி:—ஆருயிர்த் தலைவரே, யான் என் தவ்வை வாசவதத்தை வரவறிந்து கழி மகிழ் வெய்தினேன். அடியாளை வாசவதத்தையிடம் அறிமுகப்படுத்த வேண்டுகின்றேன். சிரமம் பாராது வாருங்கள்; புறப்படுங்கள்.

உதயணன்:—பத்மா, உனக்கும் அறிமுக வழக்கம் வேண்டுமா? என்ன ஆச்சர்யம்! நீ ஒரு தோழிமூலம் இன்னுளெனக் கூறிப் போய்த் தத்தையைக் காண்பாயாக. தத்தை யுன்னை நன்கறிவள். நானும் உன்னைப்பற்றி முன்னரே கூறியுள்ளேன்.

பதுமாவதி:—அன்பரே, தங்கள் விருப்பப்படியே யான் என்னருமைத் தவ்வையிடம் சென்று அளவளாவி மகிழ்கின்றேன். இதோ போகின்றேன்.

(பதுமாவதி தத்தைபாற் சென்று வணங்குகின்ருள்.)

வாசவதத்தை:—பத்மா, அருமைத் தங்காய், உன்னைப் பற்றி யாவுமறிவேன். உன்னைக் காண சழி பேருவகை

எய்தினேன். நாமிருவரும் ஒன்றுபட்டு வாழ்வோம்; எவரும் நம்மைப் பிரித்த லரிது.

(உதயணன் வருகின்ருன்.)

பதுமாவதி :—அன்பரே, எனது தவ்வை, தத்தை—உண்மையிலேயே ஒப்பாருமிக்காருமில்லா உத்தமி. அவளைப் பிரிந்து தாங்கள் இதுகாறும் உயிருடனிருந்தது பெரு வியப்பே யாகும்.

உதயணன் :—பத்மா, நீ இப்போ தறிந்தனையோ நான் ஏன் அவளை நினைந்து நினைந்துருகினேன் என்பதன் காரணம்? ஆனல், யான் வருந்திய காலை நின் அன்பே என்னைப் பேணியது. ஆகவே நீயும் பெறுதற்கரிய அருமணியே என்பதில் ஐயமில்லை.

வாசவதத்தை :—அரசரே, பதுமையும் மாசிலாக் குலத்து வந்தவள். மாண்புமிகு பண்புடையவள். நாங்கள் இருவரும் தங்கட்குற்ற துணையாக இருந்து அரசியல் காரியங்களிலும் ஆவன புரிவோம். எங்கள் பகையற்ற அன்பு வாழ்க்கையால் தங்கட்கு இடையரு இன்பளித்து வருவோம். ஆனல் நீங்கள் இப்போது எங்கட்கு ஒரு வரம் தரவேண்டும்.

உதயணன் :—தத்தாய், நீ யாது வேண்டினும் தருவேன். உடனே கேட்பாயாக.

வாசவதத்தை:—அன்பரே, இனித் தாங்கள் தங்கள் காதல் ஒழுக்கத்தை எம்மிருவருடனேயே நிறுத்திக்கொண்டு, அரசாங்க வாழ்வில் ஈடுபட்டுக் குடிகட்கு ஆவன புரிதல் வேண்டும். இவ்வரம் ஒன்றுதான் அடியாள் விரும்புவதாகும்.

உதயணன் :—தத்தாய், நீ கேட்ட வரம் சாலச் சிறந்தது. இப்படிப்பட்ட உத்தமிகளையே நம் நாடு பெற்று மேன்மையுறவேண்டும். தன் கணவன் கூடாவொழுக்கம் புகின், அவனைத் திருத்தி நல்வழிப்படுத்தலே உத்தம மனைவியின் பண்பாம். உனது நல்வரம் நல்கினேன். எனக்குறு துணையாய நீங்கள் இருவரும் என் கண்கள். எனவே, பிறமாதரைக் காண இனி எனக்குக் கண் ஏது? நமக்கு இறைவன் இன்னருள் புரிவான்; வாருங்கள், போவோம்.

---

ஐந்தாங்களம்

இடம் :—கௌசாம்பி—அரண்மனை அந்தப்புரம்

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—உதயணன், பதுமாவதி, வாசவதத்தை

உதயணன் :—தேவியர்களே, நாம் எல்லாச் செல்வங்களும் இறைவனருளால் வாய்க்கப் பெற்றுளோம். எனினும் மக்கட் செல்வம் இன்மை ஒன்றே நம் மகிழ்வைப் பெரிதும் பாதிக்கின்றது. நாம் சந்ததி யற்றுப் போய்விடுமோ என்ற அச்சமும் சின்னாட்களாக என்பாற் குடிபோந்துள்ளது. என் செய்வோம்?

பதுமாவதி :—அன்பரே, யானும் புத்திரப் பேறு கருதியே நோன்பியற்றிவருகின்றேன். தவ்வையாரும் இந் நோன்பு மேற்கொண்டுள்ளார். இறைவன் உறுதியாக அருள்புரிவான். கைவிடப்படோம். நோன்பியற்றிப்

பெறும் புதல்வர்கள் சாலச் சிறந்து விளங்குவார்க ளன்றோ !

உதயணன் :—தேவியர்களே, நீங்கள் நோன்பாற்றி வரும் செய்தி எனக்குத் தெரியாதே; அதுபற்றி பேருவகை அடைகின்றேன். நோன்பியற்றிப் புதல்வர்ப்பெறுதல் விசேடமே. ஆண்டவன் அருள் புரிவானாக.

[சில காலத்துக்குப் பின்னர் வாசவதத்தையும், பதுமாவதி யும் கருவுற்று இரண்டு ஆண் மக்களைப் பெற்று மகிழ் கின்றனர். வாசவதத்தையின் மகன் நரவாணதத்தன் என்றும், பதுமாவதியீன்ற மகன் கோமுகன் என்றும் பெயரிடப்படுகின்றனர்.]

உதயணன் :—தேவியர்களே, நீங்களிருவரும் இரண்டு புத்திர ரத்தினங்களை யீன்றளித்து மகிழ்வித்தீர்கள். நரவாணதத்தன், வித்தியாதரர் உலகை யாளும் சக்கர வர்த்தி யாவான் எனச் சோதிடர் கூறுகின்றனர். கோமுகனும் அவனுக்கு இணையாகவும் துணையாகவும் இருப்பானெனக் கருதுகிறேன்.

தேவியர்கள் :—அன்பரே, எல்லாம் அவரவர்கள் முற்பிறப் பில் செய்த புண்ணியததின் பலனாகும்.

[சிறிது காலத்தில் நரவாணதத்தன் விஞ்சையர் கோமகனாக வும், கோமுகன் மண்ணுலகச் சக்கரவர்த்தியாகவும் விளங்குகின்றனர்.]

உதயணன் :—தேவியர்களே, ஒப்பற்ற யூகி நமக்கு மந்திரி யாகவும் நட்பாளனாகவும் வாய்க்கப் பெற்றதும், அழகி லும் கற்பிலும் சிறந்த நீங்களிருவரும் என் மனைவியர்க ளாக வாய்க்கப் பெற்றதும், வித்தியாதர சக்கரவர்த்தி யாக விளங்கும் நரவாணதத்தன் புதல்வனானதும், பிற

நலங்களும் தவத்தின் பயனே யாதலால், யான் இனித் தவத்தை மேற்கொள்ள விரும்புகின்றேன். உலக ஆசைகளனைத்தையும் விட்டேன். இனி எனக்கு அரசும் செல்வமும் எற்றுக்கு?

தேவியர்கள் :—அன்பரே தாங்கள் விரும்பிய வண்ணமே செய்யுங்கள். தங்கள் மனம் தவத்தின்மேல் செல்வதால் நீங்கள் தவஞ்செய்தவர்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஆகவே தங்கள் ஊழ் தங்களை இப்பிறவியிலும் தவத்திற்கு இழுத்துச் செல்லுகின்றது. தங்களின் அரிய தவத்தால் எம்போன்ற பேதையர்களும் இப்பிறவிப் பெருங்கடல் கடந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதுறுதி. ஆகவே தாங்கள் தவஞ் செய்யப் போகலாம். எங்களை ஆசிர்வதியுங்கள். இதுகாறும் தங்களுடன் கூடி வாழ்ந்தோம். தவறுகள் இழைத்திருந்தால் ஏழையர் என்று எம்மை மன்னித்திடுங்கள்.

உதயணன் :—தேவியர்களே, உங்கட்கு இறைவன் அருள் புரிவானாக. நீங்களிருவரும் யாதொரு தீங்கும் எனக்குப் புரிந்ததாக எனக்கு நினைவில்லை. இம்மைச் சுகம் உங்களால் பெற்றேன். போய்வருகின்றேன்.

தேவிமார்கள் :—(உதயணன் காலில் வீழ்ந்து புலம்பிக் கொண்டு) நாங்களும் தங்கள் பின்னே தவம் புரிய வர விரும்புகிறோம். எங்களையும் அழைத்துச் செல்லுங்கள்.

உதயணன் :—தேவியரே, நீங்கள் என்பின் வரவேண்டாம். சிலகாலம் இங்கேயே இருங்கள். பிறகு எண்ணித்

துணியுங்கள். இப்பொழுது எனது துறவுக்குத் தடை புரியாதீர்கள். நல்வாக் களியுங்கள்.

தேவியர்கள் :—அன்பரே, போய் வாருங்கள். ஆண்டவன் அருள் புரிவானாக.

[உதயணன் துறவு பூண்டு, உதயண முனிவன் என்ற பெயர் தாங்கி, யோக சமாதியைச் செய்து முடித்து சித்த பதத்தை யடைந்தான். தேவியரும் மந்திரிகளும் தவஞ் செய்து கற்பலோகத்தை யடைந்து இன்புற்று வாழ்ந் தனர்.]

வாழ்க நற்றவர்! வாழ்க நல்லன்பர்!
வாழ்க நம் நாடு! வாழ்க நற்றமிழே!

சுபம்!

# கலிமதுரைப் பெருமான்

# கதைச் சுருக்கம்

---

கொங்குவேள் மாக்கதை என்னும் பெருங்கதையைக் காலஞ்சென்ற பிரும்மஸ்ரீ டாக்டர் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார்கள். அவர்கள் பதிப்பு இந்நாடகம் எழுத மிகப் பயன்பட்டது. ஐயரவர்கள் தமிழ்ப் பணிக்குத் தமிழுலகம் மிகக் கடமைப்பட்டுள்ளது. நாடகத்தில் சில வேறுபாடுகள் காணலாம். குறைபாடுகள் பலவற்றைப் பார்க்கலாம். அவை என்னுடையனவாகக் கருதுவார்களாக இதைக் கண்ணுறும் அன்பர்கள் குறைகள் இன்னவை யென்று அறிஞர்கள் எடுத்துக் காட்டினுல், அவற்றைத் திருத்திக்கொள்வதோடு அவர்கள்பால் நன்றியும் பாராட்டுவேனுக.

"கலிமதுரைப் பெருமான்" என்பது சிவபெருமான் மாமனுக வழக்குரைத்த கதை யென்று முகவுரைத் தொடக்கத்தில் கூறியுள்ளேன்.

மதுரைமா நகரில் சுந்தரபாதசேகர பாண்டியன் அரசு செலுத்தி வருகையில், தனபதி என்ற வணிகச் சீமான் சிறப்புடன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி சுசீலை என்பவள்; இவ்விருவர்க்கும் குழந்தையில்லை. ஆகவே, தனபதி தன் தங்கை சாவித்திரியின் மகன் ஞானசம்பந்தனை மகனுக 'தத்து' எடுத்தான். சிறிது காலத்திற்குப் பின் சாவித்திரிக்கும் சுசீலைக்கும் மனவருத்தம் ஏற்பட்டது. தனபதி தன் மனைவிக்குப் பரிந்து பேசினுன். சாவித்திரி தன் சகோதரனைப் பிள்ளையற்ற பாவியென்று இழித்துப் பேச, தனபதி மனம் புண்ணடைந்து தன்

மனைவி சுசீலையுடன் காட்டிற்குத் தவஞ் செய்யப் போனான்.

மதுரையில் செல்வபதி என்பவன் தனபதியின் தாயாதி. தனபதி காட்டிற்குச் சென்ற பிறகு, செல்வபதி, சாவித்திரியையும் சம்பந்தனையும் துன்புறுத்தி, அவர் தம் செல்வமனைத்தும் கவர்ந்தான். சாவித்திரி ஆலவாய்ப் பெருமானிடம் முறையிட்டாள். அப்பெருமான் சாவித்திரியின் கனவிடைத் தோன்றி, மறு நாள் அவ்வழக்கைத் தீர்ப்பதாகக் கூறி மறைந்தருளினார். மறு நாள் சாவித்திரி செல்வபதியை அறங்கூறவையத்தார் முன் கொணர்ந்து நிறுத்தினாள். அங்கு விசாரணை நடந்த போது சொக்கநாதப் பெருமான், தனபதி வடிவத்தில் அங்கு வந்தார். செல்வபதி அஞ்சினான். அறங்கூறவையத்தார் நீதி வழங்கினார். செல்வபதி வழக்கிழந்தான். சிவபெருமான் சம்பந்தனுக்குக் காட்சியளித்தார். இதுவே கதைச் சுருக்கம். பரஞ்சோதி திருவிளையாடலின் கதை மிகச் சுருங்கியது. அக்கதையை வைத்துக்கொண்டு சற்று விரிவாக நாடகமாய்ச் செய்துள்ளேன். முதனூலில் இல்லாத பேர்கள் யான் புனைந்தவை. நாடகத்திற்கு வேண்டிய நகைச்சுவை ஓரளவு கலந்துள்ளேன்.

# கலிமதுரைப் பெருமான்

---

## நாடக பாத்திரங்கள்

தனபதி செட்டியார்—மதுரையில் ஒரு வணிகச் (சீமான்)

ஞானசம்பந்தன்—சாவித்திரியின் மகன்; தனபதி செட்டியாரின் சுவீகாரப் புதல்வன்

வேணுகோபால் செட்டியார் } தனபதிசெட்டியாரின் தோழர்கள்
சோமசுந்தரஞ் செட்டியார் }

பழனியப்பச் செட்டியார்—தனபதி செட்டியாரின் கணக்கப் பிள்ளை

செல்வபதிச் செட்டியார்—தனபதியின் பங்காளி

குஞ்சிதபாதச் செட்டியார்—பாண்டியன் மந்திரி

குப்புராவ்—நீதிமன்றத்துச் சேவகன்

சுசீலை—தனபதியின் மனைவி

சாவித்திரி—தனபதியின் தங்கை

ராமாயி—தனபதி செட்டியாரின் வேலைக்காரி

அகிலாண்டம்மாள்-தனபதி செட்டியாரின் அண்டை வீட்டுக்காரி—ஒரு சாட்சி

# கலிமதுரைப் பெருமான்

---

## அங்கம்—1

### முதற்களம்

இடம் :— மதுரை நகரத்து வணிகர் தெரு
—தனபதி செட்டியார் மாளிகை

காலம் :—காலை

பாத்திரங்கள்:—தனபதி செட்டியார், சோமசுந்தரஞ் செட்டியார், சுசீலை

தனபதி செட்டியார் :—ஓய் சோமசுந்தரஞ் செட்டியாரே, வாருமையா, வாரும். உம்மைப் பார்த்துப் பல நாள் ஆய் விட்டதே. எங்கேனும் தொலைதூரஞ் சென்றிருந் தீரோ? அல்லது வடக்கே காசிக்கு யாத்திரைதான் போயிருந்தீரோ? உம்மைக் காணவேண்டுமென்ற ஆசையினால் உமது வீட்டிற்குச் சென்ற வாரமும், அதற்கு முந்தின வாரமும், இரண்டு தடவை என் கணக் கப்பிள்ளை பழனியப்பச் செட்டியை அனுப்பியிருந் தேன். உங்கள் மனைவியார் நீர் எங்கோ சென்றிருப்ப தாகவும், எப்போது வருவீர் என்பது திட்டமாகச் சொல்வதற்கில்லை என்பதாகவும் சொல்லி யனுப்பினார்.

சோமசுந்தரஞ் செட்டியார் :—செட்டியார் திலகமே, நீர் ஆள் அனுப்பி யிருந்தபோது, யான் பழனிக்குச் சென்

றிருந்தேன். சென்ற இடத்தில் மழையில் நனைய நேர்ந்தது. அதனால் எனக்குச் சுரம் வந்துவிட்டது. இருபத்திரண்டு நாள் சுரம் விடவில்லை. அங்கேயே எனது மகள் வீட்டில் தங்கிவிட்டேன். சுரம் விட்ட பிறகு புறப்பட்டு வெகு சிரமத்துடன் வீடுவந்து சேர்ந்தேன். உம்மைப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. உடனே தங்களைத் தேடி வந்தேன்.

தனபதி செட்டியார் :—ஓ, ஹோ ; அப்படிச் சொல்லும். அதுதான் உம்மைப்பார்த்ததும் ஒருமாதிரியாக இருப்பதுபோலத் தோன்றியது. உடம்பு அசௌக்கியமா என்று கேட்க வாயெடுத்தேன். அதற்குள் அபசகுனம் பிடித்தாற் போல அவ்வாறு கேட்பானேன் என்று வாயடக்கிக் கொண்டேன்.

சோ. சு. செட்டியார் :—செட்டியாரே, நாமிருவரும் குழந்தைப் பருவத்திலிருந்து பழகி வருகின்றோம். அடிக்கடி பார்க்க வாய்ப்பு இல்லாவிட்டாலும் நாம் ஒருவரையொருவர் எப்போதும் மறந்தறியோம். அப்படியிருக்க நீர் எது கேட்டாலும் என்ன ? யான் தவறாக எண்ணுவேனா ?

தனபதி செட்டியார் :—அதற்கில்லை, சோமு; ஒருவரைச் சிறிதுகாலம் காணாமலிருந்து பிறகு சந்திக்க நேர்ந்தால் சிலர், "உடம்புக்கென்ன? அசௌக்கியமா?" என்றெல்லாம் அர்த்தமற்ற முறையில் கேட்டுக்கொண்டே போவது நம் தமிழரிடையே வழக்கமாகி விட்டது. அந்தக் கூட்டத்தில் என்னையும் ஒருவனாக எண்ணிவிடக் கூடாதே என்றஞ்சியே உடம்பு அசௌக்கியமா என்று கேட்கவில்லை.

சோ. சு. செட்டியார் :—அஃதிருக்கட்டும் ; உமது வியாபாரம் எப்படி இருக்கிறது?

தனபதி செட்டியார் :—வியாபாரத்துக்கென்ன குறைவு? எப்போதும் போலவே நன்றாகத்தான் நடந்து வருகின்றது. நமது மதுரைக் கடைக்குப் பல இடங்களில் கிளைகள் ஏற்படுத்தி யிருக்கின்றேன். நமது சரக்குகளுக்கு எங்கும் நல்ல பேரும் இருக்கின்றது.

சோ. சு. செட்டியார் :—ரிம்ப சந்தோஷம். உமது சரக்குகட்கு நல்ல பேர் இருக்குமாயின் வியாபாரத்துக்கு என்ன குறை? நீர் நல்ல புண்ணியவான்; தருமசிந்தை யுள்ளவர்; ஆலவாய்ப் பெருமான் அருள் இருக்கும் வரையில் ஒரு குறைவும் உமக்கு வாராது.

தனபதி செட்டியார் :— சோமு, உம்போன்ற உண்மை நண்பர்களின் நல்லாசியாலும், திருவாலவாயண்ணல் திருவருளாலும் எனக்குச் செல்வத்திற்குச் சற்றுங் குறைவில்லை. இருந்தாலும், எனக்கு மகிழ்ச்சிக்கு இடமேது? நீர் நினைக்கிறபடி யான் அவ்வளவு புண்ணியவானுமில்லை.

சோ. சு. செட்டியார் :—என்ன ! நீர் சொல்வது ஆச்சர்யமாக இருக்கின்றதே. உமக்கென்ன வீடுகள் குறைவா? வாகனங்கள் குறைவா? ஏவலாளர் குறைவா? எந்த வகையில் உமக்குக் குறைவுண்டு? உம்மைப்போல் பகவான் என்னை வைத்திருந்தால் தருக்கித் தலையால் நடந்திடுவேனே ! என்னவோ ஈசன் என்னைச் சரியான நிலையில் வைக்கவில்லை. உம், அதெல்லாம் அவனிச்சை !

தனபதி செட்டியார்:—சோமசுந்தரம், எனக்கு வீடுகள் பல. பசுக்கள் பற்பல. வாகனங்களும் எண்ணில. ஏவலாளர்

தொகையும் அதிகமே. இருப்பினும் எனக்குச் சந்தோஷமில்லை. மகிழ்ச்சியாக இருக்கலாம் என்றால் இருக்க முடியவில்லையே.

சோ. சு. செட்டியார் :—அதென்ன தாங்கள் அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? யான் படும்பாடு நீர் அறிந்தது தானே. எனக்குக் குழந்தைகள் பல. வறுமையிலும் குசேலருக்கு இளைத்தவனில்லை. இதனை யான் என்னென்று கூறுவேன்! பிள்ளைகள் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும் வழியில்லை. பிள்ளைகளால் இவ்வளவு கஷ்டமிருப்பதை யறிந்திருந்தும் புத்திரப்பேற்றை ஆன்றோர் ஏனோ 'புத்திரபாக்கியம்' என்றும், 'சந்தான சம்பத்து' என்றும் கூறிப் போந்தனர். உங்களிடமின்றி வேறு யாரிடம் கூறப்போகின்றேன். வறுமையின் கொடுமை தாங்க முடியாமல், மருமகப் பிள்ளையைக் கண்டு, ஏதேனும் பெற்றுவரக் கருதியே பழனிக்குச் சென்றேன். 'காசிக்குச் சென்றாலும் கருமம் விடவில்லை,' என்பதுபோல வழியில் நல்ல கோடை இடியிலும், காற்றிலும், மழையிலும் அகப்பட்டுக் கொண்டேன். ஒதுங்க இடமில்லை. முற்றிலும் நனைந்தேன். மழை நீர் சொட்டச் சொட்ட என் மகள் வீடு சேர்ந்தேன். மறுநாளே சுரம் வந்துவிட்டது; இருபத்திரண்டு நாள் படாத பாடுபட்டேன். போன காரியமும் பலிக்கவில்லை. நோயுற்றுத் துன்பமடைந்தது தான் மிச்சம். வெறுங்கையுடன் வீடு சேர்ந்தேன். என் வீட்டுக்காரியைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே!

தனபதி செட்டியார் :—எல்லாம் எம்பெருமான் செயல். உமக்களித்த புத்திரபாக்கியத்தில் எனக்குக் கொஞ்சம்

ஈசன் அளித்திருக்கக் கூடாதா? அன்றி, எனக்களித்த செல்வத்தில்தான் உமக்குக் கொஞ்சம் அருளியிருக் கப்படாதா ?

சோ. சு. செட்டியார் :—என்ன கூறுகிறீர்கள்! உங்கட்குப் பிள்ளையில்லையா? உமது வீட்டில் ஒரு பையனைப் பார்த் திருக்கின்றேனே. அவனை உமது பையனென்றல்லவோ கருதி யிருந்தேன்! இப்பொழுதன்றோ என் தவறு புல னாகின்றது. நீர் கருதுகிறபடி எனது புத்திரப் பேற் றில் உமக்கும், உமது பொருட்பேற்றில் எனக்கும் ஈசன் பங்கு கொடுத்திருந்தால் பாக்கியவான்களாய் இருந்திருப்போம். இருந்தாலும், வறுமை கொடிது. "கொடிது கொடிது வறுமை கொடிது," என்றனர் நம் மூதாட்டியாரும். பிள்ளைப்பேறில்லாவிடில் பிள்ளை இல்லை என்ற ஒரு கவலைதானே! அதுகூட அவ்வளவு பெரிதில்லை. ஆனால் வறுமையால் ஏற்படும் விசாரங்கள் எண்ணிலடங்கா வன்றோ!

தனபதி செட்டியார் :—செட்டியாரே, உமக்குப் பிள்ளைப் பேறில்லாமையால் ஏற்படும் மனச் சங்கடம் தெரியாது. புத்திரனில்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? என்னனைய செல்வர்கட்கு மகப்பேறின்றேல் இம்மைச் சுகமும், மறுமை நலமும் ஒருங்கே யில்லாதொழியும். வறுமை யைச் சகிக்கலாம். போக்கவும் கூடும். என்னைப் போன்ற உண்மை நண்பர்கள் உம்மைப்போன்றார் வறுமையைப் போக்கமுடியும். வெளியில் சென்று எவ்வளவு இன்னலுற்று மனமுடைந்து வீடுதிரும்பினா லும் அருமைக் குழந்தையின் 'அப்பா' என்ற மழலைச் சொல்லும், அரிய இன்பம் தரும் அவர் ஸ்பரிசமும் தோன்றுமாயின். நமது சஞ்சலமெல்லாம் உடன்

ஒழிந்துவிடுமே! அத்தகைய புத்திரனில்லாக் குறையைப் போக்கவும் முடியுமோ? இப்பிறவியில் நீக்கமுடியாத என் குறைபோலும் அது! [சுசீலை வருகிறாள்]

சுசீலை:—என்ன, நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டீர்களே? ஏன், இன்று கடைக்குப் போகவில்லையா? சீக்கிரம் போகவேண்டுமென்றீர்கள். இங்கு இவரிடம் உங்கள் பாட்டுக்குப் பேசிக்கொண்டே இருந்துவிட்டீர்களே. ஏன்? இருவர் முகத்திலும் ஈயாடவில்லையே? என்ன சமாசாரம்? ஏதேனும் நஷ்டச் செய்தி வந்ததா? என்ன ஐயா, நீங்கள் செளக்கியமா? இந்தப் பக்கமே வரக்காணுமே. எங்களை முழுதும் மறந்துவிட்டீர்களோ? உங்களுக்கென்ன! எத்தனையோ புதுப்புதுப் பணக்கார நண்பர்கள் சிநேகம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. எங்களை இனிப் பிடிக்குமா உங்களுக்கு?

தனபதி செட்டியார்:—சுசீலை, என்ன அப்படிப் பேசுகிறாய்? ஏன் இந்த நிஷ்டூரமொழிகள்? வெந்த புண்ணில் வேலை விடுகின்றாயே? நமது சோமசுந்தரம் தமது வறுமையின் கொடுமையையும், ஆற்றாமையையும் என்னிடம் கூறி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார். நீ மத்தியில் சந்தர்ப்பம் அறியாது அவர் மனதை இப்படிப் புண்படுத்திவிட்டாயே. இனி யாரிடமும் இவ்வாறு வெடுக்கெனப் பேசுவதை விட்டுவிடு. பேச்சில் இனிமையும் நன்மையும் கலந்திருக்க வேண்டும். உன்பேர் சுசீலை. மறந்துவிடாதே. அதற்கேற்ப பேசவும் நடக்கவும் அறிந்திருக்க வேண்டும்.

சுசீலை:—உம் விருப்பம்போல் நடந்து கொள்கிறேன். அதிருக்கட்டும், நீங்கள் ஏன் ஒரு மாதிரி, கவலையுடன் காணப்படுகின்றீர்கள்?

தனபதி செட்டியார் :—சுசீலா, நேரமாகி விட்டது. உணவு தயாராயிருந்தால் எங்களிருவர்க்கும் இலை போடு. மற்றதைப்பற்றி மாலையிற் கூறுகின்றேன்.

சுசீலை :—முன்னரே சொல்லியிருக்கலாகாதா? இன்று சாதாரண சமயல்தான். நல்ல காய்கறி ஒன்றும் சமைக்கவில்லையே.

சோ. சு. செட்டியார் :—அம்மா, அதைப்பற்றிக் கவலை அடைவானேன்? உள்ளதை உள்ளன்புடன் படைத்தால், அதுவே அமிர்தமாக இனிக்காதோ? இன்பம் தாராதோ?

[தனபதி செட்டியாரும் சோமசுந்தரஞ் செட்டியாரும் உணவு அருந்துகின்றனர். பின்னர், தத்தம் வேலைமீது செல்கின்றனர்.]

---

## இரண்டாங்களம்

இடம் :—தனபதி செட்டியார் வீட்டில் ஓர் அறை

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—சுசீலை, தனபதி செட்டியார், ராமாயி

சுசீலை :—ஏ, ராமாயி, என்ன செய்கிறாய்? நம்ம செட்டியாரை அழைத்துக் கொண்டு வா. 'ஆச்சி பேச வேண்டுமாம்' என்று சொல்லு; உடனே வருவார். சற்றுத் தாமத மானாலும் இருந்து கையுடன் அழைத்து வா. போ.

[ராமாயி அழைத்ததும் செட்டியார் வீடுறுகிறார்.]

தனபதி செட்டியார் :—ஏன் என்னை அவ்வளவு அவசரமாகக் கூட்டிவரச் சொன்னாய்? ஏதேனும் முக்கிய காரியம் உண்டா? உண்டெனில் உடனே சொல்லு.

சுசீலை :—உங்களிடம் பேசவேண்டும்போல் எனக்குத் தோன்றியது. அதனால்தான் அழைப்பித்தேன். இப்படி இத் தவிசின் மீது இருங்கள். நான் மேல் வீடு சென்று வெற்றிலை பாக்குக் கொண்டு வருகின்றேன்.

தனபதி செட்டியார் :—சரி, நீ இங்கேயே இரு. வெற்றிலைத் தட்டை ராமாயி போய்க் கொண்டு வரட்டும். நீ எதற்காக வீணில் மேல் வீட்டுக்கு ஏறி இறங்க வேண்டும்? அது கிடக்கட்டும். வீண் பேச்சுப் பேசுவதற்கா என் வேலை கெடும்படி இங்கு என்னை உடனே வரச் சொன்னாய்? மாலை வேளையில்தானே மும்முரமான வியாபாரம் நடக்கும். இச் சந்தர்ப்பத்திலா வீண் பேச்சுப் பேச அவசரமாய் அழைத்திட்டாய்? ஊம். விஷய மிருந்தால் விளங்கக்கூறு.

சுசீலை :—என்ன, உங்களுக்குமா என்னிடம் அலட்சிய புத்தி ஏற்பட்டுவிட்டது? என்னோடு பேசுவது வீண் பேச்சா? என் சுற்றத்தார்கள்தாம் என்னை மலடி என்று இகழ்கிறார்கள் என்றால், நீங்களும் அப்படியே ஆரம்பித்து விட்டீர்களே! எல்லாம் நான் வந்த வழி.

(விம்மியழுகிறாள்)

தனபதி செட்டியார் :—ஏனிப்படி விம்மி விம்மி அழுகிறாய்? யார் உன்னை அலட்சியமாக நடத்துகின்றனர்? வியாபாரம் மும்முரமாக நடக்கின்ற போது பேச நேரமில்லை என்றேனே தவிர, உன்னுடன் பேசுவதெல்லாம் வீண் பேச்சென்று கூறினேன்? ஏன் நீ இப்படித் தப்பர்த்தம் செய்துகொண்டு அழுகின்றாய்? உன்னை மலடியெனக் கூறி, மதியாத சுற்றத்தார் தலைவாயிலை நீ மிதிக்காது போயேன். வீணே ஏன் வருந்துகின்றாய். இன்று

வெள்ளிக்கிழமை யல்லவா! நாமிருவரும் நமதப்பன் ஆலவாயண்ணலை அவன் சந்நிதி சென்று வணங்கி வருவோம்.

சுசீலை :—ஓ! ஹோ! பெருமானிடம் பிள்ளைவரம் கேட்கப் போகின்றீர்களா?

தனபதி செட்டியார் :—ஏன்? கேட்கக் கூடாதா? பிறவிப் பிணிக்கு மருந்தாய நம் பெருமானைக் கண்குளிரக்கண்டு வாயார வாழ்த்துதற்குப் போக எண்ணினேனே தவிர, காமியமாகவோ, அன்றி வியாபார முறையிலோ அவ னிடம் போக விரும்பவில்லை. ஒரு நாளெல்லாம்—ஏன் எப்பொழுதுமே—ரூபா அணா பை யென்று கணக் கெண்ணிக் காலம் கழிப்பதை விடுத்து, ஒரு நாழிகை அளவாவது அழியாப் பரம்பொருளான அவிர்சடை அண்ணலை எண்ணி எண்ணி, அஞ்செழுத்தை அன் புடன் ஓதி, கசிந்து உள்ளுருகி, மெய் விதிர்க்க அவன் திருமுன் நின்று, அவனை வாயார வாழ்த்தித் தலையார வணங்கிட விழைந்தேன். வேறொன்று மில்லை. நம் குறைகளைப் போக்கி நம்மைத் தாங்குதல் அவன் கடன்; நம் கடன் பணி செய்து கிடப்பதேயன்றோ!

சுசீலை :—நான் சாமானியமாகக் கேட்டேன். நீங் கள் பக்தியைப்பற்றிக் குட்டிப்பிரசங்கம் செய்து விட் டீர்கள்; அதுவும் நல்லதே. தாங்கள் வியாபார முறையில் அவனிடம் போக விரும்பவில்லை என்றீர் களே, அதன் பொருள் என்ன? ஒரு வேளை அவன் நங்குல முதல்வன் என்ற முறையில், ஆலவாயன் வியா பாரத்தில் அநுபவமுள்ளவனெனக் கருதி, வியாபார ரகஸ்யங்கள் ஏதேனும் கற்றுக்கொள்ள நம்மவர் அவன்

பாற் போவதுண்டு. அதுபோலத் தாங்கள் போக விரும்பவில்லை என்ற பொருளிற் பேசினீர்களோ?

தனபதி செட்டியார்:—சுசீலா, இல்லை. இல்லை. நீ கொண்டது பொருளற்ற போலியுரையாகும். நான் சொன்னது என்ன வென்றால், ஒரு சிலர், கோயில் சென்று "ஆண்டவனே, நீ எனக்கு இன்ன காரியம் கைகூடுவித்தால், இன்ன அர்ச்சனை செய்வேன். எனக்கு ஆண் மகவு பிறந்தால் உனக்குப் பசுத் தருகிறேன்; பாலாபிஷேகம் செய்கிறேன்,'' என்றெல்லாம் இறைவனிடம் பேசுகின்ற தன்மையே வியாபார முறையாகும் என்றேன்.

சீசுலை:—ஆண்டவனைப் பின்னர் எப்படித்தான் வழிபட வேண்டும்? நீங்களே சொல்லுங்கள் கேட்கிறேன். என் போன்றவர்கள் இப்படித்தான் இறைவனை வேண்டுவது வழக்கம். உங்களதைப் போன்ற கருத்துடன் சென்று வழிபடுவோர் மிகச் சிலரே. அது மிகமிக அரிது கூட.

தனபதி செட்டியார்:—சுசீலா, நீ சீக்கிரம் புறப்படு. இன்று வெள்ளி நன்னாள் ஆனதால், கோயிலில் பக்த கோட்டிகள் திரள் திரளாய் வருவார்கள். நேரமாய் விட்டது. ராமாயி, நீ சென்று விரைவில் பூசனைக்குரிய தேங்காய், பழம், பூ முதலியன வாங்கி வா. போ, சீக்கிரம்.

சுசீலை:—நான் கேட்ட கேள்விக்கு விடையில்லை. பறக்கின்றீர்களே! என்ன பதட்டம்! அம்மம்ம! இதோ புறப்பட்டு விட்டேன். (ராமாயி பழம், பூ முதலியன வாங்கிவருகிறாள்.)

தனபதி செட்டியார்:—நீ வர வர அதிகமாகப் பேசத் தலைப்பட்டுவிட்டாய் சுசீலா. "பெண்டிர்க்கழகு எதிர்

பேசாதிருத்தல்," என்று பெண்ணுக்கு இலக்கணம் வகுத்த பாண்டிய மன்னன் ஆண்ட இப்பாண்டி நாட்டிற் பிறந்து வளர்ந்து வாழ்க்கை நடத்தும் நீயா இவ்வளவு பதட்டமாகப் பேசுவது? இதுவும் காலத்தின் கோலம் போலும்!

சுசீலை:—அன்பரே, அபசாரம், அபசாரம்; பொறுத்தருள்க. தெரியாததைக் கேட்டுத் தெரிந்துகொள்ள நான் விரும்பிக் கேட்டால், 'வாயாடி' என்று பட்டம் கட்டுகின்றீர்களே. நாவலூராளி, வெண்ணெய் நல்லூரனுக்குக் கொடுத்தது போலல்லவா எனக்கும் இப்பட்டம் வழங்கிவிட்டீர்கள். நீங்கள் சொல்வதெல்லாம் கேட்டுக் கொண்டு எதிருரை யின்றிவாளாவிருந்தால் 'பேசாமடந்தை' என்ற பெரும்பட்டம் அளிக்கப் பின் வாங்குவதில்லை. யான் என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. (கண்ணீர் விட்டழுகிறாள்.)

தனபதி செட்டியார்:—பேதையே, ஏன் இவ்வாறு கோயிலுக்குப் புறப்படும்போது சகுனத்தடையா யழுகின்றாய்? "கண்ணீரே கனங்குழை மாதரார் கைப்படை," என்ற அறிஞர் கூற்று முற்றும் உண்மையாகின்றது. குழந்தைகள் அழுது காரியசித்தி பெறுவதேபோல மகளிரும் கண்ணீராம் மாயப்படை கொண்டு வெல்கின்றனர். கண்ணைத் துடைத்துக் கொள், போ. கைகால் முகம் கழுவி நெற்றியிற் குங்கும் வைத்துக்கொண்டு மங்களகரமாகப் புறப்படு. ராமாயியையும் நம்முடன் அழைத்துப் போவோம்.

சுசீலை:—இதோ புறப்பட்டுவிட்டேன். இனித் தங்களுடன் அதிகமாகப் பேசுவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். எனக்கு நாவடக்கம் போதாதென்று என் இளமையிலேயே என் தந்தையார் சிவநேசச் செட்டியார்

சொல்வதுண்டு. அவரிடம் அடிக்கடி பயின்று வந்த இக் குறள்மணி-"யாகாவா ராயினு நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு," என்பது- இன்னும் என் நினைவை விட்டகலவில்லை. ஆஹா! அவர் அதற்கு எவ்வளவு அழகாகப் பொருள் கூறுவார் தெரியுமா! பிறகு அவர் என்னைப் பார்த்து "நீ இப்போதே நாவடக்கத்தைக் கைக்கொள்ளாவிடில், பின்னால் உன் கணவன் வீட்டில் கஷ்டப்படுவாய்," என்று அறிவுறுத்துவார். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை," எனக் கருதிப் போற்று தொழிந்தமையால் அன்றோ எனக்கின்று 'வாயாடி' யென்னும் விருது கிடைத்தது.

தனபதி செட்டியார்:—சரி, பேசிக்கொண்டே போவோம் புறப்படு, (மூவரும் நடக்கின்றனர்.) சுசீலா, நமது திருமணத்தின் பின் இத்தனையாண்டுகள் சென்றும், இதுவரையில் உன் வாக்குவன்மையை யான் அறிந்தேனில்லை; இன்றுதான் அறிந்தேன். நன்றாகப் பேசுகின்றாயே! அரிய பல செய்திகளையெல்லாம் அள்ளி வீசுகின்றாயே! நான் சொன்னதற்குக் கோபமா? பொறுத்துக் கொள்.

சுசீலை:—'மடம்' என்ற பண்பு எங்களுக்கு உண்டல்லவா! ஆகவே அறிந்தவற்றை அதிகமாகக் காட்டிக் கொள்வதில்லை. நான் இவ்வளவு கவனத்துடனிருக்கும் போதே, மன்னர்கள் தம் பிறந்த விழாக்கொண்டாடுங்கால், தகுதி வாய்ந்த தம் அதிகாரிகட்குச் சிறப்புப் பட்டங்களை வழங்குவதுபோலப் பட்டங்கள் வழங்குகிறீர்கள். இன்னும் எனது கல்வி முழுவதும் காட்டினால் என்னதான் சொல்லமாட்டீர்கள்?

(சொக்கநாதர் கோயிலை யடைகின்றனர்.)

## மூன்றுங்களம்

இடம் :—ஆலவாயண்ணல் சந்நிதி

காலம் :—இரவு ஏழுமணி

பாத்திரங்கள் :—தனபதி செட்டியார், சுசீலை, அர்ச்சகர்

தனபதி செட்டியார் :—(அர்ச்சகரைப் பார்த்து) ஐயரே, நாங்கள் சொக்கநாதன் வழிபாட்டிற்கு வந்திருக்கிறோம். இத் தேங்காய்ப் பழங்களைக் கருணையங் கடலாகிய நமது ஆலவாய்ப் பெருமானுக்குக் கையுறையாகக் கொணர்ந்திருக்கின்றோம். இவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அர்ச்சகர்:—இப்படித் தாரும். ஏனையவர் கையுறைகளோடு சேர்த்து வைத்து இறைவனுக்கு வழங்குகின்றேன். [அர்ச்சகர் தேங்காய்ப்பழங்களை வாங்கிக்கொள்கிறார்.]

தனபதி செட்டியார் :—ஐயரே, இன்று வெள்ளிக்கிழமையாதலால் சாமிக்குச் சகஸ்ர நாம அர்ச்சனை செய்ய விரும்புகின்றேன். அதற்குக் கட்டணம் யாது?

அர்ச்சகர் :—செட்டியார்வாள், இன்று எனக்கு வேலை அதிகம். நீர் சோமவாரத்தன்று வாரும். வெகு திருப்தியாய்ச் செய்து வைக்கிறேன்.

சுசீலை :—அன்பரே, 'சகஸ்ர நாமார்ச்சனை' யென்றால் என்ன?

தனபதி செட்டியார் :—சுசீலா, ஆண்டவனது ஆயிரம் திரு நாமங்களையும் அர்ச்சகர் வடமொழியிற் கூறி, இறைவனை யழைத்து ஒவ்வொரு மலரை இறைவன் மேல் இட்டு அர்ச்சித்தலுக்கே சகஸ்ர நாமார்ச்சனை

என்று பெயர். அர்ச்சகர் அதை நம் பொருட்டுச் செய்வதால் நாமவருக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

சுசீலே :—இறைவனைத் துதிக்க ஏன் ஆள் அமர்த்தவேண்டும்? நீங்கள் தமிழிலேயே தோத்திரங்கள் கூறி வணங்கவொண்ணுதா? இது தாங்கள் அறியாததா? "அர்ச்சனை பாட்டேயாகும்," என்று வெண்ணெய் நல்லூர் வள்ளலே சுந்தரர்க்குச் சொல்லியுள்ளாரே. உங்களுக்குத் தெரிந்த தண்டமிழ்ப் பாடல்களைக் கூறி வழிபடலாமே.

தனபதி செட்டியார் :—நீ கூறுவது முற்றும் சரியே. வழக்கத்தையொட்டி யான் அர்ச்சனை செய்ய முயன்றேன். முடியவில்லை. சரி. நம் பெருமானும் தமிழ்ப் பாடல்களில் நனி விருப்பன் என்பர். அவ்வாறே வழி படுகின்றேன்.

சுசீலே:—கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவாருமுண்டோ? "மனம் கரைத்து மலம் கெடுக்கும்" அம் மாணிக்கவாசகத்தில் நீங்கள் மிக ஈடுபாடு உடையவராயிற்றே! இறைவனுக்கும் அவ் வாசகத்தில் எல்லையற்றஇன்பம் உண்டு. அதனுலன்றே அதனை அவன் தன் கைப்பட வரைந்தான் என்பர். ஆகவே வாசகஞ் சொல்லி வழுத்தி இறைவன் திருமுன்னர் உருகி நில்லுங்கள். என்னுளமும் அதிலீடுபடட்டும்.

தனபதி செட்டியார் :—ஏ! சொக்கநாதா! போற்றி! போற்றி!

"கூடல் இலங்கு குருமணி போற்றி!
தென்றில்லை மன்றினுள் ஆடி போற்றி!
இன்றெனக் காரமு தானய் போற்றி!
மூவா நான்மறை முதல்வா போற்றி!

சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி !
மின்னார் உருவ விகிர்தா போற்றி !
கல்நார் உரித்த கனியே போற்றி !
காவாய் கனகக் குன்றே போற்றி !
ஆவா வென்றெனக் கருளாய் போற்றி !
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி !
இடரைக் களையும் எந்தாய் போற்றி !
ஈச போற்றி! இறைவ போற்றி!''

(அர்ச்சகர் தீபாராதனை காட்டுகின்றனர் பக்தர் அனைவரும் கும்பிடுகின்றனர். அரஹரமுழக்கம் மிகுகின்றது)

தனபதி செட்டியார் :—சம்போ, சங்கர ! மகாதேவ !

(பாடுகிறார்)

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்(பு)இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்(கு)எழுந் தருளுவ(து) இனியே.

சுசீலை :—அன்பரே, யானும் ஒன்று சொல்லித் துதிக்க விரும்புகின்றேன்.

தனபதி செட்டியார் :—இஃதிறைவன் சந்நிதி. இங்கு உனக்குத் தெரிந்த பாட்டைப் பாடித் துதிப்பதற்குத் தடையேது?

சுசீலை:—இங்கு அனேக ஆடவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் முன் நான் ஒரு பெண் பாடலாமோ என்னும் ஐயம் எழுந்தது.

தனபதி செட்டியார்:—சுசிலா, ஆண்டவன் சந்நிதானத்தில் அவனைத் துதிப்பதில் ஆண் என்றும், பெண் என்றும் விலக்குண்டோ. அவனை வணங்க ஆழ்ந்த அன்பு வேண்டும். அஃதே அன்பர்கள் உள்ளங் குழைவிப்பதாகும். நமது மணிவாசகப் பெருந்தகையார்,

“ அன்பெனும் ஆறு கரையது புரள,
நன்புலன் ஒன்றி, “ நாத ”வென் றரற்றி,
உரைதடு மாறி, யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி.”

என்று கூறுவதன் நுணுக்கம் அறிந்து பாராட்டிக் கொள்ளற்குரியது. நம் அன்பு வெள்ளம் ஆண்டவனை நோக்கி ஓடுதல் வேண்டும். அப்பொழுது நமது புலன்கள் பொறிவழிச் செல்லாமல் ஒடுங்கி இறைவனை ‘நாத’ என்றரற்றுதலொன்றே புரியும். அன்புக் கடல்மடையினின்றும் அவனைப் புகழ வார்த்தைகள் ‘நான் முந்தி, நீ முந்தி’ என்றிடித்துப் புடைத்தோடி வரும்போது, உரை தடுமாறுகின்றது. ஆனந்த வெள்ளம் மீதூரப் புளகாங்கிதமும் ஏற்படுகின்றது. உடனே கை மலர் குவிகின்றது. இதயமலர் விரிகின்றது. மலர்கின்றது, என்னே அவரது வாக்குத் திறன்! அன்பின் திறந்தான் என்னே! ‘அன்பெனுந் தன்மையை யமரருமறியார்,’ என்பர். ஆனால் நம் ஆளுடைய அடிகள் நன்குணர்ந்து அனுபவித்தவர். எட்டுணையும் ஐயமில்லை. மலரினின்

றும் தேன் துளிப்பதேபோல் இதய மலரினின்றும் அன்புத்தேன் ஆனந்த நீர்த்துளியாய்த் தோன்றிப் பெருக்கெடுத்துப் பாய்கின்றது. அந்த அன்பே சாயா அன்பு. அது கோடாதும் குறையாதும் வளரும் அன்பாகும். அதற்கு அழிவேது? உலகின் நிலையில்லாப் பொருள்களிடத்து வைக்கும் அன்பு இத்தகைய சாயா அன்பாகாது. அது சாய்ந்துவிடும். ஆகவே ஆண்டவன்பால் செலுத்தும் அன்பு ஒன்றே சாயா அன்பெனப்படும். அத்தகைய அன்பினரையே ஆண்டவன் தாயாகி வளர்க்கின்றனனும். "தாயேயாகி வளர்த்தனை,'' என்கின்றார் அடிகள். சுசீலா, அதனால் தான் நம் பரம கருணாநிதியாகிய இறைவன் இராகத்தையோ தாளத்தையோ பாரான். உனது அன்பே அவனுக்கு வேண்டுவது. கூச்சமெதற்கு? ஆண்டவன் சந்நிதியில் ஆன்மாக்கள் யாவும் பெண்களே. அவன் தான் நாயகன். நீயும் நானும் அவனுக்கு முன் பெண்களே. நீ பெண் என்று கூசுகிறாய்? பாடலாம் பாடு. நேரமாகின்றது.

சுசீலை :—(பாடுகின்றாள்.)

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே; சிவபெரு மானே;
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கெழுந் தருளு வதினியே.

(இரு கண்களிலும் நீர் பெருகக் கல்லுங் கரைய மோகன ராகத்தில் மிக இனிமையாகப் பாடி மெய்ம்மறந்து நிற்கின்றாள்.)

வேண்டுமென்பது தெரியாதா? அதனால்தான் அந்த மோகன ராகத்தில் பாட்டுவித்தான். எல்லாம் அவன் செயல்.

(மீனாட்சியம்மையின் சந்நிதி யடைகின்றனர்.)

தனபதி செட்டியார்:—தேவி, உலக மாதாவே, உன் திருவருளுக்குப் பிரார்த்திக்கின்றேன்.

''தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! யகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்கும் தொழும் பருளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக எழுதிப் பார்த் திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே!
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்கவே வருக வருகவே!''

ஜகன்மாதா, நின்னருள் பெற்றிலாதார் வாழ்வென்ன வாழ்வோ? உன்னருள் கிட்டினாலன்றோ எந்தைப் பிரானை அடைய முடியும். தாயே! (கீழே வீழ்ந்து வணங்குகிறார்.)

சுசீலா:—சர்வலோக நாயகியே, மதுரையம் பதிவாழ் மங்கள சொரூபியே, போற்றி! போற்றி!!

"பெருந்தே னிறைக்கும் நறைக் கூந்தல்
பிடியே வருக! முழுஞானப்
பெருக்கே வருக! பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக! மும்முதற்கும்
வித்தே வருக! வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக! பழமறையின்

குருந்தே வருக! அருள்பழுத்த
கொம்பே வருக! திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக! பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக! வருகவே!"

தேவீ! நீயலாற் பற்றுமற்றில்லை. நின் திருவடிக்கு ஆளாவ தெப்படியோ? (சுசீலை கீழே வீழ்ந்து வணங்குகின்றாள்.)

(பிறகு மூவரும் கோயிலை வலம்வந்து கீழே வீழ்ந்து வணங்கி வீடு திரும்புகின்றனர்.)

---

## நான்காங்களம்

இடம் :—தனபதி செட்டியார் வீடு

காலம் :—காலை

பாத்திரங்கள் :—தனபதி செட்டியார், பழனியப்பன், வேணுகோபால் செட்டியார்

தனபதி செட்டியார் :—பழனியப்பா, இங்கேவா; வீதியில் ஒருநாளுமில்லாமல் ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்நின்று

பேசிக்கொண்டிருக்கிறார்களே! அரசன் ஏவலாளர் சிலர் வண்டிகளில் ஏதோ சாமான்களை ஏற்றிச் செல்லுகின்றனர். நீ உன் கணக்கை வைத்துவிட்டுச் சென்று என்ன விஷயமென்று அறிந்துவா.-

பழனியப்பன் :—(வெளியிற் சென்று, செய்தி யறிந்து மீண்டு வந்து) செட்டியாரையா, கேட்டீங்களா செய்தியை! மாசி வீதி மாணிக்கஞ் செட்டியார் நேற்று மாரடைப்பால் திடீரென்று காலமாய் விட்டாராம். அவர்க்குச் சந்ததி யில்லையாம். தத்தும் எடுத்துக் கொள்ளவில்லையாம். ஆகவே அவரது ஆஸ்தியான சுமார் பன்னிரண்டு லக்ஷத்துச் சொச்சம் கையிருப்புத்தொகையையும் பிற சொத்துக்களையும், தட்டுமுட்டுச் சாமான் உள்பட அரண்மனைச் சேவகர், அரசனுக்குச் சேர வேண்டியவை யென்று அவன் ஆணைப்படி எடுத்துச் செல்கின்றனர். அதனை வேடிக்கை பார்க்கக் கூட்டம் கூடிய நகர மக்கள் பலரும் பற்பலவாறு பேசிக்கொண்டிருக்கின்றனர்.

தனபதி செட்டியார் :—அப்படியா சேதி; (அப்போதுதான் அங்குவந்த வேணுகோபால் செட்டியாரைப் பார்த்து) வேணுகோபால் செட்டியாரே, கேட்டீரா கதையை? பார்த்தீரா இவ்வுலக வாழ்வின் சாசுவதம் அற்ற தன்மையை? "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு," என்ற நமது வள்ளுவர் வாக்குப்படி நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார். ஆச்சரியம்! நேற்று முன் தினந்தான் நம் கடைக்கு வந்து சரக்குப் போட்டுக்கொண்டு போனார். இன்று இவ்வுலகையே விட்டுப் போய்விட்டார். மாணிக்கஞ் செட்டியார் மிக நல்லவர். குணத்திலும்

மாணிக்கமேதான். நல்ல பரோபகாரி. தரும சிந்தையுள்ளவர். சொக்கப் பெருமானுடனும் மீனாக்ஷியம்மையுடனும் பேரன்பாற் பிணைக்கப் பெற்றவர்.

வே. கோ. செட்டியார்:—ஆம், ஆம்; தனபதி செட்டியாரே, நீர் கூறுவதுண்மையே. ஆனால் அவர் ஒன்று செய்து முடிக்கத் தவறிவிட்டார். அவருடைய இந்தச் சொத்து முழுதும் அவரது எளிய சுற்றத்தார் யாருக்காவது தத்துமூலம் கொடுத்திருக்கலாம். அல்லது நன்குல மாணவர்கட்கு அறவுணச்சாலை ஏற்படுத்தி இருக்கலாம். அன்றேல், ஒரு தமிழ்க் கல்லூரிக்கு மூலதனமாகவாயினும் பயன்படுத்தி இருக்கலாம். நல்ல தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு ஒரு நிதி ஏற்படுத்தியிருப்பினும் நன்றாயிருந்திருக்கும். இதற்கொரு வழி செய்யுமுன் அவர் வாழ்வையே நீத்துவிட்டார்.

தனபதி செட்டியார்:—நீர் சொல்வது முற்றும் எனக்கும் உடன்பாடுதான். மாணிக்கஞ் செட்டியாரின் தூர பந்துக்களில் சிலர் வாதவூரில் மிக எளியராயிருப்பதாகக்கேள்வி. அவர்களுள் ஒருவர் மைந்தனை சம்பந்தம் என்பவனைத் தமக்குத் தத்துப்பிள்ளையாகக் கொள்ள எண்ணியிருந்தார். என்னிடமும் சில முறை அதைக் குறிப்பிட்டதுண்டு. பிறகு பார்த்துக் கொள்ளலாம், என்ன அவசரம் என்றிருந்தார். அதற்குள் இவ்வாறாகிவிட்டது. அவன் காலம் வழுவாத காலனன்றோ!

வே. கோ. செட்டியார்:—இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாம் காலதாமதமே கூடாது. "கெடுநீரார் காமக்கலன்"களுள் நெடுநீர்மையும் ஒன்றாகும். "நாளை நாளை என்பீராகில், நாளையென்பது நம்முடை நாளோ

நமனுடை நாளோ?" ஆகவே காலதாமதம் தகாது. நமது நாயனாரும் "அன்றறிவா மென்னா தறஞ்செய்க; மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை," என்றனர். தரும காரியங்களை யெல்லாம் உடனுக்குடன் எண்ணிய போதே முடித்துவிடவேண்டும்.

தனபதி செட்டியார் :—ஓய், வேணுகோபால் செட்டியாரே, நீர் நமது குலத்தவர். அனுபவம் மிக்கவர்; என்னிதங் கருதும் இனிய பண்பினர். உம்மிடம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கருதி ஆலோசனை செய்ய விரும்புகின்றேன்.

வே. கோ, செட்டியார் :—நீர் எதைப்பற்றி வேண்டுமானாலும் தாராளமாக என்னிடம் கலந்து பேசலாம். யான் எதையும் வெளியிடமாட்டேன்.

தனபதி செட்டியார் ;—நண்பரே, எனக்கு வயது ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டது. என் மனைவிக்கும் ஐம்பது எட்டிப்பார்க்கின்றது. இதுவரை எங்கட்கு மகப்பேறில்லை. எங்கட்கு முதுமை எய்திவிட்டமையால், இனி மகப்பேறு எதிர் பார்ப்பதற்கும் நியாயமில்லை. ஆலவாயான் திருவருளால் பெருஞ் செல்வமிருக்கின்றது. கையிருப்புமட்டும் ஐம்பதுக்கு (லக்ஷம்) வரும். வர வேண்டிய பாக்கியும் ஏராளம். கடை முதலுக்கோ கணக்கில்லை. எனக்கும் நாளுக்கு நாள் அலைச்சல் மிகுதியால் உடல் அலுத்து விட்டது. எனக்குப் பங்காளிகளான சிலரும் துரியோதனதியர் கூட்டத்தவராயிருக்கின்றனர். துற்புத்திக்கும் துஷ்டத்தனத்துக்கும் எல்லையே இல்லை. யான் அறத்தாற்றில் ஈட்டிய அருஞ்செல்வத்தைக் கடுகளவு கூட அன்னார்க்குக் கொடுக்க இஷ்டமில்லை.

சுசீலை:—என்னங்க, நீங்கள் பாட்டுக்குப் பேசிக் கொண்டே யிருந்தால் மத்தியான்ன உணவுக்கு நேர மாக வில்லையா? (தனபதி எழுந்து சற்றுப் பின் பக்கம் செல்கின்றார். அவர் சென்றதும், வே. கோ. செட்டி யாரைப் பார்த்து,) நமஸ்காரம் செட்டியாரே; தங்க ளைக்கண்டு நீண்டகாலம் ஆய்விட்டது. ஏது அபூர்வ மாய் இவ்விடம் வந்தது? ஏதேனும் விசேஷம் உண்டோ? எங்கள் வீட்டுச் செட்டியாரும் தங்களி டம் ஏதோ ஆஸ்தியென்றும், பங்காளி யென்றும் பேசிக்கொண்டிருந்தாரே, அது என்ன?

வே. கோ. செட்டியார்:— அம்மா, உங்களை யெல்லாம் பார்த்துவெகுகாலமாயிற்றே,பார்த்துவரலாமே என்று எண்ணித்தான் இங்கு வந்தேன். உங்கள் செட்டியா ரும் ஏதோ பேசிக்கொண்டே வந்தார். பேச்சுவாக் கில் தமக்குப் பிள்ளை யில்லை என்றும், தமது செல்வ நிலை இன்னது என்றும், தம் பங்காளிகள் கொடியவர் கள் என்றும் அவர்க்குத் தம் பொருள் சேருதல் தகா தென்றும் சொல்லிக்கொண்டிருந்தார்.

சுசீலை:—அதைப்பற்றிக் கவலை இப்போதெதற்கு? பிறகு பார்த்துக் கொள்ளலாமே. (வெளியில் சென்ற தனபதி கேட்டுக்கொண்டே வருகிறார்.)

தனபதி செட்டியார்:—சுசீலை, என்ன பார்த்துக் கொள் ளலாம்? எதைப் பற்றிக் கூறுகின்றாய்?

சுசீலை:—ஒன்றுமில்லை, இவரிடம் தாங்கள் பேசிக் கொண்டிருந்ததைப்பற்றித்தான். நமது செல்வத்துக்கு நமக்குப் பின் யார் பொறுப்பு என்ற உங்கள் பிரச் சினைக்குதான் என்ன அவசரமென்றேன்.

தனபதி செட்டியார்:—நீயும் கேட்டுக்கொண்டே வந்ததும் நல்லதாயிற்று. இங்கே இரு. நாம் மூவரும் அது பற்றி கலந்து ஒரு முடிவுக்கு வருவோம்.

சுசீலை:—உணவு ஆறிவிட்டால் சுவை குன்றிப் போகும். "சூட்டிற்கோர் சுவை," என்பது பழமொழி யல்லவா? (வே. கே. செட்டியாரைப் பார்த்து) எழுந்திருங்கள்; இருவரும் சாப்பிட்ட பிறகு, உடனே யான் சாப்பிட்டு விட்டு நொடியில் வந்துவிடுகிறேன். பிறகு மூவரும் இருந்து ஆரத்தீர யோசிக்கலாம்.

தனபதி செட்டியார்:—சுசீலை, நீயும் எங்களுடன் அமர்ந்து உணவருந்திவிடு. சமையற்காரன் பரிமாறட்டும்.

சுசீலை:—நமது வீட்டிற்கு விருந்தினர் வந்திருக்கின்றார். அவரைச் சிவபிரானாகவே கருதி யுபசரிக்க வேண்டும். அவரையும் உங்களோடிருத்தி அருத்தியோடு அடிசில் படைத்த பின்னரே யான் புசித்தல் முறை. "வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்," என்ற உத்தர வேதத்தை நாம் மறக்கலாமா? வருகின்ற விருந்தினரை ஓம்புதல் இல்லாளாகிய என் கடனேயாகும். இதனாலன்றோ சீதா பிராட்டியாரும் இராமனை நினைந்து அசோகவனத்தில் வருந்தும் போது, "அருந்து மெல்லடகாரிடம் அருந்தும்? விருந்து கண்ட போதென்னுறுமோ?" என்று கரைந்து கூறுகிறார். ஆகவே நானே பரிமாறி உபசரிக்க வேண்டும். நீங்களுண்டதும் நான் ஒரு நொடியில் சாப்பிட்டு வந்து விடுகின்றேன்.

தனபதி செட்டியார்:—சரி, உன்னிஷ்டப்படியே, உணவு படைக்கலாம்.

[சுசீலை அவ்வாறே அன்னம் படைக்கின்றாள். இருவர் செட்டியாரும் வயிறார அறுசுவை யுண்டியை அருந்துகின்றனர்.]

---

# இரண்டாம் அங்கம்

## முதற்களம்

இடம் :—தனபதி செட்டியார் வீட்டின் ஒருபுறம்

காலம் :—பிற்பகல்

பாத்திரங்கள் :—சுசீலை, தனபதி செட்டியார், வேணுகோபால் செட்டியார்

சுசீலை :—அடீ ராமாயி, கூடத்தில் பாயொன்று போடு. ஒரு வெள்ளித் தட்டில் வெற்றிலை, பாக்கு எல்லாம் கொண்டுவந்து வை. இன்னொரு வெள்ளித் தாம்பாளத்தில் சில கனிகளையும் எடுத்துக் கொண்டு வா. (ராமாயி யாவும் சித்தம் செய்கிறாள்.)

தனபதி செட்டியார் :—வேணுகோபால் செட்டியாரே, இப்படிப் பாயில் இரும். சுசீலை, நீயும் ஒருபுறம் இருக்கலாம். முதலில் பழத்தைத் தின்றுகொண்டே பேசுவோம். தாம்பூலம் பிறகு ஆகட்டும்.

சுசீலை :—நீங்களிருவரும் பாயிலிருங்கள்; நான் (வாயிற்படியினருகில் ஓர் இடத்தைச் சுட்டி) இப்படி நின்று கொண்டே பேசுகிறேன். உங்களோடு சமத்துவமாய் இருப்பது மரியாதை யில்லை.

வே. கோ. செட்டியார் :—இல்லை அம்மா, நீங்கள் நன்றாய்ப் படித்திருக்கின்றீர்கள்; உள்ளன்பு, நாவடக்கம், பணிவு

முதலிய பல நற்பண்புகளும் நிறைந்துள்ள நீங்களும் ஒரு புறம் அமரலாமே. அப்போதுதான் நாம் சாவதானமாக விஷயங்களைத் தக்கபடி சூழ்ந்து ஒரு முடிவுக்கு வரமுடியும். "கணவனுக்கு யோசனை கூறுகையில் மந்திரி நிகர்ப்பாள் மனைவி," என்பது அறநூல்களிற் சொல்லப்பட்டிருக்க வில்லையா? ஆகவே நீங்களும் எங்களுடனிருந்தே யோசித்தல் நல்லது. இப்படி ஒரு புறமாய் இருங்கள்.

சுசீலை:—அப்படியே உங்கள் விருப்பம்போல் ஆகட்டும். (ஒருபுறம் அமர்கிறாள்.)

தனபதி செட்டியார்:—சுசீலை, நம்மிருவருக்கும் வயதாகிவிட்டது. நமக்குக் குழந்தைகளோ இல்லை. மாசிவீதி மாணிக்கஞ் செட்டியார் திடீரென்று மாரடைப்பால் நேற்றுக் காலமாய் விட்டாரல்லவா? அவருக்கு வாரிசுக் குழந்தைகள் இல்லை. யாரையும் தத்து எடுத்துக் கொள்ளவுமில்லை. ஆகவே அவரது செல்வ முழுவதும் அரசாங்கத்துக்குச் சேர்ந்துவிட்டது. மக்கள் வாழ்வோ நிலையற்றது. நீரிற் குமிழிபோல் மறைந்தொழியும் பெற்றியது. அதனால்தான் நானும் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். நமக்குப் பிற்காலத்தில் நமது செல்வம் அனைத்தும் எனது தங்கை சாவித்திரியின் மைந்தன் ஞானசம்பந்தனுக்குச் சேரும்படி, இப்பொழுதே அவனை நமது மைந்தனாகத் தத்தெடுத்து மகன்மை பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கருதுகிறேன். உனது கருத்தென்ன?

சுசீலை:—மருமகனை மகனாகவும், நமது செல்வத்திற்குரியவனாகவும் செய்யும் வழக்கமு முண்டோ? நமது தாயத்தார் வருக்கத்திலுள்ள செல்வபதிச் செட்டியாருக்

குள்ள இருமைந்தர்களுள் ஒருவனை நாம் மகன்மை கொண்டால் என்ன? நமது ஞாதிமார் இருக்கும் போது அவர்கட்குதவாமல் மானாமதுரையில் உள்ள ஒரு பையனை எதற்காக இங்கே கொணரவேண்டும்? தவிர, ஞானசம்பந்தன் தந்தையில்லாதவன். அவன் தாய் சாவித்திரியோடு நம்வீட்டுக்கு வரவேண்டும். அந்த அம்மாள் எப்படி நடந்துகொள்ளுவாளோ? தெரியவில்லையே! (வேணுகோபால் செட்டியாரைப் பார்த்து) நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

வே. கோ செட்டியார்:—ஆயி, நீங்கள் களங்கமற்றவர்கள். உங்கள் உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவின்றித் தெளிவாக எடுத்துரைத்தீர்கள். எனக்கு நிரம்ப மகிழ்ச்சி. ஆயினும் இவ்விஷயத்தில் நமது தனபதி செட்டியாரின் கருத்தையொட்டியே நீங்கள் நடப்பது உசிதம் எனத் தோன்றுகிறது.

தனபதி செட்டியார்:—சுசீலை, உன் கருத்தறிந்தேன். செல்வபதிச்செட்டி நம் ஞாதிதான். இல்லையென மறுக்கவில்லை. ஆனால், அவனை எனக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கோ அவன் மக்களுக்கோ நமது செல்வத்தையளிப்பதைவிட, அவற்றையெல்லாம் மூட்டைகளாகக் கட்டி, வைகையாற்று வெள்ளத்தில் வீழ்த்துதல் எவ்வளவோ மேலாகும். "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு," என்ற வள்ளுவர் வாக்குப்படி நமது செல்வம் நல்ல அற நெறியில் ஈட்டப்பட்டதாகலின், ஒரு சற்புத்திரனுக்கே அது போய்ச் சேரவேண்டும். எனது தங்கை சாவித்திரிக்கு வேறுகதி யாருமில்லை. ஞானசம்பந்தனை மகனாகக்கொள்வதால் சாவித்திரிக்கும் உதவியதுபோல்

ஆகும். சேர நாட்டில் மருமக்கள் தாயமுறைதானே இன்றும் இருந்து வருகிறது. அதனருகேயுள்ள இப் பாண்டி நாட்டில் மருகனை மகனாகப் பெறின் வருங் குற்றமேது? மருமகன் என்பது 'மருவுமகன்' என்ற தின் மரூஉவாகும். நெருங்கி யிருக்கின்ற மகன் என் பதே அதன் பொருள். ஆகவே நம் மருமகன் சம்பந் தனை மகன்மைகொள்வதில் எவ்விதத் தடையும் வேண் டாம்.

சுசீலை:—தங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். தாங்கள் எண்ணித் துணியும் நற்கருமத்துக்கு நான் குறுக்கே நிற்பதழகல்ல என்பதையுணர்கிறேன். எனக்கும் மிக மகிழ்ச்சியே. ஆகவே அவனையும் அவன் தாய் சாவித் திரியையும் நமது கணக்கப்பிள்ளை பழனியப்பனை அனுப்பி அழைப்பித்து, அவர்கள் உடன்பாடு பெற்று, விதிப்படி சம்பந்தனை மகனாகச் செய்து கொள்ளு வோம்.

தனபதி செட்டியார் :—சுசீலா, நீ சம்மதித்தது எனக்குப் பரமதிருப்தி. "காதல் இருவர் கருத் தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்," அல்லவா? நாமிருவரும் ஒன்றுபட்ட மனத்துடன் செய்யுங்காரியமே இன்பமும் நலமும் ஒருங்கு பயக்கும்.

[ராமாயியை அனுப்பிக் கணக்கப்பிள்ளையை வரவழைக் கிறார்.]

பழனியப்பன் :—முதலாளி ஐயா, என்னைக் கூப்பிட்டாங்க ளாமே; ராமாயி வந்து சொன்னாள்.

தனபதி செட்டியார் :—பழனியப்பா, நீ நாளைக் காலையே புறப்பட்டு, மானாமதுரையில் உள்ள என் தங்கை சாவித்

திரி ஆச்சி வீட்டுக்குப்போய் மறுநாள் செவ்வாய் ஆதலால் அன்று அங்கிருந்து, பின்னர் மறுநாள் புதன் கிழமை இராகுகாலத்துக்குமுன் புறப்பட்டு அவ்வாச்சியையும், புதல்வன் சம்பந்தனையும் யானழைத்து வரச் சொன்னதாகக்கூறி இங்கு அழைத்து வந்து சேர வேண்டும். தெரிகிறதா?

பழனியப்பன் :—முதலாளி ஐயா, அப்படியே ஆகட்டும். நாளை வைகறை யாமத்தில் புறப்பட்டுவிடுகிறேன். நான் வரும் வரையில் இங்குக் கணக்குகளை யார் பார்த்துக் கொள்ளுவார்?

தனபதி செட்டியார் :—அதைப்பற்றிய கவலை வேண்டாம். நானே அவற்றையெல்லாம் கவனித்துக் கொள்கிறேன். நீ சென்று அவர்களை ஜாக்கிரதையாக அழைத்துக் கொண்டு வருவாயாக.

[பழனியப்பன் போகிறான். சாவித்திரியைக் கண்டு அவள் வற்புறுத்தலின் பேரில் மூவரும் மானாமதுரையினின்றும் செவ்வாய்க்கிழமையே புறப்பட்டுச் சரியான ராகு காலத்தில் மதுரை தனபதி செட்டியார் வீடு வந்து சேருகின்றனர்.]

---

## இரண்டாங் களம்

இடம் :—தனபதியின் வீடு

காலம் :—மாலை

பாத்திரம் :—தனபதி செட்டியார், சாவித்திரி, ஞானசம்பந்தன்

தனபதி செட்டியார்:—சாவித்திரி, வா. ஏன் இன்றைக்குப் புறப்பட்டு வந்தாய்? பழனியப்பன் உன்னிடம் ஒன்றுஞ்

சொல்லவில்லையா? உன்னையும் ஞானசம்பந்தனையும் புதன்கிழமையல்லவா அழைத்து வரச் சொன்னேன். இன்றைக்கு நீயும், பைடன் ஞானசம்பந்தனும், செவ்வாய்க்கிழமையில் புறப்பட்டு ராகு காலத்தில் வந்து சேர்ந்தீர்களே!

சாவித்திரி .—அண்ணா, கணக்கப்பிள்ளை பழனியப்பன் நீங்கள் சொல்லியனுப்பியபடியேதான் வந்து சொன்னான். அவன்பேரில் தவறில்லை. அழைக்க வந்த காரணத்தைக் கேட்டேன். அவன் தனக்கு யாதொன்றுந் தெரியாது என்றும் முதலாளி அழைத்து வரச் சொன்னார் என்றும் சொன்னான். உங்களுக்காவது அல்லது மதனியார்க்காவது உடம்பு செம்மை இல்லை போலும் என்று எண்ணி பழனியப்பன் வந்த மறுதினமே புறப்பட்டு வந்தோம். அடிக்கடி இங்கு வந்து போவதால் நாள் பார்க்காமலே வந்துவிட்டோம். ஒருதடவையுமில்லாமல் இந்தத் தடவை மாத்திரம் நீங்கள் நாளைப் பற்றிக் கவனிக்கவேண்டியதன் அவசியம் என்ன?

தனபதி செட்டியார் :—சாவித்திரி, எனக்கும் உன் மதனி சுசீலைக்கும் வயதாகிவிட்டது. பிள்ளையில்லாத விஷயம் உனக்குத் தெரிந்ததே. ஆகவே உன் மைந்தன் ஞானசம்பந்தனை நாங்கள் தத்து எடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். நீயும் இங்கேயே யிருந்துவிடு. உனக்குந்தான் அங்கு மானாமதுரையில் உற்றார் யாருமில்லை. சொத்துங் கிடையாது. ஆகவே ஞானசம்பந்தனுடன் இங்கேயே எங்களுடன் இருந்துவிட்டால், நமது ஆலவாய்ப்பெருமானை நாடோறும் வழிபட்டுக் கொண்டிருக்கலாம்.

சாவித்திரி :—அண்ணா, தாங்கள் கூறியதை என் இரு செவிகளும் குளிரக் கேட்டேன். எனக்கும் வேறு கதி இல்லை. மைந்தனோ சிறுவன். என்ன செய்வது? காலந் தள்ளுவது கஷ்டமாகத்தா னிருக்கிறது. எல்லாவற் றிற்கும் நம் ஆலவாய்ப் பெருமானிருக்கின்றான். அவன் நம்மைக் காப்பாற்றாது கை நழுவ விடமாட் டான் என்றெண்ணிக்கொண்டிருந்தேன். அந்தச் சம யத்தில், பழனியப்பன் வந்து, புறப்பட்டு வரவேண்டும் என்று, தெரிவித்தான். உடனே நானும் சம்பந்தனும் புறப்பட்டு அவனுடன் வந்துவிட்டோம். தங்கள் இஷ்டப்படி சம்பந்தனைத் தத்தாக எடுத்துக்கொள்ளுவ தில் எனக்குப் பரம திருப்தியே.

தனபதி செட்டியார் :—அம்மா, நீ சம்மதித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை யுண்டு பண்ணுகின்றது.

[மகன்மைகொள் விழாவிற்கு ஏற்பாடாய் விட்டது. அதுவும் ஒரு சுபதினத்தில் நடக்கிறது.]

சுசீலை :—ஏ ராமாயி, இன்றைய தினம் நமது வீட்டில் நானும், செட்டியாரும் மானாமதுரையில் உள்ள என் நாத்தி (நாத்தூண் நங்கை) சாவித்திரி ஆச்சியின் மகன் ஞானசம்பந்தனை தத்தாகப் பெறப் போகிறோம். நாங் கள் இதைப் பெரியதோர் விழாவாகக் கொண்டாடு கின்றோம். நீ விதவையாதலால் சகுன விரோதமாக வீட்டெதிரில் நின்றுகொண்டிராமல் உள்ளேயிருந்து, நீயும் உன் மகள் கருப்பாயியும் நம் வீட்டுப் பொருள்கள் திருட்டுப் போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வரு கின்ற எல்லா விருந்தினர்களுக்கும் வேண்டியவற் றைக் கவனியுங்கள்.

தனபதி செட்டியார்:—சுசீலே, என்ன இவளோடு பேசி கொண்டிருக்கின்றாய்? அதோ பார்; நம் பாண்டிய மன்னரது மந்திரியார் குஞ்சிதபாதச் செட்டியாரின் மனைவி மங்கையர்க்கரசி ஆச்சியார் வந்திறங்குகிறார். அவர்களையும் மற்ற ஸ்திரீகளையும் அங்கு நின்று கொண்டு வரவேற்பாயாக. யான் இப்பக்கத்தில் நின்று கொண்டு ஆடவர்களை வரவேற்கின்றேன்.

[இருவரும் வரவேற்றவண்ணமா யிருக்கின்றனர்; கணக்கற்ற விருந்தினர் வருகின்றனர். பாண்டியன் அவைக் களத்துப் புலவர்களும், அந்தணர் களும் வருகின்றார்கள்.]

புரோகிதர்:—தனபதி செட்டியாரே, முகூர்த்த வேளை தவறாமல் ஆச்சியைக் கூட்டிக்கொண்டு, இங்கு வந்து இந்த ஓமகுண்டத்தின் முன் கீழ்த்திசை நோக்கி நில் லுங்கள். ஞானசம்பந்தனையும், சாவித்திரி ஆச்சியை யும் வரச் சொல்லுங்கள்.

[அவ்வாறே நால்வரும் வருகின்றனர். தனபதி செட்டியாரும், சுசீலையாச்சியும் கீழ்த்திசை நோக்கி நிற்கின்றனர். சாவித்திரியும், சம்பந்த னும் அவர்களிருவரின் எதிரில் மேற்கு நோக்கி நிற்கின்றனர்.]

சாவித்திரி ஆச்சியே, நீங்கள் "நான் என் மைந்தன் சம்பந்தனை இவ் வங்கியங் கடவுள் சான்றாக, என் தமை யனார் தனபதி செட்டியாருக்கு இன்று தத்தாகக் கொடுத்து விட்டேன்," என்று சொல்லுங்கள்.

[சாவித்திரி அப்படியே கூறுகின்றாள்]

தனபதி செட்டியாரே, நீங்களும், சுசீலை யாச்சியும், "ஞானசம்பந்தனை இவ் வக்கினி பகவான் சாட்சியாக எங்கள் மைந்தனாக ஏற்றுக் கொள்ளுகிறோம்," என்று கூறுங்கள்.

[அவ்வாறே அவ்விருவரும்கூறுகின்றனர். சாவித்திரி, சம்பந்தன் கரங்களைப்பற்றி தனபதி செட்டியார், சுசீலை ஆகிய இருவர் கரங்களில் கொடுக்க அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன.]

மந்திரி குஞ்சிதபாதச் செட்டியார் :—தனபதி செட்டியாரே, நீர் உரிய காலத்தில் உமது மருகனை மகனாக வரித்தீர். உமது மகன்மை விழா நன்கு நடைபெற்றது கண்டு மகிழ்கின்றேன். நமது சுந்தரபாதசேகர பாண்டியரிடம் இவ் விழாவைப்பற்றிக் கூறுகின்றேன். உமது ராஜ விசுவாசத்தையும் தெரிவிக்கின்றேன். உமது தத்துப் புத்திரனை இங்கே வரச் சொல்லும்.

[ஞானசம்பந்தன் வந்து மந்திரி குஞ்சிதபாதச் செட்டியார் பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றான்.]

மந்திரியார் :—எங்கள் குலக் கொழுந்தே, ஞானசம்பந்தனே, வாழி பல்லூழி! நீயும் உன் சுவீகாரத் தந்தை தனபதி செட்டியாரைப் போல நற்கீர்த்தியுடன் வாழ்வாயாக. இந்த இரத்தினமாலையை உன் கழுத்தில் சூட்டுகின்றேன்.

ஞானசம்பந்தன் :—ஐயா, தங்கள் ஆசியால் நற்பெயருடன் விளங்குவேனாக. தங்கள் பரிசுக்கும் அன்புக்கும் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அவைப் புலவர்கள் :—[வணங்கிய சம்பந்தனை யெடுத்து மார்புறத் தழுவி] சம்பந்தா, வாழி பல்லூழி! உனக்கும் மதுரைக்கும் சம்பந்தமுண்டு. ஆகவே நீ இவண் போந்தனை. நமது ஆலவாய்ப் பெருமானும் அங்கயற் கண்ணம்மையும் உனக்கு அருள் புரிவாராக. நன்ருகக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவாயாக.

தனபதி செட்டியார் :—பெரியோர்களே, நீங்களனைவரும் என்னுடைய வேண்டுகோட்கிணங்கி, இன்று எளியேனது வீட்டில் நடந்த மகன்மை கொள் விழாவிற்கெழுந்தருளி வந்து, என்னையும் எனது மனைவியையும் கௌரவித்ததற்கு, உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். உங்களனைவரிடமும் ஒரு சிறு விண்ணப்பஞ் செய்து கொள்ளுகின்றேன். தயை கூர்ந்து அதை அங்கீகரிக்கும்படி வேண்டுகின்றேன். எங்கள் வீட்டுப் புதுமை (விசேஷம்) முடிந்தஉடன் நீங்களெல்லாரும் எழுந்துவிட்டீர்கள். இன்னும் நாங்கள் உங்களுக்குச் செய்யும் விருந்தொன்றுண்டு. அவ்விருந்தில் நீங்களனைவரும் உண்டு, யான் வழங்கப் போகும் பரிசில்களையும் பெற்றுக்கொண்டு, எங்களனைவரையும் ஆசீர்வதித்துச் செல்லுமாறு பிரார்த்திக்கின்றேன்.

விருந்தினர் :—தனபதி செட்டியாரே, உங்கள் விருப்பப்படி செய்கின்ருேம்.

[எல்லாரும் தனபதி வீட்டில் உண்டு, அவர் கொடுத்த பரிசில்களைப் பெற்று, மகிழ்ந்து அவரவர் வீடு திரும்புகின்றனர்.]

---

## மூன்றுங்களம்

இடம்:—தனபதி செட்டியார் வீட்டின் ஒருபுறம்

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—சாவித்திரி, தனபதி செட்டியார், சுசீலை

சாவித்திரி :—(தனபதியைப் பார்த்து) அண்ணு, நானும் என் மைந்தன் ஞானசம்பந்தனும் இங்கு வந்து மூன்று வருஷங்களாகின்றன. வந்து கொஞ்ச காலம் வரையில் மதனியார் மகிழ்ச்சியாய் இருந்தார். எங்களை அன்பாகவும் நடத்தினுர். நாளடைவில் என்னைக் கண்டால் வெறுத்துப் பேச ஆரம்பித்துவிட்டார். ஆனுல் சம்பந்தனை மாத்திரம் அன்பாகவே நடத்துகிறுர். வயிற்றுப் பிழைப்புக்கு வழியற்று இங்கே என் பிள்ளையை அழைத்துக்கொண்டு ஓடிவந்தேனும். நான் இருப்பதால் வீட்டில் செல்வம் குறைகிறதாம். நான் இலக்குமியின் அக்காளாம். இவ்வாறு கண்டபடி அவர்க்கு வாயில் வந்தபடி பேசுகிறுர். என்ன செய்வதென்று தோன்றவில்லை.

தனபதி செட்டியார் :—சாவித்திரி, சற்றுப்பொறு. சுசீலையைக் கூப்பிட்டு விசாரிக்கின்றேன். [சம்பந்தனைப் பார்த்து] உன் தாயைக் கூப்பிட்டு வா.

சம்பந்தன் :—அம்மா, உம்மை அப்பா கூப்பிடுகிறுர்.

[சுசீலை வருகிறுள்.]

சுசீலை : - [தனபதி செட்டியாரைப் பார்த்து] என்னைக் கூப்பிட்டீர்களாமே? எதற்கு?

தனபதி செட்டியார் :— சுசீலே, உனக்கும் சாவித்திரிக்கும் நடந்த சண்டை யென்ன? ஏன் உன் நாத்தியைக் கொடுமைபாய் நடத்துகிறுய்? எதவாயினும் என்னிடம் சொல்லக்கூடாதா? நீ கூர்ந்த அறிவும் நல்ல கல்வியுமுடையவள். அனுபவம் நிறைந்தவளுங் கூட. உன் சம்மதத்தின் பேரில்தானே சாவித்திரியையும், சம்பந்தனையும் இங்கு வரவழைத்தேன். இங்கு வந்த பிறகு சாவித்திரியை மனம் வருந்தச் செய்வது நல்லதா? "தீயினுற் சுட்டபுண் உள்ளாறும்; ஆருதே நாவினுற் சுட்டவடு," என்ற வள்ளுவர் குறளை யுணர்ந்த நீ, வாயில் வந்தவாறு சாவித்திரியை இழித்துப் பேசினுயாமே. அவ்வாறு பேசுதல் அழகோ?

சுசீலே :—உங்கள் தங்கையின் வாக்கு மூலத்தைப் பெற்றுத் தீர்ப்பளிக்க முயலுகிறீர்களே; என்னைக் கேட்டீர்களா? நாத்திக் கொடுமையையும், மாமிக்கொடுமையையும் நீங்கள் அறியீரா? நாட்டில் நாத்தியும் மாமியும், காட்டில் புலியுங் கரடியும் ஒன்று என்பது உங்கட்குத் தெரியாதா? மாமதுரையிலிருந்து இங்குவந்த போது சாவித்திரி பூனைபோல இருந்தாள். இப்பொழுது புலியாய் விளங்குகிறுள். நமது குடும்பச் சொத்தெல்லாம் நமது கண் முன்னேயே அவளுக்கும், அவள் மைந்தன் சம்பந்தனுக்குந்தான் சொந்தமாம். என்னைச் சேர்ந்தவர்கள் யாரேனும் வந்தால் நான் எப்போதும் போல மரியாதை செய்தனுப்புகின்றேன். மதுரை, புடைவைக்குப் பேர் பெற்றதல்லவா? வருகிறவர்கள் அப்புடைவைக்கு ஆசைப்படுகிறுர்கள். எல்லாருக்கும் புடைவை வாங்கிக் கொடுக்கின்றேன். வெகு தூரத்திலிருந்து வருகிறவர்கள் வழிச் செலவுக்குப் பணம் வாங்கிச் செல்லுகின்றுர்கள். இதற்கெல்லாம்

நான் சாவித்திரியின் உத்தரவு பெற்றுச் செய்யவேண்டு மாம். நான் எதற்காக இவளைக் கேட்டுச் செய்ய வேண்டும்?

தனபதி செட்டியார்:—சரி, போதும். நீ சொல்லுவதும் நியாயமாகத்தான் இருக்கின்றது. [சாவித்திரியைப் பார்த்து] சுசீலை சொல்லுவது நிஜந்தானா? உன்னைக் கேட்டுதான் அவள் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறாயாமே?

சாவித்திரி:—அண்ணா, மதனியைச் சேர்ந்தவர்களெல் லாம் பரம ஏழைகள். ஒருநாளைக்கு ஒருவேளைகூட முழுச் சாப்பாட்டிற்கு வழியற்றவர்கள். அவர் கள், இந்தவூரில் சந்தை நடக்கும் வெள்ளிக்கிழமை தோறும், வருகிறார்கள். இரண்டு மூன்று நாட் கள் இருந்து சாப்பிட்டுப்போவது மாத்திரமல்லா மல், புடைவை, வேஷ்டி, அரிசி, பருப்பு, உப்பு, மிள காய் முதலிய சகல வஸ்துக்களும் வாங்கிக்கொடுக்கச் சொல்லி, மூட்டைகட்டிப் போகின்றார்கள். அதற்காக, நான் ஒரு நாள் மதனியாரிடம், இப்படியே இடைவிடா மல் செலவு செய்துகொண்டே போனால் இந்தக் குடும் பம் சீக்கிரம் வறுமை நிலையடையுமே; எதிர் காலத்தில் என் மைந்தன்தானே தரித்திரனாகக் கஷ்டப்பட நேரிடும்; ஆகவே இனிச் செலவு செய்வது என்னைக் கேட்டுச் செய்தால் நலமென்று கூறினேன். இதி லென்ன தவறு?

தனபதி செட்டியார்:—சாவித்திரி, நீ கூறியது சரியல்ல. சுசீலை மீது யாதொரு தப்பும் இல்லை. அவள் செலவு செய்வதற் குரிமை யில்லையென்று நீ எப்படிச் சொல்ல

லாம்? இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளாதே; தெரிகிறதா?

சாவித்திரி:—அண்ணு, நீங்கள் ஒரு தலைப் பக்ஷமாகப் பேசுகின்றீர்கள். அது முறையல்ல. தீர்க்காலோசனை செய்யாமல் என்னிடம் குறை காண்கிறீர்கள். இவ்வாறு பேசாதீர்கள். மனைவிக்குச் சார்பாகப் பேசுவது உலக இயல்புதானே.

தனபதி செட்டியார்:—சரி, சரி, நிறுத்து. நீ அதிகமாகப் பேசவேண்டாம். உனக்குதவி செய்ததற்குப் பிரதியுபகாரம் இதுதானு?

சாவித்திரி:—சரிதான் நிறுத்தும்.பிள்ளைப்பேறற்ற பாவிநீ; உனக்கேன் பெருமிதம்? என்னருமை மகனுலன்றோ நீ இருமையும் அடையவேண்டும். ஆகவே நான் உனக்கு உதவி செய்தேனு? நீ யெனக்குதவி செய்தாயா? எண்ணிப் பாரும். நான் செய்த பேருதவியை மறந்து இவ்வாறு பேசாதீர்கள்.

தனபதி செட்டியார்:—சாவித்திரி, நீ இப்படித் தைரியமாகவும் நாக்குத் தடிப்பாகவும் பேசுவாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இருக்கட்டும். ஆண்டவன் எனக்கு எல்லாச் செல்வமும் அளித்திருந்தும், புத்திரப் பேற்றை அளிக்காமையாலன்றோ, என்பின் தோன்றிய பேதையாகிய உன்னிடம், இச் சிறு சொல் கேட்க நேர்ந்துவிட்டது. தெய்வமே! இதுவும் உன் சித்தம் போலும்! எத்தனையோ தருமங்கள் புரிந்தேன். புண்ணியவான் என்று என்னை ஊரரெல்லாங் கொண்டாட, நீ என்னைப் பிள்ளையில்லாத பாவியென்று சொல்லிவிட்டாய். "வேண்டிய வேண்டியாங்கெய்தலாற் செய்தவம்

ஈண்டு முயலப் படும்,'' என்றபடி, மறு பிறவிக்காவது எனக்கொரு மைந்தன் உதிக்க, யான் காட்டிற்குத் தவஞ் செய்யப் போகிறேன். நீ உன் பிள்ளையோடு சௌக்கியமாய் இங்கிரு. [சுசீலையைப் பார்த்து] சுசீலே, மறு பிறவியிலாவது நல்ல மைந்தன் நமக்கு வாய்க்கவேண்டும். பிள்ளை இல்லாப் பாவி என்ற பட்டம் நீங்கவேண்டும் என்ற விருப்பால், யான் காட்டிற்குத் தவஞ் செய்யப் போகின்றேன்.

சுசீலே:—அதென்ன, காட்டிற்குத் தவஞ்செய்யப் போகின்றேன் என்று தன்மை யொருமையில் பேசுகிறீர்கள். நானும் உங்களுடன் வருகிறேன். நீர் இருக்குமிடத்தில் தானே மீன் நிற்கும். நீர் வறண்டால் மீனிறந்துவிடும். தாங்கள் எங்குச் சென்றாலும் தங்களுடன் இருப்பதுவே எனது பாக்கியம்.

தனபதி செட்டியார்:—காட்டில் கொடிய விலங்குகள் சஞ்சரிக்குமே; முட்கள் நிறைந்திருக்குமே; கற்கள் காலிற் குத்துமே; வெயிலின் கொடுமை தாங்க முடியாதே; அத்துன்பங்களை உன்னால் சகித்துக்கொள்ள இயலாது. மெல்லியல் வாய்ந்த நீ வரவேண்டாம். இங்கேயே இருப்பதுதான் நலம்.

சுசீலே:—நாட்டில் உள்ள நர விலங்குகளைக் காட்டினும் காட்டிலுள்ள நாற்கால் விலங்குகள் கொடியவையல்ல. இல்லின் கண்ணுள்ள முட்களை விட அடவியில் அதிகமிரா. உங்களைப் பிரிவதால் இங்கு ஏற்படுந் துயரை விட அங்கு அதிகத் துயர் ஏற்படாதென்பது நிச்சயம்.

தனபதி செட்டியார்:—சுசீலே, நீ வரவிரும்பினால் வா, போவோம். போய் இருவரும் தவம் புரிந்து மீளு

வோம். [சம்பந்தனை யழைத்து] மகனே, இந்தச் சொத்தெல்லாம் உனக்கே எழுதி வைத்திருக்கின்றேன். நீ மிகவும் ஜாக்கிரதையாயிரு. நாங்கள் தவம்புரிந்து விரைவில் மதுரையம்பதி வந்து சேருகின்றோம்.

[தனபதியும் சுசீலையும் கானகம் நோக்கி நடக்கின்றனர்.]

---

நான்காங்களம்

இடம் :—தனபதி செட்டியார் வீடு

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—ஞானசம்பந்தன், சாவித்திரி

ஞானசம்பந்தன் :—அம்மா, எனது அப்பா தவத்தை மேற்கொண்டு, வனஞ் சென்றதிலிருந்து, செல்வபதிச் செட்டியாரும், மற்ற தாயாதிகளும் நமது ஆட்களை யடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். என் கண் முன்னேயே ஒவ்வொருவராக அவர்களைத் தங்கள் பக்கம் ஈர்த்துக் கொள்ளுகின்றார்கள். நம்மிடம் இருந்த பசுக்களின் தொகை நாடோறும் குறைந்து கொண்டே வருகின்றது. அவர்கள் ஆக்கிரமித்து நாடோறும் சில பசுக்களையாவது வழி மறித்துக் கட்டிக் கொள்ளுகிறார்கள். நமது பயிர்களை மாட்டை விட்டு மேய்க்கின்றார்கள். நம் ஆட்கள் அந்த மாடுகளை விரட்டினால், அவர்களை நையப் புடைக்கின்றார்கள். என்னையும் வலிய வம்புக்கு இழுக்க முயல்கிறார்கள். நான் ஒன்றுஞ் செய்யாமல் வாளா வந்துவிடுகின்றேன். நமக்கு உதவுவதற்கு யாருமில்லையே, என் செய்வது?

சாவித்திரி :—சம்பந்தா, நமக்குத் துன்பத்தின்மேல் துன்பம் வந்துகொண் டிருக்கின்றது. நாம் மங்களவாரமென, மங்கல வழக்கால் சொல்லப்பெறும், செவ்வாயன்று ஊரைவிட்டுப் புறப்பட்டோம். அன்றியும், இங்கு இவ் வீட்டில் இராகு காலத்தில் நுழைந்தோம். மானாமதுரையில் புறப்படும்போதே எண்ணெய்க் குடம் தலையில் வைத்துக்கொண்டு எண்ணெய் வணிகனொருவன் எதிரில் வந்தான். அந்த அபசகுனத்தைக் கவனியாமல் புறப்பட்டோம். சிறிது தூரம் வந்தபிறகு, அவ்வூர் எல்லையைக் கடக்குமளவில், ஒரு சாரைப் பாம்பு குறுக்கிட்டது. அதையும் பொருட் படுத்தாமல் நாம் வந்தோம். அத்தீச்சகுனங்கள் முன்னரே, பின்னர் விளைவனவற்றை யெடுத்துக் காட்டின. நாம் இவ் வீட்டிற்கு வருவதற்கு முன் உன் சுவீகாரத்தாய் என்னிடம் மரியாதையாக நடந்துகொண்டாள். "கிட்டப் போனால் முட்டப் பகை," என்பதுபோல, இங்கே வந்த பிறகு அவள் பகை ஏற்பட்டது. மனைவி சொல் தட்டாத என்னண்ணன் பகையும் ஏற்பட்டது. அவ் விருவர்களும் போன பிறகு தாயாதிகளின் கொடுமை தாங்க முடியவில்லையே. கால் வயிறு கஞ்சி குடித்தாலும் கலக்க மின்றிக் குடிப்பது மேல் என்பர்.

ராமாயி :—ஆச்சி, ஆச்சி, ஆராரோ—நமது வீட்டு வெளிமுற்றத்தில் ஒரு கூட்டத்தார்—மூங்கில் தடிகள், அரிவாள், கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களுடன் வந்திருக்கின்றனர். வந்ததும் என்னைப் பார்த்து "எங்கே சம்பந்தன்? எங்கே அவன் தாய்?" என்று கேட்டனர். நான் வெளியே நின்று சும்மா வீதியில் போகிற நமது கோயில் யானையைப் பார்த்துக்கொண்டு நின்றேன். இவர்களைக் கண்டதும் நடுநடுங்கிப்போய் உள்ளே வர

நினைத்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில், இப்படி இரண்டு கேள்விகள் ஒரு பெரியவர் கேட்டார். உள்ளேயோடி வந்துவிட்டேன்.

சாவித்திரி:—(பரபரப்புடன் வெளியே ஓடி வருகின்றாள். கூட்டத்தைப் பார்த்துத் திகைக்கிறாள். அக்கூட்டத்தில் தமையன் முறையுள்ள செல்வபதிச் செட்டியாரைப் பார்த்துவிடுகிறாள். உடனே, அவரைப் பார்த்து.) அண்ணா, நீங்கள் எதற்காக தினந்தோறும் எங்கள் வீட்டுப் பசுக்கள், ஆட்கள், விளைநிலங்கள் இவற்றைக் கவருகின்றீர்கள். என்மகன் சம்பந்தன் இக்குடிக்குப் பிள்ளை புகுந்த விஷயந் தெரியாதா? என் தமையனார் தனபதிச் செட்டியார், சகல சொத்துக்களையும் சம்பந்தனுக்கே ஊரார் அறிய பத்திரம் எழுதி வைத்திருப்பது தெரியாதா? மகன்மைகொள் விழாவில் இவ்வூர் மந்திரியார் முதலாக மற்றைய கணக்கர் ஈறாக அனைவரும் வந்து, எங்களைச் சிறப்பித்துச் சென்றிருக்கிறார்கள். நீங்கள் ஆண்டிலும், அறிவிலும், அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள். எங்களுக்கு ஏதேனும் விபத்து என்றால், நீங்கள் முற்பட்டு வந்து எங்களைக் காப்பாற்ற வேண்டி இருக்க "வேலியே பயிரை யழிப்பதுபோல," நீங்களே இவ்வாறு செய்பலாமா? இப்பொழுது எதற்காக அத்தனைபேர் ஆயுதங்களுடன் வந்திருக்கின்றனர்?

செல்வபதி:—சாவித்திரி, உன்னைக் குழந்தையிலிருந்து அறிவேன். உனக்கு நாக்கு நீளம். நாவடக்கம் கிடையாது. நீயொரு ஸ்திரி. உனக்கு இவ்வளவு பேச்சா? அதிகப் பேச்சுப் பேசாதே. தனபதி வீட்டுச் சொத்து கிரமமாக எனக்கும் என் பிள்ளைகட்குந்தான் வரவேண்டும். மானுமதுரையில் வாழ்க்கைப்பட்ட உனக்கு

இங்கே மதுரையில் ஆட்சியேது? தடாதகைப்பிராட்டி போல இவ்வூரையே ஆட்சி கொள்வாய்போல் இருக்கிறதே. உன் பேச்சுப் போதும்; உன் வாயை மூடு. உங்கள் வீட்டிற்கு மந்திரியார் வந்தால் எனக் கென்ன? மன்னரே வந்தால்தான் எனக்கென்ன? இங்குள்ள பாத்திரங்கள், நகைகள், எஞ்சியுள்ள மாடு கள், ஆட்கள், மளிகைக்கடை, கையிருப்புத் தொகை, எல்லாம் என்னைச் சேர்ந்தவை. மரியாதையாக இவற்றை யெல்லாம் என்னிடம் ஒப்படைக்க வேண்டும்.

சாவித்திரி:—அட பாவி! உன்னை என் தமையன் என்று எண்ணி, அண்ணா என்று கௌரவமாக அழைத்து நியாயஞ் சொன்னேனே. "நீதியாவன யாவையும் நினைக்கிலேன், நினைப்பவ ரொடுங்கூடேன்," என்ற வாதவூரடிகளின் வாக்குப்போல, உனக்கு நீதி யின்ன தென்றே தெரியாது. அதை யறிந்தவர் உறவும் உனக்கு இல்லை. ஆகவே, 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்,' என்ற கூட்டத்தைச் சார்ந்தவன் நீ. எங் களுக்கு இவ்வூரில் யாரும் துணையில்லை யென்று தகா தனபுரியவேண்டாம். ஆலவாய்ப்பெருமான் எம்போன் றவர்க்கருள் புரியக் காத்திருக்கிறான். "அரசு அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்," என்பது பொய்க்காது. ஆகவே இந்த அநீதி வேண்டாம். நெற்றி வியர்வை நிலத்தில் விழ, பாடுபட்டுத் தேடும் திரவி யமே நிற்காது போய்விடுகின்றது. இம்மாதிரி நீ கொள்ளையிட்டுப் பொருள் தேடுவதா நிற்கப்போகின் றது. மீண்டும் எங்கட்கேதான் வந்துசேரும். வீண்பழி கொள்ளாதே!

செல்வபதி :—சாவித்திரி, மிகக் கற்றறிந்தவள்போலப் பேசுகின்றாய். போதும் நிறுத்து. உன் வாயை யடக்கு. கூச்சல் போடாதே. என் தம்பி தனபதியின் சொத்து எனக்குத்தான் சொந்தம். அவன் புத்தி பேதத்தால் உன் மகனுக்கு எழுதி வைத்தால் அந்தப் பத்திரம் செல்லுமா? வாயை மூடிக்கொண்டு சும்மா இரு. நான் இங்குள்ள சொத்தனைத்தையும் எடுத்துச் சென்றே தீர்வேன்.

சாவித்திரி :—அட பாதகா! இங்குள்ள சொத்தனைத்தையும் கொள்ளை கொள்ளத் தீர்மானித்தா வந்திருக்கின்றாய்? இதே நகரத்தில்தான் கண்ணகியின் வழக்கு உரைக்கப்பட்டது. பாண்டியன் நெடுஞ் செழியன், —பாராளும் மன்னன்—கண்ணகிக்குத் தோற்றான். உண்மை வெல்லும்; அநீதி தோலும். வீண்பழிக்கு ஆளாகாதே. உள்ளே போகவொட்டேன்; திரும்பிப் போய்விடு.

சம்பந்தன் :—ஐயா, இதென்ன அநியாயம். இவ்வாறு செய்ய வேண்டாம். நாங்கள் அனாதைகளா யிருக்கிறோமென்று அநீதி புரியவேண்டாம். நீர் பெரியவர். வயசு அறுபதை யெட்டிப் பார்க்கிறது. செல்லுந் தேயத்திற்கு உறுதுணை தேடும். போன பிறவியில் நீர் செய்த பாவத்தால்தான் உன் பிள்ளைகளுள் ஒருவன் கண் குருடனாகவும், மற்றொருவன் கால் நொண்டியாகவும் பிறந்திருக்கின்றான். இன்னும் ஏன் அக்கிரமஞ் செய்கின்றீர்! இப்பொழுது வறுமையாளர் என்று நீர் இந்த அநீதி புரிந்தால் மீண்டும் வறியனாய்ப் பிறப்பீர். வேண்டாம். திரும்பிப்போம்.

செல்வபதி :—அடே சின்னப்பயலே, நீயும் உன் தாய்ப் பக்கம் சேர்ந்து பேசுகிறாயா? நான் எவ்வளவு வயசு உன்னைவிட மூத்தவன். பெரியவர் என்ற மரியாதை சிறிதும் இல்லாமல் பேசுகிறாய். வாயடக்கிக் கொண்டிரு.

சாவித்திரி :—அடா துரோகி, உனக்கு எவ்வளவு வயசானாலும் என்ன? உனக்கு நல்லறிவு கிடையாது. எங்கள் வீட்டில் கட்டிக் கிடக்கும் எருமைக் கடா உன்னைவிட வயசில் மூத்திருக்கின்றது. ஆகவே அது சொன்னபடி நடக்க வேண்டுமா?

செல்வபதி :—சாவித்திரி, உன் வாய்த் துடுக்கை அடக்கி விடுகின்றேன். (சாவித்திரியையும், சம்பந்தனையும் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, கோவிந்தசாமி என்பவனைப் பார்த்து) கோவிந்தா, உள்ளே புகுந்து எல்லாப் பொருள்களையும் கொண்டுவந்து வண்டிகளில் ஏற்றிக் கொண்டு புறப்படு.

(செல்வபதிச் செட்டியின் பின் வந்தவர்கள் வீட்டினுள் புகுந்து சொத்தனைத்தையும் எடுத்துக்கொண்டு போய் விடுகின்றனர். சாவித்திரி புலம்புகிறாள். சம்பந்தன் அழுகிறான். ஏன் என்று கேட்பார் யாருமில்லை.)

---

# அங்கம்—3

## முதற்களம்

இடம் :—ஆலவாய்ப் பெருமான் சந்நிதி

காலம் :—நள்ளிரவு

பாத்திரங்கள் :—சாவித்திரி, சம்பந்தன்

சாவித்திரி :—(சம்பந்தனைப் பக்கத்தே நிறுத்திக்கொண்டு) சொக்கநாதா, ஓலம்! ஓலம்! உலகிற்கே தந்தையும் தாயுமாகிய நீ எங்கட்குத் தாயும் தந்தையும் அல்லேயோ? என் மகனை என் தமையனார் எல்லாரும் காணச் சுவீகாரங் கொண்டார். அவர் தவமேற் கொண்டு வனம் சென்றபின், தாயத்தார் எங்கள் பொருள்கள் அனைத்தையும் பலாத்காரமாய் வௌவிச் சென்றார்கள்.

"ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேருங்
கருத்திலாச் சிறியன், வேறு களைகணுங் காணே னைய!
அருத்திசா லறவோர் தேறு மருட்பெருங் கடலே! யெங்கும்
இருத்திநீ யறியாய் கொல்லோ", எந்தையே!...

[திடீரென்று அடியற்ற மரம்போல் சொக்கநாதன் திருமுன் வீழ்கின்றாள் துக்கத்தாலும், களைப்பாலும். இறைவனருளால் சற்று அயர்ந்து நித்திரை செய்கையில், ஒருகனவு காண்கின்றாள். அதில் சொக்கநாதன் ஒரு வேதியர் வடிவத்தில் தோன்றுகிறார்.]

சொக்கநாதர் :—எம்மிடம் சரண் புகுந்த பக்தையே, கவலை வேண்டாம். பொழுது புலர்ந்த பின்னர், புரவலன். ஆணை கூறி, உன் பங்காளிகளை அறங் கூறவையத்தார்

முன் கொண்டுவந்து நிறுத்து. யாம் வந்து வழக்கைத் தீர்த்துத் தருகுதும். (சொக்கநாதர் மறைகின்றார்)

சாவித்திரி:—(விழித்துக்கொண்டு) என்னே! ஆச்சரியம்! ஆ! கெட்டேன். "அகதிக்குத் தெய்வமே கதி," என்னும் பழமொழியின் பொருளறிந்தேன். தெய்வமே, நீயே கதி! உன் ஆணைப்படி செய்கின்றேன்.

சம்பந்தன்:—என்னம்மா, சொக்கநாதருடன் பேசுகிறாய்? என்ன சொல்லுகிறார் அவர்?

சாவித்திரி:—மைந்தா, நமது பெருமான் நாளை வந்து நமது வழக்கைத் தீர்த்து விடுவதாகக் கனவிடைக் கூறிச் சென்றான். கருணையங் கடலாகிய பிரானை நீயும் வழுத்து. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்,' அன்றோ?

சம்பந்தன்:—

''அலந்தோர்க் கருளும் அப்பா போற்றி!
எனக் குருளைக் கருளினை போற்றி!
மானக் கயிலை மலையாய் போற்றி!
அருளிட வேண்டும் அம்மான் போற்றி!
'அஞ்சேல்' என்றிங் கருளாய் போற்றி!

சாவித்திரி:—சம்பந்தா, இத்திருவாசக அடிகளைத் தக்க சமயத்தில் கூறி வழிபடுகின்றாய். நிரம்ப சந்தோஷம். விடியுந் தருவாய் போலும்; கோழிகள் கூவின. சங்கொலி கேட்கின்றது; வா, வீட்டிற்குப் போவோம். காலையில் நம்முன் மிகக் கர்வமாய் நடந்துகொண்ட

ஞாதியர்களை அறங்கூறவையத்தார் முன் கொணர்ந்து நிறுத்துவோம்.

[இருவரும் வீட்டிற்குப் போய்ச் சேருகின்றனர்.]

---

## இரண்டாங்களம்

இடம் :—செல்வபதிச் செட்டியார் வீடு

காலம் :—காலை

பாத்திரங்கள் :—செல்வபதி, சாவித்திரி, சம்பந்தன்,
நீதியாளர், தனபதி செட்டியார்

செல்வபதி :—(தனக்குள்) என்னே ! ஒருநாளு மில்லாமல் எனது இடக்கண் துடிக்கின்றது. என்னுள்ளம் பதைக்கின்றது. நேற்றிரவு தீக்கனாக் கண்டேன். அறங்கூறவையத்தார் முன் போவது போலவும், அங்கு ஒரு பெண்ணின் வழக்கு விசாரிக்கப்பட்டு, அவள் வென்று விடுவது போலவும் அக்கனவிடைத் தோன்றிற்று. ஒருவேளை சாவித்திரி வழக்குத் தொடுக்கிறாளோ? தெரியவில்லையே. ஆம். அதோ அவள் குரல் கேட்கிறது.

[வெளியே வருகிறான்]

சாவித்திரி :—அடே அநீதியாள, அரசன்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன், கேள். என்னவோ நேற்று பலாத்காரமாய் என் பொருள்களெல்லாம் எடுத்து வந்து விட்டதாக எண்ணி இறுமாப்படைய வேண்டாம். நீதிஸ்தலத்துக்கு வா. என் வழக்குரையை நீயும் கேட்பாயாக. அங்குள்ளவர்களும் கேட்கட்டும். அடுப்பில் நெருப்பு மூட்டாதே; ஓரடி கூட அப்பால் போகாதே; பொய் வழக்கால் நீ வென்று போகவிடேன். புறப்படு;

சீக்கிரம். எனது வழக்கைத் தீர்த்தாலொழிய, உன்னை யும் உன் வீட்டிலுள்ளாரையும் ஒரு தொழில் செய்ய வும், உண்ணவும் விடேன். அரசன் மேல் ஆணையாகச் சொல்லுகின்றேன்.

செல்வபதி :—போ, போ, சனியே; காலையில் எங்கிருந்து வந்தாய். நேற்றுப் பட்டதை மறந்துவிட்டு இன்றும் வந்து வழக்காடுகின்றாய். இதோ உன்னையும் உன் மைந்தனையும் நையப்புடைக்கின்றேன் பார்.

[பிடித்துத்தள்ளி உதைக்கின்றான்.]

சாவித்திரி :—[அழுதுகொண்டே அறங்கூறவையத்தார் முன் சென்று] நீதியாளர்களே, செல்வபதிச் செட்டி, எங்கள் சொத்துக்களைப் பறித்துக்கொண்டதல்லாமல், என்னையும் என் பிள்ளையையும், அநியாயமாய் அடித்துத் துன்புறுத்தினான்; இது நியாயமா? நீங்கள் கேளுங்கள். அவன் வலியோன், மூர்க்கன்.

நீதியாளர் :—அம்மா, உன் புலம்பலொலி கேட்டோம். உனது வழக்கை விசாரிக்கின்றோம். நீ இந்தச் சேவகர் களுடன் சென்று செல்வபதியைக் கூட்டிக்கொண்டு வா; தைரியமாய்ச் செல். அவன் இனி யுன்னைத்தொட மாட்டான். அடித்தால் அவனை நையப்புடைக்க இச் சேவகர்களுக்கு உத்தரவிட்டுள்ளோம். கவலற்க. அஞ் சாதே; போய்வா.

சாவித்திரி :—[சேவகர்களுடன் செல்வபதியிடம் சென்று] ஏ மூர்க்கனே, உடனே புறப்பட்டு நீதிஸ்தலத்திற்கு வா. உன்னை அழைத்துவரச் சொல்லுகின்றனர் நீதி யாளர். செல்வபதி யென்னும் உன் பெயரை மாற்று

வித்து, அல்லல்பதி யென்றும், தரித்திரபதி யென்றும் ஊரார் இகழுமாறு செய்கின்றேன் பார். யாருமில்லை யென்று அடித்து விட்டாய்? சீக்கிரம் புறப்படு.

செல்வபதி :—போ. இதோ வருகின்றேன்.

[செல்வபதி, சாவித்திரி, சம்பந்தன் நீதி சபையில் நிற்கின்றனர்.]

நீதியாளர் :—ஏ செல்வபதி, நீ ஏன் நேற்று மாலை தனபதி செட்டியார் வீட்டிற்கு ஒரு கொள்ளைக் கூட்டத்தாரோடு சென்று கொள்ளை யடித்தாய்? பெண்கள் அபலைகள் எனப்படுவார்கள். அப்படிப்பட்டவர்களிடந் தான் உன் வீரத்தைக் காட்டுவதோ? உன்னைப் போன்ற ஆண்மகனிடம் உனது வலியைக் காட்டினால் நீ வீரன்தான். அழுவதைத் தவிர வேறொன்றும் அறியாத அரிவையையும், அவள் மகன் சிறுவனையும் அடித்தல் அழகோ?

[அந்தச் சந்தர்ப்பத்தில் சொக்கநாதர், தனபதி வடிவு கொண்டு, வாடிய முகத்துடன் அங்கு வந்து தோன்றுகிறார். தாயத்தார் அஞ்சுகின்றார்.]

தனபதி செட்டியார் :—என்னே அநீதி! இந்நகரில் அரசன் இல்லையோ? பெரியோர்கள் இல்லையோ? சுந்தரபாத சேகரபாண்டியன் செங்கோல் கொடுங்கோல் ஆயிற்றோ? வேதப்பொருளாய் விளங்கும் விமலனும் கோயிலை விட்டு வெளியே போய்விட்டானோ? தருமதேவதை மதுரையினின்றும் வெளிப்போந்தனளோ?

சாவித்திரி :—(காலில் வீழ்ந்து) அண்ணா, அபயம்! அபயம்! சமய சஞ்சீவியாய் வந்து சேர்ந்தீர். உங்கட்கு இவ் வழக்கு எப்படித் தெரிந்தது?

தனபதி செட்டியார்:—சாவித்திரி, நான் மதுரைக்குத் திரும்பிவந்துகொண்டிருந்தேன். வழியில் நம் பக்கத்து வீட்டு நமச்சிவாயச் செட்டியார் நடந்ததனைத்தும் கூறினர். உடனே ஓடோடியும் இங்கு வந்தேன்.

சம்பந்தன்:—(தனபதி செட்டியார் காலில் வீழ்ந்து அழுது கொண்டே) அப்பா, நான் பட்டபாடு கொஞ்சமல்ல. தாயாதிகள் எங்களைப் படாதபாடு படுத்திவிட்டார்கள்.

தனபதி செட்டியார்:—(காலில் விழுந்த சாவித்திரியையும், சம்பந்தனையும் தூக்கி எடுத்துச் சாமவேதம் ஆர்ப்பவர் போல் வாய்விட்டாற்றி அழுகின்றார். சம்பந்தனைப் பார்த்து) என்னே அநியாயம்! என் பிள்ளையின் அணிகளையுங் கவர்ந்துவிட்டாரன்றோ?

"ஐம்படை மார்பிற் காணேன்;
சிறுசிலம் படியிற் காணேன்;
மொய்ம்படை மதாணி காணேன்;
முகத்தசை சுட்டி காணேன்;
மின்படு குழைகள் காணேன்;
வெற்றுடல் கண்டே னப்பா!
என்பெறு மென்று பிள்ளைப்
பணிகளுங் கவர்ந்தா ரந்தோ!

[தங்கையையும் தனயனையும் கண்ணீரைத் துடைத்து, நீண்ட கையினால், அவர்கள் முகத்தைத் தடவி.]

சாவித்திரி, சம்பந்தா, நீங்களிருவரும் அஞ்சவேண்டா. வழக்கு என்னாகுமோ என்ற பயத்தை விட்டிடுங்கள்.

நான் வருவேன் என்பதைச் சிறிதும் எதிர்பாராத ஞாதியர் இனித் தோற்றுவிடுவது உறுதி.

நீதியாளர் :—தனபதி செட்டியாரே, நீர் ஊரில் இல்லாமையால், செல்வபதிச் செட்டி உம் தங்கைக்கும், தமயனுக்கும் மிகுந்த அநீதி புரிந்துவிட்டான். உமது சொத்து அறத்தாற்றில் வந்தது. ஆகவே நல்ல சந்தர்ப்பத்தில் நீரும் வந்து சேர்ந்தீர்.

தனபதி செட்டியார் :—நீதியாளர்களே, நீங்கள் கூறுவதனைத்தும் உண்மையே. நண்பர்களிடை வஞ்சம் புரிந்தும், நம்பினோரை மோசஞ்செய்தும், இரந்தவர்க் கிம்மி கூடக் கொடாதும், அளவிலா வட்டி வாங்கியும் சிலர் பொருள் தேடுதல் போலத் தேடப்பட்டதோ என் பொருள்? "பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை வழியஞ்ச லெஞ்ஞான்று மில்," என்ற திருக்குறள்படி, பழிக்குப் பயந்து, அறத்தாற்றில் தேடி, அதைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் முதலிய அனைவருக்கும் பகுத்துக் கொடுத்து ஈட்டிய எனது பொருள் அழியுங் கொல்லோ? ஏ! மதுரைச் சொக்கநாதா! எங்குல வணிகர் ஏறே! எங்கள் வழக்கை இந்த நீதியாளர் மூலம் தீர்த்துத் தருக!

நீதியாளர் :—தனபதி செட்டியாரே, நீர் கவலற்க. நாங்கள் இருவர்தம் வழக்கையும் எழுதரங் கேட்டு, ஆவன புரிகின்றோம்.

தனபதி செட்டியார் :—நீதியாளர்களே, இதோ நிற்கும் செல்வபதி மிகக் கொடியன். யானிங்கு இருந்தவரை மிக பயந்து கொண்டிருந்தான். நான் காட்டிற்குப் போன பிறகு வல்லான் வகுத்ததே சட்டம் என்றெண்ணி

என் தங்கை சாவித்திரியையும், மகன் சம்பந்தனையும் துன்புறுத்தியுள்ளான். என்னைக் கண்டதும், ஆந்தை போல் விழிக்கிறான். அவன் அஞ்சுகின்றான் என்று நினைக்காதீர்கள். நீங்கள் அற நூல்கள் நன்கு பயின்றவர்கள். உங்கட்கு அதிகம் கூறத் தேவையில்லை. ஒரே ஒரு குறளை மாத்திரம் நினைவூட்டுகின்றேன். "சமன் செய்து சீர் தூக்குங்கோல் போலமைந் தொருபாற் கோடாமை சான்றோர்க் கணி," என்பதே அக் குறள். இதற்குப் பொருள் கூற வேண்டா. இதை மனதில் வைத்துக்கொண்டு தீர்ப்பளியுங்கள்.

நீதியாளர்:—செல்வபதி செட்டி, நீ என்ன சொல்லுகிறாய்? நமது சைவ மதச் சட்ட புத்தகத்திலுள்ள முந்நூற்றிரண்டாம் பிரிவுப்படி பகற் கொள்ளைக் குற்றமும், இருநூறும் பிரிவுப்படி ஒரு பெண்ணை அடித்த குற்றமும், நாற்றைம்பதாம் பிரிவுப்படி சிறு பையனை யடித்த குற்றமும் நீ புரிந்திருக்கிறாய். இம் மூன்று குற்றங்கள் புரிந்ததுண்டா? என்ன சொல்கிறாய்?

செல்வபதி:—நீதியாளர்களே, யான் எவ்வளவு கௌரவம் பொருந்தியவன்! கொள்ளை யடிக்கப் போவேனா? கேவலம் வலிமையற்ற பெண்ணையும், சிறுபையனையும் அடிப்பேனா? சாவித்திரியம்மாள் கூறுவதெல்லாம் சுத்தப் பொய். மேலும், நான் மேற்கூறப்பட்ட முக் குற்றங்கள் புரிந்தேன் என்பதற்குச் சாட்சிகள் உண்டா?

நீதியாளர்:—[சாவித்திரியைப் பார்த்து] ஏ சாவித்திரியம்மா, உன் தரப்பில் சாட்சிகள் யார் யார்?

சாவித்திரி :—ஐயன்மீர், என் வீட்டு வேலைக்காரி ராமாயி ஒரு சாட்சி. அண்டைவீட்டு அகிலாண்டம்மாள் மற்றொரு சாட்சி. எதிர்த்த வீட்டு மீனாட்சி இன்னொரு சாட்சி. இம் மூவரும் இதோ வந்திருக்கின்றனர்.

நீதியாளர் :—சாவித்திரியம்மா, நீ கூறும் மூவரில் ஒருத்தி உன் வேலைக்காரி. அவள் சான்று ஏற்புடைத்தன்று. அண்டை வீட்டு அகிலாண்டம்மாளை விசாரிப்போம். [சேவகனைப் பார்த்து] அகிலாண்டம்மாள் என்னும் சாட்சியைக் கூப்பிடு.

சேவகன் குப்புராவ் :—அகிலாண்டத்தம்மாள், அகிலாண்டத்தம்மாள், அகிலாண்டத்தம்மாள்.

அகிலாண்டம் :—ஆஜர், இதோ இருக்கிறேன்.

நீதியாளர் :—[அகிலாண்டம்மாளைப் பார்த்து] நீ இந்த சாட்சிக் கூட்டில் ஏறி நில். [அகிலாண்டம்மாள் அவ்வாறே ஏறி நிற்கிறாள்.] "நான் சொல்லுவதனைத்தும் உண்மை," என்று இப் பெரியபுராணத்தைக் கையில் பிடித்துக்கொண்டு உறுதி கூறு. [அவள் அப்படியே செய்கின்றாள்.] ஏனம்மா இந்த வழக்கில் உனக்கென்ன தெரியும்? ஒளிக்காமற் சொல்லு.

அகிலாண்டம் :—ஐயா, நான் ஒன்றும் ஒளிக்காமல் கூறுகின்றேன், கேளுங்கள். செல்வபதிச் செட்டி ஒரு கூட்டத்தோடு, புதன்கிழமை சாயங்காலம், சாவித்திரியம்மா வீட்டிற்கு வந்து, எல்லாச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு போனார். நான் கண்களால் பார்த்தேன். சொஞ்ச நேரத்திற்கு அப்பால் அந்த வீட்டில் அழுகுரல் கேட்டது. ஓடிப்போய்ப் பார்த்தேன்.